உ

குன்றக்குடி

அருள்தரு சண்முகநாதப் பெருமான் கலம்பகம்

ஆசிரியர்
மகான் - வண்ணச்சரபம்
அருட்டிரு. தண்டபாணி சுவாமிகள்

உரைவிளக்கம்
குன்றக்குடி ஆதீனப் புலவர்.
தமிழாகரர்.
சைவத்தமிழ்மணி. சைவத்தமிழ் அறிஞர். சித்தாந்தச் செல்வர்.
வித்துவான். க. கதிரேசன் எம். ஏ; பி.எட்;
பூவாளூர் - 621 712.

தோரணவாயில்

முருகப்பெருமானைச் சேயோன் என்றும், அவனுக்குரிய நிலமாகக் குறிஞ்சியையும் " சேயோன் மேய மைவரை உலகமும் " என்ற அடியின் மூலம் குறிப்பிடுவார் தொல்காப்பியர். முருகனுக்குரிய நிலமாகிய மலைகள் அனைத்தையும் உள்ளடக்கி, ஆறுபடைவீடுகளாக நமக்குத் திருமுருகாற்றுப் படையின் மூலம் காட்டுகிறார் நக்கீரர். அவை ஆறும், திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல்,பழமுதிர் சோலை. என்பன. பிறவனைத்தும் ஒவ்வொரு தலத்தையே குறிக்க, ஐந்தாவது படைவீடான குன்றுதோறாடல் மட்டும் முருகன் எழுந்தருளியுள்ள குன்றுகள் அனைத்தையும் குறிக்கும். குன்றுதோராடல் தலங்களுள் குறிப்பிடத்தக்கது குன்றக்குடித் திருத்தலமாகும்.

இங்குக் குன்றினைச்சூழ்ந்து குடிஇருப்புகள் உள்ளமையால் வந்த காரணப்பெயர் இது. மலைமேல் ஏறும்படிகள் மயிலின் தோகையாக, பெருமான் எழுந்தருளியுள்ள தளம் அதன் முதுகாக, திருஉண்ணாழிக் கோபுரம் அதன் தலையாக, கோபுரக்கலசம் அதன் கொண்டையாக மயில் வடிவில் மலைஅமைந்துள்ளதால் இம்மலைக்கு மயில்மலை, மயூரகிரி என்றும் பெயர். மலையின் மயில்போன்ற காட்சியை, இதன் வாயிலுக்கு எதிரே உள்ள சாலி என்ற ஊருக்குச் செல்லும் சாலையில், கிழக்குநோக்கி ஒருகல்தூரம் சென்று திரும்பிப்பார்த்தால் காணலாம்.

மலைமேல் இச்சா சத்தியாம் அருள்தரு வள்ளிநாயகியும், கிரியா சத்தியாம் அருள்தரு தெய்வயானை அம்மையும் தன்னிருபுறத்தும் தனித்தனி மயிலில் இருக்க, பெருமான் ஒருமயில்மேல் ஞானசத்தியாம் வேலுடன் நமக்குஅருள்புரியப் புன்முறுவலுடன் காத்திருக்கின்றான். இக்காட்சி, குசேலோபாக்கியானத்தில் தன்னைக்காண அரண்மனைவாயிலுக்கு வந்த குசேலர், தன்எதிர்வரும்வரை அரியணையில் ஆவல்ததும்ப எதிர்நோக்கி இருந்த கண்ணபிரான் நிலையை நினைவூட்டும். அப்பகுதி;

" ஈங்(கு)இவன் இவ்வா(று) எய்த
இன்னம்வந்(து) எய்திலன்என்(று) ஐயன்
பூங்கதிர் வரவு பார்க்கும்
பொற்றபுண் டரிகம் போலும்
தீங்கதிர் வரவு பார்க்கும்
செவ்வரக் காம்பல் போலும்
ஓங்குமை வரவு பார்க்கும்
ஒண்தழை மஞ்ஞை போலும்

" பொருந்துதாய் வரவு பார்க்கும்
புனிற்றிளங் கன்று போன்றும்
திருந்துதன் வரவு பார்க்கும்
செம்மனத்(து) ஒருவன் போலும்
அருந்துநீர் வரவு பார்க்கும்
அறநசை உடையான் போலும்
கருந்துழாய்க் கண்ணி அண்ணல்
கமழ்நறுஞ் சேக்கை மீதே" (202)

வளர்மறை உணர்ச்சி மிக்கான்
வரவுபார்த் திருப்ப " (203)

என்பதாகும்.

திருவருள் கொழிக்கும் குன்றக்குடிப் பெருமானின் பேரருளை; மயூரகிரி புராணம் முதலாக, கலம்பகங்கள்- 2, கோவை, சிலேடை வெண்பா நூல், கோவை, அந்தாதி, திரிபு அந்தாதி, பிள்ளைத்தமிழ், போற்றிமடக்குப் பதிகம், உலா- 2, அருணகிரியார் திருப்புகழ், வண்ணச்சரபரின் திருப்புகழ்ப் பதிகம் மாலை, வண்ணம், வகுப்பு, மற்றும் மிகப்பலபதிகங்கள் என்று 55 க்கு மேற்பட்ட நூல்கள் பத்திச்சுவையும், இலக்கியச்சுவையும் பொதிந்தனவாய் உள்ளன.

இவற்றில் வண்ணச்சரபர் அருளியன, அருள்தரு குன்றக்குடி முருகப் பெருமான் கலம்பகம், கலவிமகிழ்தல் (பேரின்பத்துறை) வண்ணம் குழிப்பு, திருப்புகழ்ப் பதிகம், ஆறு வகுப்பு, மூன்று பதிகள் ஆகியன வாகும்.இவற்றுள் பாயிரங்கள்- 5, நூல் 100, நூற்பயன்- 1 ஆகநூற்று ஆறு செய்யுள்கள் கொண்டது கலம்பகம். குன்றுதோறாடல் தலங்களுள் குன்றக்குடியின் தலைமையையும் சிறப்பையும்; குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமான் பிரபந்தத்திரட்டில்;

" குன்றுதோ றாடலின் முந்திய குன்றக்குடி வேள் "
(கலம்பகம்.பாயிரம்)
" குன்றதோ றாடலின் உயர்ந்ததெனப்பெரியோர் விளம்பு குன்றக்குடி
(கலம்பகம்.5)
" குன்றுளுயர் கோலாகலம் பொருந்து குன்றக்குடி "(கலம்பகம். 33)
" குன்றாஅருள்விளங்கும் குன்றக்குடி " (குன்றக்கு. பதிகம். காப்பு)
" குன்றுதோ றாடலின் முந்திய தாகிய குன்றக்குடி " (பதி. 2.)
" குன்றிலுயர் குன்றக்குடிக் குமரன் " (சர்வ சாதனக்காரன் வகுப்பு.
ஈற்று வெண்பா)

என்று பலவாறு போற்றுகிறார்.

திரட்டிலுள்ள கலம்பகத்தில், பாயிரம்- 5, நூல்- 100, நூற்பயன்- 1 ஆகச் செய்யுட்கள் 106 ஐயும் திருவருள் துணையுடன் இன்றைய காலநிலைக்கு ஏற்றவாறு சந்திபிரித்து, குறிப்புரை, பொழிப்புரை, விளக்க மேற்கோள், தேவைப்படின்கொண்டுகூட்டு என்று அமைத்துக்கொண்டு எழுதி நூலினை நிறைவு செய்துள்ளேன். படித்துச் சுவைத்து இன்புற்றுப் பெருமக்கள் அனைவரும் குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமான் அருள்பெறக் கேட்டுக்கொள்கிறேன்.

பணிவன்புள்ள
க. கதிரேசன்.
குன்றக்குடிஆதீனப்புலவர்
பூவாளூர் 621 712.
அலைபேசி : 098651 93754

****

உ

மகான் - வண்ணச்சரபம்

அருட்டிரு தண்டபாணி சுவாமிகள்

வரலாறு

******

குன்றுதோறாடி அருள்வழங்கும் முருகப்பெருமானைப் போற்றிப் பரவிய அடியார்களுள் குறிப்பிடத்தக்கவர் மகான் - வண்ணச்சரபர் அருட்டிரு தண்டபாணி சுவாமிகள். இவர் பாண்டியநாட்டுத் திருநெல்வேலியில் சைவ வேளாண்மரபில் செந்தில்நாயகம் பிள்ளை பேச்சுமுத்தம்மாள் இணையர்க்கு 28 - 01 - 1839 இல் தோன்றினார். கருவில் திருவுடைய சீத்தாராமையர் என்ற சான்றோரிடம், விநாயகர், மகாலெட்சுமி மந்திரங்கள் அறிந்ததுடன் சரவணபவ என்ற திருவாறெழுத்து உபதேசமும் பெற்று,. வேல் பூசையை இளமைமுதல் மிக்க ஈடுபாட்டுடன் தவறாமல் செய்துவந்தார் என்பதை,

“ வளவிலுள பாலரொடு பலவாறு விளையாடி
வருகின்ற நாளில் என்னை
வலியவந்(து) ஆட்கொண்டு வேலாயு தப்பூசை
வாஞ்சைக்க டற்குள் விட்டு

குளம்விரவு பாலன்ன மதுரத்த மிழ்க்கவிதை
கொழிக்கும் நலம் உதவி ....."

என்று இவரே தமது நூலிற்குறிப்பிடுகிறார்.

வண்ணம் என்ற சந்தப்பாடல்களை யாதொரு தடையுமின்றி இவர் பாடியதால் **வண்ணச்சரம்** என்றும், திருப்புகழ் ஒத்த அரியசந்தப்பாடல்களை இவர் எளிதில் பாடியதால் **திருப்புகழ்ச் சுவாமிகள்** என்றும், முருகனுக்கு அடிமைப்பட்டு வாழ்ந்ததால் **முருகதாச சுவாமிகள்** என்றும், எப்போதும் இடைக்கச்சையொடு கோவணம் தரித்து, கையில் தண்டாயுதம் பிடித்து, உடல் முழுதும் திருநீறு பூசி, கழுத்திலிருந்து மார்பில் தொங்குமாறு உருத்திராக்கம் அணிந்து அருள்தரு தண்டாயுதபாணி போல் விளங்கியதால் **தண்டபாணி சுவாமிகள்** என்றும் மக்களால் சுட்டப்பெற்ற இவரது **இயற்பெயர் சங்கரலிங்கம்** என்பதாகும்.

முருகப்பெருமான் இவர்க்குஅருளிய சர்வசாதாரணி என்ற எழுத்தாணி மூலம் பனைஓலைச் சுவடியில் இலட்சம் தமிழ்ப்பாடல்களைப் பலவிதநூல்களாக எழுதியருளினார்கள். இதனை;

" மும்மணிக் கோவைபல மாலைபல அந்தாதி
மூவகைபல இன்னவா
முதுநெறிப் பனுவல்பல புதுநெறிப் பனுவல்பல
முத்தமிழ்ச் சுவைவ ழாமல்
இம்மணிப் புலவர்பலர் மகிழ்வுற மொழிந்துளேன்
இப்போதும் நுவல்கிறேன்
இன்னமும் பகருவேன்..... "

என்றுகூறுகிறார். இவர் முருகன் மேல் கொண்ட ஊடல்கரணமாகவும், வைராக்கியம் காரணமாகவும் அனலிலும் புனலிலும் எறிந்த மிகப்பலபோக எஞ்சியுள்ளபாடல்கள் ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்டனவாகும்.

சமயவேறுபாடுகளைக் கருதாத பெருநெறியினராதலின், முருகப்பெருமானைப் பற்றிமட்டுமன்றி, சிவபிரான், திருமாலாகியவர்களையும் போற்றி, திருவாயிரம், ஏழாயிரப் பிரபந்தம் என்று பலவாறு அருளியுள்ளார். திருவாமாத்தூர்த் தலபுராணம், அருணகிரியார் புராணம் ஆகியனவும், அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம், வண்ணத்தியல்பு ஆகிய இலக்கணநூல்கள், கௌமார முறைமை, தியானானுபூதி ஆகிய சாத்திர நூல்களையும், நீதியுரைக்கும் மநுநெறி நூல்,கீர்த்தனைப்பாடல்கள் என்று இவர் தமிழுக்களித்த புலமைக்கொடை மிகப்பெரிது. " எக்கடவுட்கு எவர் உரிமைபூண்டுற்றாலும் எனக்கு அது சம்மதம், முடிவில் ஏகந்தானே " என்று கூறும் இவர் அவ்வாறே வாழ்ந்தும்காட்டியவர்.

இவரது வழிபடுதெய்வம் முருகப்பிரான். இவனது திருவுருவை நேரில்கண்டு அனுபவிக்கவிரும்பி, திருநெல்வேலிக்கு அருகிலுள்ள திருமலை சென்று, மலைஏறி அவன் திருமுன்சென்று பலவாறு வேண்டியும் அவன் அருட்காட்சி வழங்காமையால் ஊடல்கொண்டு மலையிலிருந்து உருண்டார்.

அப்போது பெருமான் , இவர் உடம்பில் சேதம்ஏதும் ஏற்படாதவாறு தன்கரத்தால் தாங்கி ஆட்கொண்டான்.

சென்னை, புதுவை, வேலூர் போன்ற இடங்களில் வலிய உண்டான விவாதங்களில் வென்றார், வடலூர் இராமலிங்க அடிகளாரைப் பலமுறை கண்டு கலந்துபேசி இன்புற்றார். இதனை இவர்;

" கூட லூரில் ஒருமனையில் குலவும் வடலூ ரனைக்கண்டு
பாடல் மதுரம் கலந்துஅருந்தி " என்றும்;

" எள்ளளவும் பேதமின்றி என்கருத்தே எடுத்துச் சொன்னான் " என்றும் தன்நூலில் குறிப்பிடுகிறார்.

இவரிடம் முருகன் " நீ அருணகிரிநாதர் அமிசம் " என்று கூறியதை;

" ஏரார் கவிபாடும் என்னைக் கிளிஎன்று
ஓராயிரம் உண்மை உரைத்தனனே "
" அன்றுது யின்றிடும் வேளையில் வந்தெனை
அருணைக் கிளிதான் நீ
என்றுப கர்ந்தனை " (குன்றக்குடிப் பதிகம். 2 பா 5.)

என்று குறிப்பிடுகிறார்.

இவரது பெருந்தவம், அளப்பரும் தமிழ்ப்பற்று, அரிய சந்த இலக்கணப்புலமை காரணமாக, இவரிடம் பாடம் கேட்டுச் சிறப்புற்றோர் பலராவர். மற்றும் சிலர் இவரைத் தம்குருவாக ஏற்று உபதேசம் பெற்றனர். பற்பல தலங்கள் சென்று வழிபட்ட இவர் இறுதியில், விழுப்புரதினருகில் உள்ளதும், நடுநாட்டுச் சிவதலங்களுள் ஒன்றானதுமாகிய திருவாமாத்தூரில் எல்லைதாண்டா விரதம்பூண்டு தங்கித் தவம்புரிந்து 05 - 07 -1898 இல் ஞானசமாதி கொண்டார். இவரது சமாதித்திருக்கோயிலில், கௌமார மடாலயம், ஏட்டுச்சுவடி ஆகியவற்றை அன்பர்கள் பலரின் ஆதரவுடன் சுவாமிகளின் பரம்பரையினர் பேணிப்பாதுகாத்து வருகின்றனர்.

சுவாமிகளின் புகழும், நூற்கருத்துகளும் திருவருளால் நாடெங்கும் மேன்மேலும் பரவும் என்பது உறுதி.

திருச்சிற்றம்பலம்

உ

மகான் - வண்ணச்சரபம்
அருட்டிரு. தண்டபாணி சுவாமிகள்
அருளிய

குன்றக்குடி
அருள்தரு சண்முகநாதப் பெருமான் கலம்பகம்.

****

பாயிரம்

காப்பு - வெண்பா

நன்றான செந்தமிழ்தேர் நாவலர் போற்றுவண்மை
குன்றாத குன்றக் குடித்தலத்தில் - நின்(று)ஆடும்
காலான் அணியும் கலம்பகத்தைக் காப்ப(து)அவன்
வேலான தும்மயிலு மே.

குறிப்புரை : வண்மை= புகழ் / வளம். நின்று ஆடும்= நிலைத்த வெற்றிக்குரிய.. காலான்= திருவடியினன்.

பொழிப்புரை : மிக்க நன்மைவடிவான செந்தமிழில் தேர்ந்த புலவர்கள் போற்றுகிற புகழ் / வளம் குன்றாத குன்றக்குடித் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முகநாதப் பெருமானின் நிலையான வெற்றிக்குரிய திருவடிகளில் அணியும் இக்கலம்பகத்தைக் காப்பது அவனது வேலும், மயிலுமேயாகும்.

விளக்கம் : வடமொழியில் உள்ளதுபோல், வேள்வி மந்திரங்களால் பிறரைக் கொல்லும் அபிசார வேள்வியும், மந்திரங்களும் இல்லாததும்; இறந்துபட்ட வணிகனை எழுப்பித்தந்ததும், குடத்து நீற்றினைப் பூம்பாவை ஆக்கியதும், பாம்புதீண்ட இறந்த மூத்ததிருநாவுக்கரசை உயிர்ப்பித்ததும், முதலையுண்ட பாலனை வரச்செய்ததும் ஆகிய செயற்கருஞ் செயல்கள் செய்ததும் நம்தமிழ்.; நம் உள்ளங்கையைப் பெண்பால் என்றும் அதிலுள்ள விரல்களை ஆண்பால் என்றும் வகுக்கும் வடமொழிபோலன்றிச் சீரிய

இலக்கண, இலக்கியக் கூறுகளுடையதும் தமிழாதலின் தமிழுக்கு" நன்றான "என்றும் " செம்மை " என்றும் இரண்டு அடைமொழிகள் தந்தார். (1)

கட்டளைக்கலித்துறை

மயிலாடு சோலைஅம் குன்றக்குடியில் வந்துவந்து
கயிலாய நாதனும் கைதொழும் கந்தன் கலம்பகத்தைக்
குயிலாகத் தோன்றும் குறத்தியும் கோமளக் குஞ்சரியும்
அயிலான பேரருட் கண்கொண்டு காப்ப(து)உண்டு அம்புவியே.

குறிப்புரை : கைலாயநாதன்= சிவபிரான். கோமளம்= அழகு. அயில்= வேல். அம்புவியே= அழகிய உலகவரே.

பொழிப்புரை : அழகிய உலகத்தவரே ! மயில்கள் ஆடுகின்ற சோலைகளையுடைய குன்றக்குடிக்கு அடிக்கடிவந்து கயிலைமலையானான சிவபிரானும் கைகூப்பி வணங்கும் அருள்தரு சண்முகநாதப் பெருமானைப் போற்றும் இக்கலம்பகத்தை, குயிலாக விளங்கும்குறமகளாகிய வள்ளிநாயகி , அழகிய தெய்வயானையம்மை இருவரும் தங்களின் வேலாகிய மிக்க அருள் பொழியும்கண்களால் காத்தருள்வர்.

இலக்கணக்குறிப்பு : வந்து வந்து - அடுக்குத்தொடர். நாதனும் உம்மை உயர்வுசிறப்பும்மை. குறத்தியும் குஞ்சரியும் - எண்ணும்மைகள். கொண்டு - மூன்றாம் வேற்றுமை சொல்லுருபு. புவி - இடவாகுபெயர். புவியே - ஏகாரம் அசைநிலை. (2)

அறுசீர்க் கழிநெடில்

சீலமிகும் உடலாதி மூன்றினையும் குருபரன்பால்
செலுத்து மேலோர்
பால்அணுகித் திருஅருட்சீர் உணர்ந்துசெழுந் தமிழ்மதுரம்
தேக்கு வோரே
காலமழை அனையசெங்கை யுடையகுன்றக் குடிக்குகவேள்
கலம்ப கத்தால்
சாலமகிழ் வுறுவரன்றோ தவளமலர்ப் பொகுட்டுறையும்
தைய லாளே.

குறிப்புரை : உடலாதி மூன்று= உடல் பொருள் ஆவி. மதுரம்= இனிமை. காலமழை அனைய= அளவின்றிப் பொழியும் பருவகாலமேகம். தவளமலர்ப் பொகுட்டு= வெண்டாமரை மலர்ப்பொகுட்டில். தையலாள்= கலைமகள்.

பொழிப்புரை : வெண்டாமரைமலரின் பொகுட்டில் வீற்றிருக்கும் கலைமகளே ! தனது உடல் பொருள் ஆவி மூன்றையும் சிவகுருவாகிய முருகப்பெருமான்மேல் செலுத்தும் நல்லொழுக்கம் மிக்க சான்றோரை அணுகி, திருவருளின் சிறப்பினை உணர்ந்து இனியதமிழ்ப் பாடல்களைத் மிகவும் தருகின்றவர்கள்தான் பருவகாலத்து மேகம்போல் அளவின்றி அருள்பொழியும் குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமான்மேல்

அமைந்த இக்கலம்பகத்தால் மிகவும் மகிழ்வர். எனவே எனக்குஅருள்க.

இலக்கணக்குறிப்பு : அன்றோ - அசைச்சொல். (3)

கலித்தாழிசை

குன்றுதோ றாடலின் முந்திய குன்றக் குடிவேள்மேல்
நன்(று)உத வும்தமிழ் கொண்டுக லம்பகம் நவில்கின்றேன்
மன்றுள்ந டம்புரி வோனும்ந றுந்தமிழ் மலையானும்
அன்றுபெ றும்பொருள் கண்(டு)உ ய ரும்பதம் அடைதற்கே.

குறிப்புரை : நன்று= நன்மை. மன்றுள் நடம்புரிவோன்= பொன்னம் பலவாணன் - சிவபிரான். தமிழ்மலையான்= பொதிகைமலை அகத்தியர். பெறும்பொருள்= பெற்ற ஓங்கார உபதேசம்.

பொழிப்புரை : அம்பலவாணனாகிய சிவபிரானும், பொதிகைமலை அகத்தியரும் முருகப்பெருமானிடம் பெற்ற ஓங்கார உபதேசத்தை, நான் பெற்று உயர்நிலையாகிய வீடுபேறு பெறுதற்காக, குன்றுதோறாடல் தலங்களுள் முதன்மையுடைய குன்றக்குடிஅருள்தரு சண்முகநாதப் பெருமான்மேல் நன்மையருளும் தமிழால் இக்கலம்பகத்தைக் கூறுகிறேன்.

விளக்கம் : திருவருட்பொழிவில் குன்றுதோறாடல் தலங்களுள் குன்றக்குடி முதன்மையுடையது என்பது இம்மகானின் அனுபவவாக்கு. (4)

சந்தக்கவி - எண்சீர்

தந்தத் தனத்தன தனதான தந்ததன
வஞ்சப் புலப்பகைவர் கெடமாறில் அன்புதவும்
வந்தித்து முத்திபெறும் அனுபூதி மிஞ்சவிடும்
நெஞ்சத் திரக்கமுறு கவுமாரர் நண்பருளும்
நிந்தித் திடத்துணியும் அவர்வேர் களைந்தொளிரும்
அஞ்(சு)அக் கரத்தில்நிதம் விளையாடு கின்றபரன்
அங்கைத் தலத்தில்உறு பிணைநாண் உறும்கணுமை
கொஞ்சக் களிக்கும்ஒரு சிறுபாலன் என்றும்வரு
குன்றக் குடிக்குள்வரு புகழ்தோய் கலம்பகமே.

குறிப்புரை: புலப்பகைவர்= சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐம்புலப்பகைவர்கள். அனுபூதி= தானே கண்டறிந்ததும் பிறர்க்குச் சொல்ல இயலாததுமான அறிவு - ஞானம். மிஞ்ச= மிகுதியாக. கவுமாரர்= முருகசமய அடியவர். அஞ்சு அக்கரம்= திருவைந்தெழுத்து. விளையாடும்= செயற்படும். பிணை= மான்.

பொழிப்புரை : திருவைந்தெழுத்தில் அமைந்து செயற்படுகின்ற சிவபிரானின் அழகிய கையில்உள்ள மான் நாணுமாறு மருட்சி பொருந்திய கண்களையுடைய உமையம்மை தன்னைக்கொஞ்ச, அதனால் களிக்கும்மிக்க இளையவனாகிய அருள்தரு சண்முகநாதப் பெருமானைப் போற்றும் புகழார் குன்றக்குடிக் கலம்பகமானது ; கூடஇருந்தே கேடுசூழும் வஞ்சனையான புலப் பகைவர் ஐவரின் ஆற்றல் கெட, பெருமான்மேல் என்றும் நிலைத்த அன்பு செலுத்த உதவும், அவனை வணங்கச்செய்வதன்மூலம் முத்திபெறுதற்குரிய ஞானத்தை மிகுவிக்கும், மனத்தில் இரக்கமுடைய முருகசமய அடியவரது நட்பைத்தரும், பழித்துக் கூறத்துணிகின்றவர்களை வேரோடு களையும்.

(இக்கலம்பகத்தைப் பயில்வதன் பயன் கூறினார்.)

நூல்

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

இவைஆறும் தரவு

நீர்கொண்ட சடையானும் நெடியோனும் நான்முகனும்
சீர்கொண்ட கனகநகர்த் தேவர்களும் முனிவோரும் (1)
காதலித்துப் புகழ்கூறிக் கரங்குவித்துப் பணிவதுகண்டு
ஆதரவின் அளவுதெரிந்து அருள்புரியச் சலியாமல் (2)
கோகனக மலர்முகத்தில் குறுநகைபூத்(து) இருமடவார்
பாகமுறச் செழுங்கலபப் பரிமீது பரிதிநிகர் (3)
திருமுடிகள் ஓராறும் செவியணிகள் ஈறாறும்
மருமலியும் கடம்(பு)அணியும் மார்பிடத்துப் பணிபலவும் (4)
கொற்றமிகு தனிவேலும் குலிசமுதற் படைபிறவும்
சுற்(று)அரைஞாண் முதலியவும் துணைமலர்த்தாள்அணிக்குவையும்
மிக்கொளிரப் பெருங்கருணை விழிபரப்பித் தவளநிறக்
குக்குடப்புள் கொடிஓங்கக் குலவுகுன்றக் குடிவேளே (6)

இவை ஆறும் தாழிசை

உன்அருளால் உன் அருமை உணர்ந்(து)உனக்கே தொழும்புசெய்யும்
என்அருமை உணராதார் இடத்தினும்போய் நயக்கின்றேன். (1)
ஓராறு நுதல்விழிஉண்(டு) உனக்கெனவும் தெரியார்பால்
சீராரும் தமிழ்க்கவிதைத் திறல்உரைத்துத் தளர்கின்றேன் . (2)
இகபரசா தனப்பேறே ஏற்றமெனத் துணியார்பால்
பகலிரவாய் அலைந்துநயம் பகர்ந்துபொருள் விழைகின்றேன். (3)
நீபமா லிகைப்பெயர்நூல் நியமத்தே நில்லாமல்
கோபம்ஆ தியபொருந்தக் குவலயத்தில் சுழல்கின்றேன். (4)
திசைகள்தொறும் வெண்ணீற்றுச் சிறப்புடையார் மிகுக்காமல்
தசைஅருந்தி உடல்வளர்ப்போர் சமயம்உறல் சகிக்கின்றேன் (5)
பேராசை எனும்பிணியால் பெருமையுடன் அருமையும்போய்
ஊராருக்(கு) ஆளாகி உனைமறந்து திரிகின்றேன் (6)

இவைநான்கும் அராகம்

இயமனும் வசம்அற இடிநிகர் மொழிபகர்
கயமுகன் மலையொடு கருகிட முடுகினை (1)
புயமிகும் அரிமுகன் வரைஉறழ் பலபல
புயமொடு தலைஅகல் புவியுற ஒருவினை (2)
அடலுறும் அவுணர்கள் அதிபதி உடல்மயில்
உடன்ஒரு குருகென ஒளிர்தர அருளினை (3)
கடவுளர் உறுதளை கவலையொ(டு) அறமுனம்
இடமிகு பொலநக ரினையினி(து) உதவினை (4)

இவைநான்கும் தாழிசை

ஈசனுக்கும் குறுமுனிக்கும் எழில்அருணைப் புலவனுக்கும்
பேசரிய பிரணவத்தின் பெரும்பொருளை அறிவித்தாய் (1)
கீரனுக்கும் குருகைநகர்க் கிழவனுக்கும் தளைநீக்கிச்
சாரமுறும் தமிழ்மாலை தரித்துமனம் மகிழ்வித்தாய் (2)
கச்சிநகர்ப் புலவனுக்கும் கவிப்பகழிக் கூத்தனுக்கும்
பச்சிலையின் திருநீறு பாலித்து முன்னின்றாய் (3)
பாலையன் முதலாய பலகோடி பத்தருக்கும்
மாலையம் அறக்களைந்துன் மலரடிக்கீழ் அமர்வித்தாய் (4)

இவைஇரண்டும் நாற்சீர் ஓரடி அம்போதரங்கம்

ஆறெழுத்(து) உரைப்பவர்க்கு அனைத்தும் ஆகிநின்று
ஊறெழுத்(து) அழிக்கும்ஓர் உருவும் ஆயினை (1)
போதமே உயர்வெனப் புகலும் மாதவர்
ஆதரத்(து) ஒளிவிடும் அருவும் ஆயினை (2)

இவைஇரண்டும் முச்சீர் ஓரடி அம்போதரங்கம்

பலபல மலையினும் நின்றனை
படி(று)உறும் அவுணரை வென்றனை (1)
இலகிய புனமிசை சென்றனை
எயினர்கள் தம(து)உயிர் கொன்றனை (2)

இவைநான்கும் இருசீர் ஓரடி அம்போதரங்கம்

விதியை ஒறுத்தனை வினையை அறுத்தனை (1)
சதியை வெறுத்தனை தருவை இறுத்தனை (2)
கடலை வடித்தனை கவிகள் படித்தனை (3)
நடலை முடித்தனை நடனம் நடித்தனை (4)
என ஆங்கு (இது தனிச்சொல்)

இ்ந்து நேரிசைஆசிரியச் சுரிதகம்

அணிமா முதலிய ஆய சித்தியும்
பிணிதீர் உடம்பில் பெருக்கநீ றணியும்
தொண்டர் கூட்டமும் துகளறு புலமை
அண்டர்போற் றிசைப்ப அணைதரு வாழ்வும்
மூவகைத் தாய முகிழ்மலர்ப் பூசனை
யாவரும் போற்ற இயற்று மாண்பும்
பொதிய மால்வரைப் புனிதர்தம் அவைப்பால்
விதிவழிச் சென்று மீளும் திறலும்
புணரி ஆதிய புனலொடு கனற்பால்
தணவரும் சுவைதோய் தமிழ்க்கவி அனைத்தும்
பழுதற ஆக்கிப் படியினர்க்(கு) உதவும்
விழுமிய புகழும் விரும்புவ பிறவும்
சிறியேன் பெறநீ திருவுருக் காட்டி
வெறிதோய் மலர்நேர் மென்பதம் புனைந்து

சமரச போதத் தன்மைமுற்(று) உணர்த்தி
அமல நெஞ்சகத்து அடியருட் கூட்டி
இறப்பொடு பிறப்பற இயங்கும்
சிறப்புறும் கதியில் சேர்த்(து)அளித்(து) அருளே.

தரவுகள் ஆறு : குறிப்புரை : நீர்= கங்கையாறு. சடையான்= சிவபிரான். கனகநகர்= தேவருலகம். அளவு= அவரவர் தகுதி. கோகனகம்= தாமரை. பாகம்= பக்கம். கலபப்பரி= மயிலாகிய குதிரை. மரு= நறுமணம். பணி= அணிகலன்கள். குலிசம்= வச்சிரப்படை. அணிக்குவை= மிக்க அணிகலன்கள். தவளநிறம்= வெண்ணிறம். குக்குடப்புள்= சேவல்ஆகியபறவை.

பொழிப்புரை: கங்கையைத்தாங்கிய சடையுடைய சிவபிரானும், திருமாலும், நான்முகனும் சிறப்புவாய்ந்த பிறதேவர்களும், முனிவர்களும் பேரன்புடன் புகழ்ந்துகூறிக் கைகூப்பி வணங்குவதைக் கண்டு, அவரவர் தகுதியின் அளவை எண்ணிப் புன்முறுவலுடன் சலிக்காமல் அருள்புரிய, தாமரைமலர் ஒத்த திருமுகமுடைய அருள்தரு வள்ளி தெய்வயானை அம்மையர் இருபுறமும் இருக்க, நீண்ட தோகையுடைய மயிலாகிய குதிரைமேல் , சூரியனை ஒத்த ஆறுதிருமுடிகளும், பன்னிருசெவிகளில் அணிகலன்களுடன், மணம்மிக்க கடம்பமலர்மாலை அணிந்த மார்பில் பல அணிகலன் அணிந்து, வெற்றிமிக்க ஒப்பற்ற வேலுடன் வச்சிராயுதம் முதலிய படைகள்பல தாங்கி, இடுப்பைச்சுற்றிய அரைஞாண்முதலியவற்றுடன், திருவடிகளில் மிக்க அணிகலன்கள் மிக்குஒளிர அணிந்து, எல்லையற்ற கருணைநோக்குடன், வெண்ணிறச் சேவற்பறவைக் கொடியை உயர்த்தி விளங்கும் குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமானே !

தாழிசைகள் ஆறு : குறிப்புரை : தொழும்பு= அடிமை. நயக்கின்றேன்= விரும்பிக்கேட்கின்றேன். நுதல்விழி=நெற்றிக்கண். தளர்கின்றேன்= மனவுறுதி இழக்கின்றேன். இகபரசாதனப் பேறு= இம்மை மறுமை இன்பம்தரும் செயல். ஏற்றம்= உயர்வுதருவது. நயம்= விரும்பத்தக்கன. நீபமாலிகை= ஒருநூலின்பெயர். திசை= இடம். நியமம்= தவம். மிகுக்காமல்= உயர்த்திக் கூறாமல். தசை அருந்தி உடல்வளர்ப்போர் சமயம்= புலால் உண்போர் சமயம். ஆளாகி= அடிமைப்பட்டு.

பொழிப்புரை : உனது அருமைப்பாட்டினை உன்னருளால் உணர்ந்து உனக்குமட்டுமே அடிமைப்பட்ட எனது அருமையை அறியாதவகளிடத்திலும் போய்ப் பொருள்விரும்பிக் கேட்கின்றேன். நீ சிவபெருமானேயாதலின் உனக்கும் நெற்றிக்கண்கள் ஆறுஉண்டு என்பதை அறியாதவரிடம் உன்னைப் பற்றிய சிறப்புவாய்ந்த கவிதைகளைச் சொல்லி மனவுறுதி இழக்கின்றேன். இம்மை மறுமை இன்பங்களைத் தரும் செயல்களே உயர்வுதருவது என்ற துணிவு இல்லாதவரிடம் பகலிரவாய் அலைந்து பொருளினை விரும்புகிறேன். நீபமாலிகை என்ற பெயருடைய நூல்கூறும் தவநிலையில் நில்லாமல் சினம் முதலியவற்றுடன் உலகில் சுற்றிவருகின்றேன். உடலிடந்தோறும் வெண்ணீறு அணியும் சிறப்புடையவர்களை உயர்த்திக்கூறாமல் புலால் உண்டு உடல் வளர்ப்போரின் சமயங்களைச் சார்வோரைச் சகித்துக்கொண்டுள்ளேன். பேராசைஎன்னும் நோய்காரணமாகப் பெருமை, அருமை இழந்து ஊரவர்க்கு

அடிமையாகி உன்னைமறந்து அலைகின்றேன்.

விளக்கம் : நுதல்விழிகள் : கந்தபுராணத்தை உட்கொண்டு முருகனை " எங்கள் சிவபெருமானே " என்பார் பாம்பன் சுவாமிகள். எனவே இவனுக்கும் நுதற்கண் உண்டு - " வன்னிசேர் நுதற்கண் ஆறுடை யோய்கதிர் வடிவேல் , மின்னுபூங் கரனே " - (பாம்பன் சுவாமிகள்: திருவலங்கல்திரட்டு. திருச்சோலைமலை. 3)

அராகங்கள் நான்கு : குறிப்புரை : இயமன்= எமன். வசம் அற= தன்னிலைகெட. கயமுகன்= யானைத்தலை அரக்கன் - கஜமுகாசுரன். மலை= கிரௌஞ்சமலை. கருகிட முடுகினை= அழியப் போரிட்டாய். அரிமுகன்= சிங்கமுகாசுரன். புவியுற= நிவத்தில் விழ. ஒருவினை= நீக்கினாய். அடல்= போர். அதிபதி= தலைவன். குருகு= பறவை - சேவல். தளை= கை கால் விலங்கு. இடமிகு= அகன்ற.பொலநகர்= தேவருலகம்.

பொழிப்புரை : எமதருமனும் தன்வசமிழக்க, இடிஒத்த குரலில் பேசும் கயமுகாசுரனும் அவனது கிரௌஞ்ச மலையும் அழியுமாறு போரிட்டாய். ஆயிரம் தலைகளும் ஈராயிரம் கைகளும் உடைய சிங்கமுகாசுரனின் மலைகள் ஒத்த தோள்கள் தலைகள் ஆகியன தரையில் வீழ நீக்கினாய். போரிட்ட அசுரர்களின் தலைவனாகிய சூரபத்மனின் உடல், மயிலும் சேவலுமாக ஆகுமாறு அருள்புரிந்தாய். இச்செயல்களால் பிறகடவுளர்களின் கைகால் விலங்குகளும், சிறைப்படு கவலையும் ஒழித்து, அவர்களது அகன்ற தேவருலகினை அவர்களுக்கு அளித்து இனிதுவாழ அருள்புரிந்தாய்.

இலக்கணக்குறிப்பு : இடிநிகர் மொழி, வரைஉழ் புயம் - விரிஉவமைகள். மயில் குருகு - உம்மைத் தொகை. பலபல - அடுக்குத்தொடர்.

நான்கு தாழிசைகள் : குறிப்புரை : அருணைப்புலவன்= அருணகிரி நாதர். பேசரிய பிரணவம்= கூறுதற்கரிய சிறப்புடைய ஓங்காரம். குருகைநகர்ப் புலவன்= முருகனைப்பாடமாட்டேன் என்று இருந்த ஆழ்வார் திருநகரி வைணவ அந்தணர். (இவருக்கு வெள்ளிவிலங்கிட்டுப் பாடுமாறு செய்த வரலாற்றை, இவரது " சிறைவிடு அந்தாதி ", விவரம் புலவர் புராணம் இருவைணவர் சருக்கத்தால் அறியலாம். பாலயன்= மயிலம் குருமுதல்வர். மால் ஐயம்= மயக்கமும் சந்தேகமும்.

பொழிப்புரை : சிவபெருமானுக்கும் அகத்தியர்க்கும் எழுச்சிமிக்க சந்தக்கவியாகிய அருணகிரிநாதருக்கும் கூறுதற்கரிய ஓங்காரமாகிய பொருளை உபதேசித்தாய். நற்கீரன், திருநகரி வைணவ அந்தணர் ஆகியோரது விலங்குகளை நீக்கி அவர்கள் சூட்டிய கருத்துவளமார்ந்த திருமாலைகளை அணிந்து மகிழ்வித்தாய். கச்சியப்ப சிவாசாரியர், பகழிக்கூத்தர் ஆகியோர்க்கு முன்னின்று பன்னீரிலையில் திருநீறளித்தாய். சிவஞான பாலய சுவாமிகள் முதலிய பக்தர்களுக்கு எழுந்த கருத்துமயக்கம், சந்தேகம் ஆகியவற்றை முழுவதுமாகக் களைந்து உன் மலரடிக்கீழ் அமரச்செய்தாய்.

நாற்சீர் ஓரடி அம்போதரங்கம் இரண்டு: குறிப்புரை: ஆறெழுத்து= முருகப்பெருமானுக்குரிய மந்திரமும், பெயரும் ஆகிய சரவணபவ. ஊறெழுத்து= தலையெழுத்து. போதம்= ஞானம். ஆதரம்= அன்பு.

பொழிப்புரை : சரவணவ என்று சொல்பவர் ஈடேற்றத்துக்குரிய அனைத்துமாய் விளங்கி அவர்களின் தலைஎழுத்தை அழிக்கும் திருவுருவும் கொண்டாய். ஞானமே உயர்ந்தது என்று கூறும் பெருந்தவத்தோர்க்கு, அவர்களின் அன்பில் ஒளிரும் அருவமாகவும் விளங்கினாய்.

முச்சீர் ஓரடி அம்போதரங்கம் இரண்டு : குறிப்புரை : விதி= பிரமன். ஒறுத்தனை= குட்டிச் சிறையிலிட்டாய். சதி= வஞ்சனை. தரு= சூரனாகிய மாமரம். இறுத்தனை= முறித்தாய். வடித்தனை= வற்றச்செய்தாய். கவிகள் படித்தனை= சங்கத்தலைமை தாங்கிக் கவிதைகள் படித்தாய். நடலை= துன்பம்.

பொழிப்புரை : நான்முகனைக் குட்டிச் சிறையிலிட்டாய். வணங்காது சென்ற அவனது கள்ளச்செயலைத் தீர்த்தாய். வஞ்சனையை வெறுத்தாய். சூரனது வஞ்சனையான மாமரத்தை முரித்தாய். வேல்விடுத்துக் கடலினை வற்றச்செய்தாய். தமிழ்ச்சங்கத்தில் கவிதைகள் படித்தாய். அடியவர் துன்பம் ஒழித்தாய். கூத்து ஆடினாய்.

விளக்கம் : கடலினை வற்றச்செய்தது திருவிளையாடற் புராணச் செய்தி.

தனிச்சொல் : என ஆங்கு= என்று. (ஆங்கு= அசைச்சொல்)

ஆசிரியச் சுரிதகம் குறிப்புரை : அணிமா முதலிய அட்டசித்தி= அணுப்போல் ஆதல்முதலாகச் சொல்லப்பெறும் மகிமா, லகிமா,கரிமா, பிராத்தி, பிரகாம்யம், விசித்துவம், ஈசத்துவம் என்ற எண்வகைச் சித்திகளும்.. பெருக்க= முழுதும். பிணிதீர் நீறு என்க. துகள்= குற்றம். அண்டர்= அண்டத்தவர். மூவகைத்தாய பூசனை= சரியை கிரியை யோகம் என்ற மானதபூசை. முகிழ்மலர்ப் பூசனை= மலர்ந்த மலரிட்டுச் செய்யும் பூசனை. புனிதர்= அகத்தியர். விதிவழி= முறைப்படி. புணரி= கடல். தணவு அறும்= குறைவில்லாத. வாங்கி= மீண்டும் பெற்று. படி= உலகு. வெறி= நறுமணம். புனைந்து= என்தலையில் சூட்டி. சமரச போதம்= அனைத்துயிர்களையும் ஒக்கப்பார்க்கும் ஞானம். அமலம்= குற்றமில்லாத. சிறப்புறு கதி= வீடுபேறு.

பொழிப்புரை : அணிமா முதலிய எண்வகைச் சித்திகளும், உடல்முழுதும் நோய்தீர்க்கும் திருநீறணிந்த அடியவர்களுடனான வாழ்வும், குற்றமற்ற புலமையும், அண்டத்தவர் போற்றும் வாழ்வும், மனத்தால் இயற்றும் சரியை கிரியை யோகம் ஆகிய பூசைகளுடன், மலர்ந்த மலரிட்டுச் செய்யும் பூசனையையும் அனைவரும் போற்றச்செய்யும் மேன்மையும், பொதிகைமலை அகத்தியர் அவைக்கு முறைப்படிச் சென்றுமீளும் ஆற்றலும், கடல்நீரிலும் நெருப்பிலும் நான்இட்ட குறைவற்ற சுவையுடைய எனது தமிழ்க்கவிதைகள் அனைத்தையும் மீண்டும் பெற்று உலகவர்க்கு உதவும் மேலானபுகழும், மேலும் நான் விரும்பும் அனைத்துச் சிறப்புகளும் பெற நீ உனது திருவுருவைக் காட்டி, நறுமணம் கமழும் மலர்ஒத்த உன்திருவடிகளை என்தலையில் சூட்டி, அனைத்து உயிர்களையும் ஒக்கப்பார்க்கும் ஞானம்

எனக்கு அருளி, குற்றமற்ற மனத்து அடியவர் கூட்டத்துள் சேர்த்து, இறப்பும் பிறப்புமின்றி வாழும் மிகச்சிறந்த வீடுபேற்றில் என்னைச் சேர்த்தருள்க.

விளக்கம் : திருநீறு நோய்தீர்ப்பது - " ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பம்தருவது நீறு " - (திருநீற்றுப்பதிகம். 9.). தொண்டர் கூட்டம் - " அன்பரொடு மரீஇ " சிவஞானபோதம் .சூ. 12. முருகன் மேல்கொண்ட ஊடல் காரணமாகக் கடலிலும் ஆற்றிலும் நெருப்பிலும் இவர் இட்டகவிதைச்சுவடி அனைத்தையும் மீட்டுத்தர வேண்டுகிறார். சமரசபோதம்= " எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின், தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே " (தாயுமானவர். பராபரக். 65.) இறப்பொடு பிறப்பற இயங்கும் சிறப்பு - வீடுபேறு - பேராஇயற்கை (திருக்குறள். 370) " பேரானந்தப் பெருங்கடல் " (இருபா இருப஼து. 20) **(1)**

நேரிசை வெண்பா

அருட்பேறு வேண்டுமனத்(து) அன்பர் கவியின்
பொருட்பேறு நாடும் புனிதா - தெருட்பேறும்
என்றற்(கு) உதவி எடுத்தணைத்துக் காத்தருள்வாய்
குன்றக் குடியிற் குகா

குறிப்புரை : பேறு= பெறுதல். பொருட்பேறு= பொருளில் தலைமை பெறுதல். தெருள்= அறிவு - ஞானம்.

பொழிப்புரை : குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முகநாதப் பெருமானே ! உனது அருள்பெறவிரும்பும் உள்ளமுடைய அடியவர்களின் கவிதைப் பொருளில் தலைமையை விரும்பும் தூயவனே ! என்கவிதைகள் ஞானமுடையனவாகவும் அமைய எனக்கு அருள்புரிந்து என்னைத் தூக்கி இறுகத்தழுவிக் காத்தருள்க.

இலக்கணக் குறிப்பு : பேறு - முதனிலைதிரிந்ததொழிற்பெயர்.

கட்டளைக் கலித்துறை

குகனே பரம்எனச் சொல்வோர்க்கும் சிற்சபைக் கூத்துடையான்
மகனேஎன்(று) ஓதி மறுப்பார்க்கும் தக்க வரம்கொடுக்கும்
அகனே வளம்பெறும் குன்றக் குடியில் அமரும்அறு
முகனே உனைநம்பி னேன்சிறி யேன்தவம் முற்றுதற்கே.

குறிப்புரை : பரன்= எல்லார்க்கும் மேலானவன். அகனே= உள்ளம் உடையவனே. முற்றுதல்= சிறக்க நிறைவுபெறுதல்.

பொழிப்புரை : குகனாகிய நீயே எல்லாக் கடவுளர்க்கும் மேலானவன் என்று சொல்வோர்க்கும், நீ பொன்னம்பலவானனின் மகன்தான் என்று மறுத்துரைப்பார்க்கும் தகுதிவாய்ந்த வரங்கள்அருளும் திருவுளத்தனே ! குன்றக்குடி மயில்மலையில் எழுந்தருளியுள்ள ஆறுமுகனே ! அற்பனாகிய நான் என்தவம் சிறக்க நிறைவுபெற உன்னையே நம்பியுள்ளேன். அருள்க.

விளக்கம் : குகனே பரம் என்பவர்கள், கந்தபுராணம் முதற்பகுதியில் வரும் " ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும், பேதகமன்றால் " (14. திருவிளையாட்டுப் . 19) என்பதால் கூறுவர். சிவபிரானின் நுதற்கண்ணில் தோன்றிய " ஆண்மகன் " முருகன் என்பதால் மூத்தவன் சிவனே, இவன் அவன் மகன் - சிவனுக்கு - பரத்துக்கும் - அடுத்த

நிலையினன்தான் என்பர் சிலர் என்றார். இரண்டும் ஒக்கும் ஆதலின் தக்க வரம் அருள்பவன் இவன் என்றார். (3)

கலிநிலைத்துறை

முற்றும் உணர்ந்தருள் குகனைக் கதிர்வேல் முருகோனைப்
பற்றுந ரேவளர் குன்றக் குடியைப் பரவாதார்
கற்றுயர் கின்றவ ரெனினும் குறைதீர் கனகப்பேறு
உற்றுணர் கின்றவர் எனினும் தமியேன் உறவன்றே.

குறிப்புரை : பற்றுநர்= மனத்தால் சிக்கெனப் பற்றியவர். பரவாதார்= வணங்கிப்போற்றாதவர்.கனகப்பேறு உற்று உணர்கின்றவர்= மிகுந்த பொன்னினைப் பெற்று அனுபவிப்பவர் .

பொழிப்புரை : குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமானை வணங்கிப் போற்றாதவர், கற்று உயர்நிலைஅடைந்தவராயினும், மிகுந்த பொன்னினைப் பெற்று அனுபவிப்பவராயினும் எனக்கு உறவல்லர். முற்றும் உணர்ந்துஅருளும் குகனை, ஒளிர்வேல் ஏந்திய முருகனை உள்ளத்தால் சிக்கெனப் பற்றிக்கொண்டவரே என் உறவாவர்.

விளக்கம் : பரவாதார் உறவல்லர் என்றதனால் அருத்தாபத்தியால் / அனுமானத்தால் பரவுநர் உறவினர் என்பதாயிற்று. (4)

அறுசீர்க் கழிநெடில்

அன்றுநலம் இன்றுகொடி(து) எனக்கால விகற்பமிக
அறைந்து வாழ்நாள்
சென்றுவயோ திகம்பெருத்துத் திண்டாடும் அவர்குழுவில்
சேர லாமோ
குன்றுதோ றாடலில்உயர்ந்த(து) எனப்பெரியோர் விளம்புகுன்றக்
குடியில் மேவி
என்றும்ஒரு படித்தாகித் திகழ்வடிவேற் பெருமானே
எனைக் காப் பாயே.

குறிப்புரை : காலவிகற்பம்= காலவேறுபாடு. ஒருபடித்தாகி= பேரருள் புரிவதில் குறையாநிலையில்.

பொழிப்புரை : குன்றுதோறாடலில் உயர்ந்தது என்று பெரியோர்கள் கூறிக்கொண்டாடும் குன்றக்குடியில் எழுந்தருளி, பேரருள் வழங்குவதில் அன்றுபோல் என்றும் குறையாது, வடிவேல் தாங்கியுள்ள அருள்தரு சண்முக நாதப்பெருமானே ! அந்நாளில் நான் நலமாக இருந்தேன், இந்நாளில் துன்புறுகின்றேன் என்று காலவேறுபாட்டினால் முதுமை பெருகிவாழ்வார் கூட்டத்தில் நான் சேராவண்ணம் எனக்கு அருள்வாயாக.

இலக்கணக் குறிப்பு : சேரலாமோ - ஓகாரம் எதிர்மறை. (5)

எழுசீர்க் கழிநெடில்

காப்பணிந் திலகும் வடிவும் ஓராறு
கவின்முகக் கண்டிகைக் கழுத்தும்
பாப்பகர் நாவும் சிவந்தவான் கலையும்
பழுதில்கோ வணத்தொடு கீளும்

நீப்பரி தாய நிலையும்உற் றவரே
நிகரில்குன் றக்குடிக் குகவேள்
மாப்படப் பொரும்வேற் படைப்பெரும் பூசை
வகைஎனக்(கு) உரைத்தனர் மன்னோ.

குறிப்புரை : காப்பு= திருநீற்றுக் காப்பு - பூச்சு. கண்டிகை= உருத்திராக்கம். பா= காத்தல். வான்கலை= மேலான ஆடை. நீப்ப அரிதாய= கைவிட இயலாத. மாப்பட= மாமரமாகிய சூரபன்மன் நிலைகெட.

பொழிப்புரை : திருநீற்றுக் காப்புடன் விளங்கும் வடிவமும், ஆறுமுக உருத்திராக்கம் அணிந்த கழுத்தும், எதிர்வந்தவரைக் காப்பதாகக் கூறும் நாவும், சிவந்த மேலான ஆடையும், குற்றமற்ற கோவணத்துடன் கீழும் கட்டி, தன்னை அடைந்தவரைக் கைவிடாத கருணைநிலையும் கொண்டவர்தான் விரும்பத்தக்க ஒப்பற்ற குன்றக்குடிக் குகன். மாமரமாகிய சூரபன்மன் நிலைகெடப் போரிட்ட வேலாயுத பூசை செய்யும் வகையினை அவன் எனக்குக் கூறினான்,

இங்குத் தன்வரலாறும் கூறினார்.

விளக்கம் :முருகனுக்கு உரியஆடை, செந்நிறத்தது : " குன்றி ஏய்க்கும் உடுக்கை " என்பது குறுந்தொகை கடவுள் வாழ்த்து. கீளும் கோவணமும் சிவனுக்கும் கூறப்பெறும் - " உடைமலிந்த கீளொடுகோ வணமும் தோன்றும் " (திருமுறை .6 திருப்பூவணம் . 4)

இலக்கணக்குறிப்பு : கீள் - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். (6)

எண்சீர்க் கழிநெடில்

மன்னர்முதல் பொருள்உடையார் தமையும்
உன்றன் வடி(வு)உணர்ந்து ஆறெழுத்தோதி வழுத்தி டாமல்
கன்னல்வில் வேட்(கு)உருகும்அவர் தமையும் செஞ்சொல்
கவிமதுரம் அறியாதார் தமையும் நாடி
இன்னலுறா(து) உன(து)அடியார்க்(கு) அடிமை ஆகி
எழுபிறவிக் கடல்கடக்கும் எழில்சீர் ஈந்(து)
கொன்னகுவேல் பெருமானே இணைதீர் குன்றக்
குடித்தலத்தில் விளையாடும் கொற்ற வேளே.

குறிப்புரை : வடிவு= அழகு. கன்னல்வில் வேள்= கரும்பு வில் ஏந்திய.மன்மதன். கொன்னகு= பெருமை ஒளிரும்.

பொழிப்புரை : பெருமை ஒளிரும் வேற்பெருமானே ! ஒப்பற்ற குன்றக்குடித் தலத்தில் மகிழ்ந்துறையும் வெற்றி வேளே !உனது கைபுனைந்து இயற்றாக் கவினை உணர்ந்து ஆறெழுத்தோதி உன்னை வணங்காமல்,அரசன் முதலியபெருஞ்செல்வரையும், கரும்புவில் ஏந்திய மன்மதன் காரணமாக மகளிர்பொருட்டுத் தனது மனம் உருகுபவர்களையும், சிறந்த சொல்லாட்சியுடைய கவிதையின் சுவையினை அறியாதவர்களையும் நாடிப்போய் நான் துன்புறாது, உன்அடியவர்க்கே அடிமையாவதன்மூலம் ஏழ்பிறவிக் கடலினைக் கடக்கும் சிறப்பினை அருளி என்னை ஆள்க

விளக்கம் : எழுபிறவி - " ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானிடம், நீர்பறவை நாற்கால்ஓர் பப்பத்துச் - சீரிய, பந்தம்ஆம் தேவர் பதினான்(கு) அயன்படைத்த, அந்தம்இல்சீர்த் தாவரம்நா லைந்து "

இலக்கணக்குறிப்பு : ஏழ்பிறவி - தொகைக்குறிப்பு. பிறவிக் கடல் - உருவகம். (7)

பதினான்கு சீர்க் கழிநெடில்

வேளுக்கு மனநாணும் எழில்கொண்ட குமரனை
வினைப்பிணி தவிர்த்தும் அருளாம்
மெஞ்ஞான வாழ்வினில் விடுக்குமொரு குருபரனை
வேதா கமம்து திக்கும்
தாளுக்(கு) இசைந்ததல மாம்எனஎன் நெஞ்சம்
தனைக்கொண்ட முருகே சனைச்
சந்தத் தமிழ்க்குரிய குன்றக் குடிக்குள்வளர்
சரவணோற் பவனை நினைவோர்
வாளுக்கு நிகர்விழிக் குறமகளும் இந்திரன்
வளர்த்தபே தையும் எடுத்து
மார்போ டணைத்(து)உச்சி மோந்துமே கலைபுனயும்
மடிமீ(து) இருத்து வதனால்
கோளுக்கும் அஞ்சாத வலிமையுறும் கவுமாரர்
குலதிலகர் ஆகி அப்பால்
குறுமுனியும் ஈசனும் பெற்றதைப் பெற்றுக்
குணாதீதர் ஆவர் அன்றே.

குறிப்புரை : வேள்= மன்மதன். உட்கு= இவர்அழகுக்கு நான் ஒப்பாகேன் என்று நாணும். தலம்=இடம். சரவண உற்பவன்= சரவணப்பொய்கையில் தோன்றியவன். பேதை= பெண் - தெய்வயானை அம்மை. கவுமாரர்= முருகசமயிகள். குலதிலகர்= பிறந்தகுலத்திற்குத் திலகம் ஒத்த சிறப்பினர். பெற்றதை= பெற்ற ஓங்கார உபதேசத்தை. குண அதீரர்= குணத்தில் மேம்பட்ட ஞானி.

பொழிப்புரை : இவர் அழகுக்கு நான் ஒப்பாகேன் என்றுபிறர் நாணும் அருள்தரு சண்முகநாதப் பெருமானை, இருவினைகளால்வரும் பிறவிநோய் நீக்கி, அருளாகிய மெய்ஞான வாழ்வில் செலுத்தும் ஒப்பற்ற மேலான குருவை, வேதங்களும் ஆகமங்களும் போற்றும் அவனது திருவடிகளுக்குப் பொருத்தமான இடமாக என் மனத்தினைக் கொண்ட முருகக் கடவுளை, நினைப்பவரை; வாளொத்த விழியுடைய வள்ளிநாச்சியரும், இந்திரனால் வளர்க்கப்பெற்ற தெய்வயானை அம்மையும் தமது குழந்தையாகக் கருதித் தூக்கித் தமதுமார்போடணைத்து, உச்சிமோந்து, மேகலைஅணிந்த தமது மடியில் இருத்தி மகிழ்வர். அதனால் அத்தகைய முருகசமயி தமது குலத்திற்குத் திலகம் ஒத்த சிறப்பினராவதுடன், அகத்தியமுனிவரும் சிவபிரானும் பெற்ற ஓங்கார உபதேசம் பெற்றுக் குணத்தில் மேம்பட்ட ஞானியாய் வீடுபேறு பெறுவர்.

விளக்கம் : ஞானியாதலின் வீடுபெறுவர் என்றது குறிப்பெச்சம். (8)

எண்சீர்த் தாழிசை

ஆவல்என்ற பேய்பிடித்(து)உள் அறிவுகெட்டு மங்கையர்க்(கு)
அனுதினம் தொழும்புசெய்யும் அவர்களோடும் வெண்ணிறச்

சேவலைப் புகழ்ந்திடாத கவிஞரோடும் நிலையிலாத்
தெய்வம்நாடும் முனிவரோடும் நைவதைத் தவிர்த்திடாய்
மூவல்அற்றி லங்குகுன்றக் குடியுள்நின்ற முதல்வனே
முச்சுடர்க்கும் மூலமா முளைத்தெழுந்த சோதியே
பாவகத்(து) அடங்கிடாத பன்னிரண்டு கையனே
பத்தர்சித்தர் நித்தர்முத்தர் பரவுதுங்க வேலனே.

குறிப்புரை : உள்= உள்ள .தொழும்பு= அடிமை. நிலையிலாத் தெய்வம்= பிறப்பும் இறப்பும் உடைய இந்திரன் முதலிய பதத்தவர். மூவல்= முடிதல் - அழிதல். முச்சுடர்= ஞாயிறு திங்கள் விண்மீன்கள். பாவகம்= மனத்தின் பாவனை. துங்கம்= வெற்றி.

பொழிப்புரை : குன்றக்குடியில் அழிவற்று விளங்கும் முதற்பொருளே ! ஞாயிறு திங்கள் விண்மீன் ஆகிய முச்சுடர்களுக்கும் மூலப்பொருளாகத் தோன்றிய ஒளிவடிவனே ! மனத்தின் பாவனைக்கு அடங்காத பன்னிருகையனே ! பத்தர் சித்தர் நித்தியமானவர் முத்தர் அனைவரும் பரவும் வெற்றிவேலனே ! ஆசைப்பேய் பிடித்ததால், உள்ள அறிவும் கெட்டு, நாடோறும் மங்கையர்க்கு அடிமைப்பணி செய்பவர்கள், முருகனது வெண்ணிறச் சேவலைப்புகழாத கவிஞர்கள், இறப்பும் பிறப்பும் உடைய தெய்வங்களின் அருளை நாடும் முனிவர்கள் முதலியவர்களுடன் கூடி நான்மனம் நைவதைத் தவிர்த்தருள்க.

விளக்கம் : ஆசை எனும் பேய் : " ஆசைஎனும் பெருங்காற்றூடு இலவம் பஞ்செனவு மனது அலையும் " (தாயுமா. ஆசையெனும். 1) முருகனது கொடிச்சின்னம் வெண்ணிறச் சேவல் என்றார் முன்னும் (பா. 9.) நிலையிலாத் தெய்வம் : " செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள " (முத்துக்குமார. பி. தமிழ் செங்கீ. 1- 5 மகுடம்) (9)

பதினான்குசீர்ச் சந்தக்கவி

தானன தந்த தனத்த தானன - தந்ததானா

வேலணி யுங்கைச் சிறப்பும் ஆறிரு
தோள்களும் அன்பிற் சிரிக்கும் வாய்களும்
வேறு(று)இணை இன்றிச் சொலிக்கும்மாமகு டங்கள் ஆறும்
கோலமு றும்பத் தருக்குள் ஆடிய
தாள்களும் அங்கைப் பிடிக்கு
நேரிரு கோதைய ரும்சற் றுளத்தி லேனும்இ ரங்கொ
ணாதோ
மால்அயன் அஞ்சித் தொழக்கு லாவிய
சூலமு டன்சிற் சபைக்குள் ஆடிய
வானவன் அன்புற்(று) அணைக்கும் ஆர்வமி குங்கு மாரா
சீலமி குஞ்சொல் தமிழ்க்கு நாயகன்
ஆகவி ளங்கிப் பொழிற்கு லாவிய
சீர்பெறு குன்றக் குடிக்குள் மேவிய கந்த வேளே.

குறிப்புரை : இணை= ஒப்புமை. பத்தருக்குள்= அடியவர் மனத்தில். அங்கைப்பிடிக்கும்= சத்திகளாகக் கொண்ட. நேர்= தகுதி. இருகோதையர்=

அருள்தரு வள்ளி தெய்வானையர். வானவன்= மிகமேலான சிவபிரான்.

பொழிப்புரை : திருமாலும் நான்முகனும் அடிமுடி தேடமுயன்ற பிழைக்கு அஞ்சித்தொழ, சூலமுடன் சிற்றம்பலத்தில் எல்லையில் ஆனந்தத் தனிப்பெருங் கூத்தாடும் சிவபிரான் அன்புடன் தழுவும் ஆர்வம்மிக்க குமரா ! அழகுமிக்க சொற்களுடைய தமிழுக்குத் தலைவனாக விளங்கி, சோலைகள் குலாவும் சிறப்புடைய குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள கந்தப் பெருமானே ! வேலேந்திய கைகயின் சிறப்பும், பன்னிரு தோள்களும், அன்பினால் முறுவலிக்கும் வாய்களும், ஒப்புமை பிறஏதுமின்றி ஒளிரும் அழகிய திருமுடிகள் ஆறும், அடியவர் உள்ளத்தில் ஆடும் அழகியதிருவடிகளும் கொண்ட நீயும், இருசத்திகளாக அங்கைப்பிடித்த தகுதிவாய்ந்த அருள்தரு வள்ளிநாயகி, தெய்வயானை அம்மையரும் என்மேல் இரங்கக் கூடாதா ? இரங்கியருள்க. (10)

புயவகுப்பு. 64 கலை சந்தக்கவி (ஓரடிக்கு 64 கலை)
முருகப்பெருமான் தோள்களின் சிறப்புகளைக் கூறுவது.
தானதன தானதன தனதனந் தத்தனத் தனதான தந்ததன.

வேளினது சேனையெனும் மாதர்அனை வோருமிக
விரகமிஞ் சித்துதித் திடநீடி நின்றன
மேருகிரி ஆதியஎ லாமலையும் நாணமுற
மிகநெருங் கிக்கதிப் புடனேவ ளர்ந்தன
வேரிமது ஓடவல நீபமுதல் மாலிகைகள்
விகசிதம் பெற்றிடத் தினமே அணிந்தன
வேயனைய தோளியர்க(ண்) ணோ(டு)இணைய தாகும்என
மிளிரும்வண்(டு) உற்(று) இசைத்திடு சீர்பொருந்தின
வே(று)இணையி லாதமணம் நாறுமதம் ஆதியவை
விரவுசந் தத்தைவெப்(பு) அறவேது தைந்தன
மீறும்ஒளி சேர்பரிதி யாவுநிகர் தோள்அணிகள்
விலையறும் பொற்குவைப் பணியோடி யைந்தன
வேல்குலிசம் வாள்பலகை சூலம்முத லாயபல
விபுதர்தங் கட்(கு)உவப் புறவேசு மந்தன
மேலுலகி னோரும்வசம் மாறஇடி நாணமுற
வெகுதரம் சத்தமிட் டிடுகோழி கொண்டன **1/8**

வேதமொரு நாலும்உணர் வான்அலற மோதியபின்
விதனமிஞ் சச்சிறைக் கிடைபோடும் வம்பின
மேகம்நிகர் தாருகன்முன் ஆழிபறி போனதனை
விறல்முகுந் தற்(கு)அளித் திடும்ஆண்மை துன்றின
வீரைதரும் ஆலம்அமு தாகநுகர் வான்முடியில்
வினவும்விஞ் சைப்பொருள் சொலும்நாள் இவர்ந்தன
மேடவடி வானவனை நீறுசெயும் மாமுனிவன்
வினைஒழித் திட்டுமிக்(கு) உறநீறு தந்தன
வீடுகரு தா(து)அடிமை ஆவதனை யேகருதும்

விரதர்தம் சொற்றிருத் தொடைகோடி ஒன்றின
வேள்விமுனி வோர்பதறி ஓடஒரு சேயதகர்
வெகுளிமங் கக்கசைப் படையால் அறைந்தன
வேழமக ளாம்அவள்த னாசலம்அ தால்உழுது
விடுதழும்(பு) உற்றிடத் தணியா(து)எ ழுந்தன
வேடர்இதண் மீதுவளர் பேதைகொளும் ஊடலிடை
மிதிபடும் சிற்றடித் தடமோ(டு) இலங்கின 2/8

காளியெறி சூலம்இரு கூறுபடு மாறுபொரு
கரம்இரண் உற்றவற்(கு) ஒருநாள் இரங்கின
காசுதவிர் வீரம்உறும் ஓர்விசைய னார்மனது
களிபொருந் தச்சரப் படையீய வந்தன
காதுபுரி யாதுசிவ யோகநிலை நாடுபவர்
கனவில்அஞ் சற்கரத் தொடுதோனும் நண்பின
காதல்வினை தீரஅருள் கூர்வரத மேவிஒளிர்
கவினுறுங் கைப்புகழ்ச் சிஎலாம்அ டைந்தன
காரிமுத லானபல வீரர்களும் ஆவலொடு
கழறிடும் சித்திரத் திறலால்உ யர்ந்தன
காணரிய வான்முகடு சேர்இரதம் வீரரொடு
கடிதுவந் துற்றிடப் பொரு(து)ஆர்வம் மிஞ்சின
காரிருளை நேரும்ஒரு மாயமலை யோடுசில
கயவர்அன்(று) இற்றிடப் பொரு(து)ஆர்வம் மிஞ்சின
கானவய மாமுகம்ஒ ராயிரம்உ ளான்உரைசெய்
கபடவெஞ் சொற்படிக்(கு) அவன்ஆவி உண்டன 3/8

காலன்நிகர் சூரன்விதிர் வாளொடெதிர் ஓடிவரு
கணம்நெடுஞ் சத்திவிட்(டு) இருகூறு கண்டன
காவிரியில் ஓர்நெடிய வேயின்உரு வாகிவளர்
கடவுள்தன் துக்கம்முற் றறவேபு ரிந்தன
காய்பரிதி ஏகும்வழி மூடியப ராரையொடு
கடலுறும் கொக்கினைப் பிளவாவ கிர்ந்தன
காமம்அறி யாதமுனி வோரும்மனம் ஆனமடல்
களில்வரைந்(து) உட்சலிப் புறவேதி கழ்ந்தன
காமருவு லோகம்அதில் மாதரணி தாலியொடு
கனகமஞ் சத்தில்உற் றிடநூல்பு ரந்தன
காவிமலர் போலும்விழி சேருமொரு நாரியவள்
கணவன்வம் புக்கிளைத் திடும்நாள்எ திர்ந்தன
காரணநி ராமயம னோலயசு கோதயமெய்
கருதும்அன் பற்றபொய்ச் சமண்வேர்க ளைந்தன
காசினியின் வாழ்வுபெரி தாகும்என நாடுமவர்
கவலைநெஞ் சத்தினுட் புகுதா(து)இ ருந்தன 4/8

பாளிதமும் மோதகமும் மீறநுகர் வானுடைய
பகைவிளைந் திட்டதற்(கு) அயராமல் உந்தின
பாரதன மேருவொடு வீழஒரு நாள்கொடிய
பரிமுகம் துற்றமற் பெறுபேயை வென்றன
பாவலவர் கோவனைய கீரன்எனும் ஞானமுனி
பகரும்இன் சொற்றமிழ்க் கவியால்ம கிழ்ந்தன
பாலைநிலம் மேவியபொ யாமொழிமுன் ஓர்பொழுது
பரியதண் டத்தினைக் கொடுபோய்அ விர்ந்தன
பானல் அணி பாடுகிளி யாம்அருணை மேயமுனி
பரவுசந் தத்திருப் புகழால்நி றைந்தன
பாகுநிக ராயதமிழ் தேர்முனிவர் ஏழெழுவர்
பரி(வு)ஒழிந்(து) உள்களிப் புறவேமு யன்றன
பாலையம காமுனிவன் ஆதியப தியானபரர்
பணிபுரிந்(து) அத்தொழில் செயவே விரும்பின
பாடலபு ராதிபதி நேர்பரம ஞானியர்கள்
பனுவல்கொண்(டு) அப்படிக் கொளவேமு யன்றன 5/8

பாதமலர் மீதுபல கீதஅலர் சூடுகிலர்
பதகர்தம் பக்கல்உற் றிடவேது ரந்தன
பாடுகிற நாவுதொறும் வாணிகுடி யாவுறுதல்
பழுதெனும் துட்டரைக் கொலவேது ணிந்தன
பாவரகி தாகரசு கோததியி லேமருவு
பவளஒண் கொப்பெனச் சொலவேப டர்ந்தன
பாகரச கோமளவி னோதநய சீலமிகு
பதம்உணர்ந் திட்டகைக் கிளிதாள் பதிந்தன
பாதகநி சாசரர்கள் தோமரம தோடுபல
பகழிவெந்(து) இற்றிடக் கனலாமு னிந்தன
பாய்பரிஇ லாதரதம் ஈயுமலை யாலுயிர்கொள்
பதிதர்மங் கத்தொலைத்(து) அறவேநி வந்தன
பாமரரும் ஓசைநடை யால்மகிழ நீடுகவி
பயிலும்நெஞ் சத்தின்ஒப் புறவேசி வந்தன
பாழில்முய லாதகவு மாரர்மன மாம்மகளிர்
பகலிலும் தொட்டணைத் திடவேமு யங்கின 6/8

மாளிகையி லேஅளவில் கூகையொடு கூ(வு)அவுண
மகளிர்நிந் தித்துமிக்கு) அழவேகு ளிர்ந்தன
மாமலரில் வாழும்இரு நால்மகளி ராம்அவருள்
வயவர்சிந் திக்கும்உத் தமிதோள்பு ணர்ந்தன
வாசமிகு பூவுறுப னீரிலையின் நீறுகொடு
மறுவில்பண் பைத்தொகுத் தருள்சீர்பொ ருந்தின
வானில்உடு வாகும்இரு மூவரொடு மேனைமகள்
மலியும்அன் புற்(று)எடுக் கையில்மார் புரிஞ்சின
வாளரவெ லாம்அவசம் ஆகநடம் ஆடிவரு

மயிலெனும் பொற்பரிக் குசைமேவு கின்றன
வாரணகு லாதிபதி யானதிரு ஞானம்அதில்
மதசலம் கொட்டும்உச் சியில்மோது மொய்ம்பின
வாதமிடு மூடர்அறி யாதநிலை தேறும்அவர்
மகிமைஎன் கப்பெருத் திடுசீர்பொ திந்தன
மாமிசம்உ ணாதுதவ மேபுரிகு வார்எதிர்சின்
மயம்இலங் கக்குறித் திடுநீர்கி டந்தன 7/8

மாவிரத யோகியர்கள் பூசைவிதி சோர்வுறினும்
வழுவில்இன் பத்(து)றச் செயுமால்வி ழைந்தன
மாவினொடு தேன்விரவி ஈயுமொரு மாதுமனம்
மகிழஎன்(று) அத்தினத் தினிலேகு விந்தன
மாலைவரு சேயநிற மேகம்அதின் மீதொளிரும்
மறுவில்செம் பொன்தடித்(து) எனநூல்பி றழ்ந்தன
வாணிமுத லோர்பலர்வி யாகரண நூல்உணர
வளைபிரம் பிட்டடித்(து) அருள்கூர்அ ணங்கின
மாறில்உமை கூறும்வசை நாடிஒரு காலம்அரன்
மறுகுமுன் புட்கையில் தலையேகொ ணர்ந்தன
மாயைஉட லாகும்எனும் மூலவரை வேறுபடு
வடிவுகொண் டுற்றிடற்(கு) இடமாவி ளங்கின
வார்குழையில் மேவுகுழை தாவும்எழில் நாடும்அவர்
வறுமைதுஞ் சக்கொடுத் திடவேசி றந்தன
மாசுதவிர் மேலவர்கள் கூறுமறை ஓசைநலம்
மருவுகுன் றக்குடிக் குகவேள்பு யங்களே (1)

குறிப்புரை : 1/8 : வேளினது சேனை= மன்மதனின் படை. விரகம்= காமம். நீடி= செழித்து. கதிப்புடன்= பருத்து. வேரிமது= மணக்கும் தேன். வலநீபம்= வளமான கடம்பமலர். விகசிதம்= பொலிவு. இசைத்திடு= முரலும். மணம் நாறுமதம்= மணக்கும் கத்தூரி. சந்தம்= சந்தனம். பணி= அணிகலன். குலிசம்= வச்சிராயுதம். பலகை= கேடகம். விபுதர்= வானோர். வசம் மாற= தன்னிலைகெட. கோழி= சேவற்கோழி.

பொழிப்புரை : மன்மதனது சேனை இதுவாகும் என்று கூறும் மகளிர்அனைவரும் உன்மேல் கொண்ட மிக்ககாமத்தால் உன்னைத்துதிக்க நீ செழித்த தோள்களுடன் நின்றாய். அத்தோள்கள், மேருமலைமுதலான கூட்டமான மலைகளும் நாண, மிகநெருங்கிப் பருத்திருந்தன; அத்தோள்கள், மணக்கும் தேன் சொரியும் கடம்பமலர்மாலை முதலிய பலமாலைகள் பொலிவுபெற நாடோறும் அணிந்தன; மூங்கிலொத்த தோள்களுடைய மகளிர் கண்கள் போல ஒளிரும் வண்டுகள் அம்மாலைகளில் மொய்த்து முரலும் சிறப்பினைப் பெற்றன. தனக்கு ஒப்பான வேறு நறுமணம் இல்லை என்று மணக்கும் கத்தூரி கலந்த சந்தனம் பூசியதால் தம்வெப்பம் குறைந்து செறிந்தன; ஞாயிற்றின் ஒளியை விஞ்சிய ஒளிடன்கூடிய மிகுவிலையுடைய பொன்னணிகள் பற்பல அணிந்தன; வேல், வச்சிரம், வாள், கேடகம், சூலம் முதலிய ஆயுதங்களை வானோர் மகிழச் சுமந்தன; வானுலகவரும் தம்நிலைகெட – நடுங்க - , இடியும் நாணப்,பலமுறை கூவும் சேவற்கொடி ஏந்தின;

குறிப்புரை : 1/4 : உணர்வான்= நான்முகன். மோதியபின்= குட்டிய பிறகு. சிறைக்கு இடை= சிறையில். வம்பின= மேற்பார்வை இட்ட. ஆழி= சக்கரப்படை. விறல்= பெருமை. துன்றின= செறிந்தன. வீரை= கடல். முடியில்= தலைமேல். விஞ்சைப்பொருள்= ஓங்காரப்பொருள். இவர்ந்தன=(ஆசிகூறும் முறையில்) படிந்தன. மேடம்= ஆடு. வடிவானவன்= வாதாபி என்ற அரக்கன். மாமுனிவன்= அகத்தியமுனிவர். வினை= கொன்றபாவம். மிக்குற= மேன்மை பெற. சொல்திருத் தொடை= சொல்மாலை – கவிதைமாலை. ஒன்றின= பொருந்தின. சேயதகர்= செம்மறி ஆட்டுக்கிடாய். கசைப்படை= சாட்டை. வேழமகள்= தெய்வயானையம்மை. தனாசலம்= மார்பகங்களாகிய மலைகள். இதண்= பரண். பேதை= வள்ளிநாயகி. தடம்= சுவடு.

பொழிப்புரை : நால்வேதம் உணர்ந்த நான்முகன் அலறக் குட்டியபின், அவன் மிகவருந்தச் சிறையிலிட்டு மேற்பார்வையிட்டன; கார்மேகம் ஒத்த தாருகனிடம் முன்பு பறிபோன திருமாலின்சக்கரப்படையை மீட்டுப் பெருமைபொருந்திய திருமாலுக்கே தந்த வீரம்செறிந்தன; பாற்கடல் தந்த நஞ்சினை அமுதமாக உண்ட சிவபிரானுக்கு ஓங்காரப்பொருள் உபதேசித்தபோது, ஆசிகூறும் முறையில் அவன்தலைமேல் படிந்தன; ஆட்டின் வடிவுகொண்ட வாதாபியாகிய அரக்கனைக் கொன்றதால் வந்தபாவம் தீர அகத்தியமுனிவர்க்குத் திருநீறளித்து மேன்மையுறச் செய்தன; வீடுபேற்றினை விரும்பாமல் உனக்கு அடிமைபூண்பதையே எண்ணும் தவத்தோர் சூட்டிய கோடிக்கணக்கான கவிதை மாலைகள் பொருந்தின; வேள்விசெய்த முனிவர்கள் பதறிஓட, வேள்வியில் எழுந்த செம்மறியாட்டுக்கிடாயின் சினம் அடங்க அதன்மேல் ஏறியமர்ந்து சாட்டையால் அதனை அடித்தன; தெய்வயானையம்மை தனது மார்பகங்களாம் மலைகளால் உழுததனால் ஏற்பட்ட தழும்புக்குத் தணியாது எழுந்தன; வேடர்களின் பரண்மேல் இருந்த வள்ளிநாயகிகொண்ட ஊடலில் அவளது சிற்றடியால் பட்ட தடத்துடன் விளங்கின;

குறிப்புரை : 3/8 : இருகூறுபடுமாறு= முறியுமாறு. கரம் இரண்டு உற்றவன்= வீரவாகுத்தேவர். இரங்கின= உதவ முன்வந்தன. காது= கொலை. அஞ்சற்கரம்= அபயக்கை. காதல்வினை= விருப்பச்செயல். காரி= இந்திரன். கழறிடும்= புகழ்ந்துகூறும். வான்முகடு தோய்= வானளாவிய. உற்றிட= தாருகன் வர. மாயமலை= கிரவுஞ்ச மலை. கயவர்= வஞ்சனையான அரக்கர். கானவய மா முகம் ஓர் ஆயிரம் உற்றோன்= ஆயிரம் சிங்கமுகமுடைய சிங்கமுகன். ஆவி உண்டன= வச்சிரப்படையால் உயிர் குடித்தன.

பொழிப்புரை : காளியெறிந்த சூலாயுதம் இருதுண்டாகுமாறு போரிட்ட வீரவாகுத்தேவர் முன்னாளில் தன்னைவணங்க அருள்புரிந்தன; குற்றமற்ற வீரமுடைய வீரவாகு மனமகிழச் சிவக்கணையை அருளின; கொலைசெய்யாது சிவயோக நிலையை நாடும் அருளாளர் கனவில் அபயக்கரத்துடன் தோன்றுவன; விருப்பச்செயல் நிறைவேற மிகஅருள்புரியும் வரதகரத்தின் ஒளிரும் புகழ்எல்லாம் பெற்றன; இந்திரன்முதலிய பல வீரர்கள் ஆவலுடன் போற்றும் அழகிய ஆற்றலால் உயர்ந்தன; வானளாவும் உச்சியையுடைய தேர்ப்படையுடனும் வீரர்களுடனும் விரைந்துவந்த தாருகனுடன் மிக்க ஆர்வமுடன் போரிட்டன; கரிய இருள்போன்ற வஞ்சக் கிரவுஞ்ச மலையுடன்கூடிய அரக்கர்கள் அழியப் போரிடும் ஆர்வம் மிஞ்சின;

காட்டில் வாழும் வலிய ஆயிரம்சிங்கமுகங்கள் கொண்ட சிங்கமுகன் வஞ்சனையாகச் சொன்னபடி வச்சிரப்படையை ஏவி அவன் உயிர் குடித்தன.

குறிப்புரை : ½ : சூரன்= சூரபத்மன். கணம்= பொழுது. விதிர்வாள்= சுழற்றிய வாளாயுதம்.. நெடும்சத்தி= பெருமைபொருந்திய வேற்படை. வேய்= மூங்கில். கடவுள்= இந்திரன். துக்கம்= மிக்க வருத்தம். முற்றுஅறவே=முழுதும் தீர. பரிதி= ஞாயிறு. பராரை= பருத்த அடி. கொக்கு= மாமரம். வகிர்ந்தன= கீறின. மனமானமடல்= மனமாகிய மலரிதழ். கா= கற்பகச்சோலை. மாதர்= தேவமகளிர். நூல்= தாலியின் மஞ்சள் கயிறு. ஒருநாரி= ஒப்பற்ற முருகம்மை. வம்புக்கு இழைத்தல்= வம்பாகக் கையை வெட்டுதல். எதிர்ந்தன= தோன்றச்செய்தன. காரண நிராமயம்= மூலமாய் விளங்கும் அரூபி. மனோலயம்= உள்ளத்தில் ஒன்றுதல். சுகோதயம்= சுகம் தோன்ற இருப்பிடமான. மெய்= ஞானம். வேர்களைதல்= அடியோடழித்தல். காசினியின் வாழ்வு= உலகவாழ்வு. கவலைநெஞ்சம்= கவலைப்படும் உள்ளம்.

பொழிப்புரை : எமனைஒத்த சூரபத்மன் சுழற்றிய வாளுடன் எதிரேவந்தபொழுது, பெருமைபொருந்திய சத்திஆயுதமாகிய வேலினை ஏவி, அவனை இருகூறுபடுத்தின; காவிரிக்கரையில் - சீர்காழியில் - நெடிய மூங்கில் வடிவுடன் சூரன் காரணமாக மறைந்திருந்த இந்திரனின் மிக்க வருத்தம் முழுவதையும் தீர்த்தன; சுடும்கதிர்களுடை ஞாயிறு செல்லும் வான்வெளி முழுவதையும் மூடிய பருத்த அடிப்பகுதியையுடன் கடலில் தோன்றிய மாமரமாகிய சூரனை இருகூறாகப் பிளந்தன; காமம் என்பதையே அறியாத முனிவர்களின் உள்ளமாகிய மடலில் மனம்சலிக்கச்சலிக்கத் தீட்டப்பெற்றன; கற்பகமரச் சோலையுடைய தேவருலகமாதர் அணியும் மஞ்சள்நூலுடன் கூடிய அவர்களின் தாலியைக் காத்தன; குவளைமலர் ஒத்த கண்களுடைய முருகம்மையின் கணவன் வம்பாக வெட்டிய அவள் கையை முளைக்கச்செய்தன; மூலமாய் விளங்கும் அரூபியானதும், மனத்தில் ஒன்றும்படி விளங்குவதும், சுகத்துக்கு இருப்பிடமானதுமாகிய ஞானத்தினை நினைகாதவர்களாகிய சமணகளை அடியோடு அழித்தன; உலகவாழ்வேயே பெரிதாக நாடிக் கவலைப்படுகிறவர்களின் மனத்தில் புகாதிருந்தன;

குறிப்புரை : 5/8 : பாளிதம்= பாற்சோறு. மீற நுகர்வான்= மிகுதியாக உண்ணும் விநாயகர். உந்தின= உலகை வலம்வர எழுந்தன; பாரதன மேரு= கனத்த மேருமலைஒத்த தனங்ள். கற்கிமுகி= குதிரை முகமுடைய பூதம். கோ= தலைவன். இன்சொற்கவி= இனிய சொற்களாலான கவிதையாகிய திருமுருகாற்றுப்படை . பொயாமொழி= பொய்யாமொழிப்புலவர். பரிய தண்டம்= பெரிய கைத்தடி. பானல்= குவளைமலர். நிறைந்தன= மாலைகள் மிக்கணிந்தன. ஏழெழுவர்= சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர். பரிவு= கவலை. பாலையமகாமுனிவன்= சிவஞானபாலையர். பணி= திருப்பணி. பாடலபுராதிபதி= திருப்பாதிருப்புலியூர் சண்முக ஞானியார் சுவாமிகள். அப்படிகொளவே= அவ்வாறு ஆடல்செய்ய.

பொழிப்புரை : பாற்சோறும் மோதகமும் மிகுதியாக உட்கொள்ளும் விநாயகருடன் கருத்து வேறுபாடுதோன்ற அதனை விரும்பாமல் உலகைச்சுற்றிவர எழுந்தன; மேருவாகிய கனத்த தனங்களுடன் கூடிய

குதிரைமுகப் பேயுடன் போரில் வென்றன; கவிஞர்களுக்கு அரசனான நக்கீரன் என்ற ஞானமுனிவர் கூறிய இனிய சொற்களாலான கவிதையாகிய திருமுருகாற்றுப் படையால் மகிழ்ந்தன; முன்னாளில் பாலைநிலத்தில் வந்த பொய்யாமொழிப்புலவர் முன்னே பெரிய கைத்தடியுடன் சென்று முட்டையைப் பாடவைத்தன; குவளைமலர் மாலையுடன் கிளியான அருணகிரிநாதர் போற்றிய சந்தத் திருப்புகழ் மாலைப்புகழும் மிகச்சூடின; வெல்லப்பாகு ஒத்த தமிழ்மொழியில் தேர்ந்த சங்கப்புலவர் நாற்பத்து ஒன்பதின்மரின் சிறந்தகளவியலுரை காணும் கவலையை, மூங்கையாய் இருந்து நீக்கிக் களிக்கச் செய்தன; சிவஞான பாலையராகிய மகாமுனிவர் முதலிய மேலானவர்களின் திருப்பணிகளில் விரும்பிப் பணிசெய்தன; திருப்பாதிருப்புலியூர் ஞானியாரடிகளின் பாடலைஏற்று அவ்வாறே ஆடல் செய்யும் விருப்பின;

குறிப்புரை : ¾ : சூடுகிலர்= சூட்டாதவர். துரந்தன= விலகின. வாணி= கலைமகள். பாவ ரகிதா சுகவுததி= பாவம் நீக்கும் சுகக்கடல். கொப்பு= கொடி - புனிதக்கொடி. பாகரசம்= பக்குவமான இன்பம். கோமளம்= அழகு. விநோத நயம்= மகத்துவம் பொருந்திய இனிமை. பதம்= சந்தச்சொல். பாதக நிசாசரர்= கொடிய அரக்கர். தோமரம்= இரும்பு உலக்கை. பகழி= அம்பு. பாய்பரிஇலா இரதம்= குதிரையின்றி ஓடும் இந்திரஞாலத்தேர். மலை= சஞ்சீவிமலை. பதிதர்= அற்பர். மங்க= அழிய. கவி பயிலும் நெஞ்சம்= கவிதை நோக்கம். பாழில் முயலாத= வீண்முயற்சி இல்லாத. மனமாம் மகளிர்= உள்ளமாகிய பெண்கள்.

பொழிப்புரை : திருவடித்தாமரையில் மிக்க இசைப்பாட்டுகளைச் சூட்டாத பாதகரின் அருகில் நில்லாது விலகின; பாடுவோர் நாக்களில் கலைமகள் குடிகொள்ளவில்லை என்ற துட்டரைக் கொல்லத் துணிந்தன; பாவம் நீக்கும் சுகக் கடலில் தோன்றிய ஒளிபொருந்திய பவளக்கொடியாகப் படர்ந்தன; பக்குவமான இன்பமுடன் அழகும் மகத்துவமும் பொருந்திய சொற்கள் பேசும் கிளிஅமர்ந்த சுவடு பதிந்தன; கொடிய அசுரர்களின் உலக்கைகளும் அம்புகளும் வெந்து நீறாகுமாறு நெருப்பாக முனிந்தன; சூரனின் பாய்ந்து இழுத்துச்செல்லும் குதிரை இல்லாத இந்திரஞாலந்தேர் கொண்டுவந்த சஞ்சீவிமலையால் உயிர்பெற்ற அற்பர் அழியக்கொன்று உயர்ந்தன; பாமரர்களும் பாடும் ஒசையுடைய இனிய நடையினைப்பெற்ற கவிதைநடை ஒக்கச் சிவந்தன; வீண்முயற்சி இல்லாத முருகனடியார்களின் மனமாகிய பெண்கள் பகலிலும் தொட்டுஅணைக்கப் பொருந்தின;

குறிப்புரை : 7/8 : நிந்தித்து= பழித்து அழும். மாமலர்= தாமரைமலர். பனீர்= பன்னீர். அருள் சீர்= அருளும் சிறப்பு. உடுவாகும் இருமூவர்= விண்மீன்களாகிய கார்த்திகை மாதர் அறுவர். உரிஞ்சின= உராய்ந்தன. வாள்= கொடிய. அவசம்= சோர்வு. நடம்= நடனம். பொன்பரி= அழகிய குதிரை. குசை= சாட்டை. வாரணகுலாதிபதி= யானைக் குலத்துக்கெல்லாம் தலைவன். திருஞானம்= திருஞான வேழம். மொய்ம்பு= வலிமை. அறியாத நிலைதேறும் அவர்= அறியாமைமிக்கவர். சின்மயம்= ஞானக் குறியீடு - வலதுகைப் பெருவிரல் அடியில் சுட்டுவிரலினைப் பொருத்திப் பிற மூவிரல்களையும் முன்னவற்றிலிருந்து ஒதுக்குதல்.

பொழிப்புரை : அரண்மனையில் உள்ள ஆந்தைகளுடன் அசுரப்பெண்டிர் உன்னைப் பழித்துக்கூறியழ அதனால்குளிர்ந்தன; தாமரையில் வாழும் எண்மகளிருள் வீரர்கள் எண்ணிவிரும்பும் வெற்றித்திருமகளைக் கூடின; மணம்மிக்க பூவுடைய பன்னீரிலையில் திருநீறுதந்து குற்றமற்ற பண்புகளைத் தொகுத்து அருளின; வானத்தில் விண்மீன்களாகவுள்ள கார்த்திகைமாதர் அறுவரும், மேனையின் மகளாகிய பார்வதி தேவியும் அன்புடன் கைகளில் எடுக்கும்போது அவர்களின் மார்புகளுடன் உராய்ந்தன; கொடிய பாம்புகளெல்லாம் சோர்வுற நடனம் ஆடிவரும் அழகியமயிலாகிய குதிரைபொருட்டுச் சாட்டையேந்தின; யானைகுல அதிபதியான திருஞான வேழத்தின் மதநீர் பெருக்கும் உச்சியில் மோதும் வலிமையுடையன; அறியாமையுடன் விவாதம் புரியும் மூடரின் அறியாமையைப்போல் பருத்த சிறப்புடையன; மாமிசம் உண்ணாமல் தவம்புரிபவர் கண்ணெதிரே ஞானக்குறி காட்டும் இயல்பின;

குறிப்புரை : 8/8 : மால்= பெருமை. மா= தினைமாவு. குவிந்தன= தழுவின. சேயநிற மேகம்= செம்மேகம். தடித்து= மின்னி. நூல்= பூணூல். வியாகரணம்= இலக்கணம். ஒருகாலம்= முன்னொரு காலத்தில். மறுகு= வருந்தும். புட்கையின் தலை = யானைத் தலை. மூலவர்= தலைமையர். வேறுபடு வடிவுகொண்டு= வேறுபிறவியில். உற்றிடற்கு இடமா= பிறந்து தன்னை அடைய. வார் குழை= நீண்டகாது (குழை - தானியாகுபெயர்.) குழை= காதணி. துஞ்ச= கெட. மறை ஓசை= மறைஓதும்ஓசை.

பொழிப்புரை : மிகச்சிறந்த விரதம் பூண்ட யோகியர் தமது பூசனையில் சோர்ந்தாலும் அவர்களைக் குற்றமற்ற வீடுபேற்றில் இன்புறச்செய்யும் பெருமையை விழைவன; தினைமாவுடன் தேன்கலந்துதரும் வள்ளிநாச்சியார் மகிழ அந்நாளில் தழுவின; மாலைக்காலச் செம்மேகத்தில் ஒளிரும் குற்றமற்ற சிறந்த அழகுடன் மின்னும் மின்னல்போல பூணூல் பிறழ்வன; கலைமகள் முதலியபலர் இலக்கணநூல் உணர மிகுமென்மை காரணமாக வளையும் பிரம்பால் அடித்துக் கற்பித்தன; (நான் நீராடும் குளத்து வாயிற்காவலுக்கு நின்றவனைக் கொன்றாயே என்று) என்றும் மாறுபடாத உமையவள் வசைகூறுமுன் எண்ணி அரன் வருந்துமுன், பொருத்த யானையின் தலையைக் கொண்டுவந்தன; உடம்பு அழிவதாகும் என்ற தலைமையர் - ஞானியர் வேறுபிறப்பில் தன்னைஅடைதற்கிடமாக விளங்குவன; நீண்டகாதுகளில் அணிந்த காதணிகள் தாவும் அழகினை விரும்புவோர் வறுமை கெட அருள்கொடுத்துச் சிறந்தன; இவ்வாறு சிறந்து விளங்குவன, குற்றமற்ற மேலோர் கூறும் மறைஓசை நலம் பொருந்திய குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முகநாதப் பெருமானின் திருப்புயங்களாகும். (11)

நேரிசை வெண்பா

புயம்ஆ றிரண்டுடைய புங்கவனை வன்கைக்
கயமா முகனைக் கடிந்து - செயம்ஆரும்
குன்றக் குடியில்வரு கோமானைப் போற்றுநர்பொன்
மன்றத்(து) அரனைஒப்பா வார்.

குறிப்புரை : புங்கவன்= கடவுள். கயமாமுகன்= கசமுகாசுரன்.

ஒப்பாதலாவது அத்துவிதமாய்க் கலத்தல் - இரண்டறக்கலத்தல்..

பொழிப்புரை : வெற்றி பொருந்திய வலியகையுடைய - துதிக்கையுடைய யானைமுகத்து அசுரனை வென்று குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள தலைவனை, பன்னிருதோள்களுடைய கடவுளைப் போற்றுவோர் பொன்னம்பலத்தில் ஐந்தொழிற்கூத்தாடும் சிவத்துடன் இரண்டறக் கலப்பர்.

கட்டளைக்கலித்துறை

வாரணம் கூப்பிடும் குன்றக் குடியில் வளர்குகனை
காரண சற்குரு என்(று)உண ராத கசடருக்கும்
பூரண போதம் வருமோ வெண்டமரைப் பூவில்வைகி
ஆரணத் தோன்திரு நாவில்நின் றாடும் அருட்கொடியே.

குறிப்புரை : வாரணம்= சேவற்கோழி. காரண சற்குரு= அனைத்துக்கும் மூலமான மேலான குருநாதன். ஆரணத்தோன்= பிரமன்.

பொழிப்புரை : வெண்டாமரைமலரில் வாழ்வதுடன் பிரமதேவனின் நாவில் தெய்விகநடனமாடும் அருட்கொடியாம் கலைமகளே ! சேவல்கள் கூவும் குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முகநாதனை, அனைத்துக்கும் மூலமாய் விளங்கும் மேலான குருநாதன் என்று உணராத மூடர்க்கும் முழுமையான ஞானம் வாய்க்காது.

விளக்கம் : கோழிச்சேவல் கூவுவதால் கேட்போர் பாவம் மறையும் என்பது மரபு.

இலக்கணக்குறிப்பு : மூடருக்கும் - உம்மை இழிவுசிறப்புக் குறித்தது. வருமோ - ஓகாரம் எதிர்மறை. (13)

கொச்சகக் கலிப்பா

அருட்கடலாம் உனைச்சிறிதும் அகத்தினிடைக் கருதாமல்
தெருட்சுடராய்த் தமைமதித்துத் திரிபவர்க்கும் இரங்குவையோ
மருட்கருங்கண் குறமானாள் வதிதருதண் புனத்தேகி
இருள்கருவேட்கு இளைத்தார்போன்(று) இறைஞ்சுகுன்றக்
குடிக்கோவே.

குறிப்புரை : தெருள்= ஞானம். மருள்= மருண்ட. மானாள்= மானாக விளங்கும் வள்ளிநாயகி. இருட் கருவேள்= இருள்போல் கருநிற மன்மதன். இளைத்தார்= நொந்தவர்.

பொழிப்புரை : கருமையான கண்களில் மருண்ட பார்வையுடைய மானாக விளங்கும் வள்ளிநாயகி இருந்த தண்ணிய தினைப்புனம் சென்று, அவளிடம் கரியநிறமுடைய மன்மதனால் நொந்தவர்போல் இரந்துநின்ற குன்றக்குடி அரசே ! அருட்கடலான உன்னைத்தன் மனத்தில் நினக்காமல், தன்னைத்தானே ஞானச்சுடராக மதித்துத் திரிபவர்க்கு அருள்புரிவாயோ ? அருளமாட்டாய்.

இலக்கணக்குறிப்பு : திரிபவர், இளைத்தார் - வினையாலணையும் பெயர்கள். திரிபவர்க்கும் - உம்மை இழிவுசிறப்பும்மை. (14)

கலிவிருத்தம்

கோவை வாய்இதழ்க் குறமகள் கொழுநனை விண்ணோர்
பாவை ஊடலுக்(கு) உருகிநின்(று) இதம்பல பகரும்
தேவை மாதவர் பரவுகுன் றக்குடிச் சேயைப்
பூவை பாகனுக்கு இனியவன் என்பது பொதுவே.

குறிப்புரை : கோவை= கொவ்வைக்கனி. விண்ணோர்பாவை= தெய்வயானையம்மை. பூவை= உமையம்மை. இனியவன்= இனியமகன். பொது= பொதுஇலக்கணம்.

பொழிப்புரை : கொவ்வைக்கனி ஒத்தஇதழ்களுடைய அருள்தரு வள்ளிநாயகிக்குக் கணவனும், தெய்வயானையம்மையின் ஊடலைத்தீர்க்க மனமுருகிப் பணிமொழி கூறும் தேவனும், மாதவர் பரவும் குன்றக்குடியில் எழுந்தருளியவனுமாகிய பெருமானை, உமையம்மையை இடப்பாகம் கொண்ட சிவபிரானுக்கு மகன் என்பது பொதுஇலக்கணத்தின் பாற்பட்டதாகும். சிவன்வேறு முருகன் வேறல்லன் என்பதுவே சிறப்பிலக்கணம் ஆகும்.

விளக்கம் : " நமதுசத்தி அறுமுகன் அவனும் நாமும் பேதகமன்று " என்பது கச்சியப்பரின் கந்தபுராணம். முருகன் சிவனே என்க. (15)

கட்டளைக்கலிப்பா

பொதுவி லாடும் புராந்தகன் மைந்தனைப்
பொருவில் குன்றக் குடிமேவு செல்வனைக்
கதுமெ னத்தொழுது உய்யாத மூடரைக்
கண்ணி னால்தினம் காணவும் கூடுமோ
மதும லர்ச்செழுங் காவியும் மூவிரு
வரைபொ ருந்திய மாமணிக் கோவையும்
பதும மென்கையில்தண்டமும் நீறுதோய்
பவள மேனியைப் பார்த்தவல் லோர்களே.

குறிப்புரை : பொது= அம்பலம். புராந்தகன்= முப்புரமெரித்த சிவன். கதும்என= விரைந்து. காவி= காவியாடை. வரைபொருந்திய= மலைகள் போன்ற தோள்கள். வல்லோர்களே= வல்லவர்களே.

பொழிப்புரை : தேன்பொருந்திய செழுமையான மலரொத்த மென்மையான காவியாடையும், பன்னிருமலைகள் ஒத்ததோள்களில் பொருந்திய சிறந்த நவமணிமாலையும், தாமரைமலர் ஒத்த மென்மையான கையில் தண்டாயுதமும், வெண்ணீறு துதைந்த பவளமேனியும் கொண்டவனாகிய ஒப்பற்ற குன்றக்குடிப் பெருமானை, அம்பலத்தில் ஆனந்தக் கூத்தியற்றும் முப்புரம் எரித்தசிவபெருமானின் மகனை விரைந்து சென்று நாடோறும் வணங்காத மூடரை காணநேர்தல் கூடாது. (16)

கலிநிலைத் துறை

வல்லார் விரும்புநம் குன்றக் குடிக்கோவில் வளர்வேலனைப்
பல்லாயி ரங்கோடி அண்டத்தும் நிறைகின்ற பரம்என்றிடா(து)
அல்ஆர் களத்(து)ஆதி தருமைந்தன் என்(று)ஓதி அயர்வோர்கள்
செல்லா திருந்(து)ஆ றெழுத்(து)ஓதல் கவுமாரர் செயலாகுமே.

குறிப்புரை : அல்ஆர் களம்= நஞ்சினால் கருமைமிக்க கழுத்து.

பொழிப்புரை : தவவலிமையுடையவர்கள் விரும்பும் குன்றக்குடிக் கோயிலில் எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முகநாதப் பெருமானை, மிகப்பல ஆயிரங்கோடி அண்டங்களிலும் நிறைந்து விளங்கும் பரம்பொருள் என்று கூறாமல், நஞ்சினால் கருமைமிக்க கழுத்துடைய சிவபிரானின் மகன் என்றுகூறி மனம் சோர்பவரிடம் செல்லாதிருப்பதே கவுமாரராகிய முருகன் அடியார் செயலாகும். (17)

அறுசீர்க் கழிநெடில்

செயல்அறிந்து தவம்புரியச் சோம்பலுற்றுக் கலகலெனும்
சிலநூல் கற்று
மயலகன்ற பெரியோரில் தமைமதிக்கும் சிலர்உளத்தும்
வசிக்கின் றாயோ
வயல்வளம்சேர்ந்(து) இலங்குகுன்றக் குடித்தலத்து முருகோனே
வள்ளை சாடும்
கயலனைய விழிமடவார் இருவரொடு மயிலேறும்
கருணை வாழ்வே.

குறிப்புரை : கலகலெனும்= ஆரவாரம் மிக்க. மயல்= அறியாமை. வள்ளை= வள்ளைகொடியாக விளங்கும் காது.

பொழிப்புரை : நன்செய் வளத்துடன் விளங்கும் குன்றக்குடியில் உள்ள முருகப்பெருமானே ! வள்ளைக்கொடி ஆகிய காதில்மோதும் கெண்டைமீன்போன்ற விழிகளுடைய அருள்தரு வள்ளி தெய்வானை அம்மையருடன் மயிலில் ஏறியமர்ந்துள்ள கருணை வடிவானவனே ! செய்ய வேண்டிய முறையறிந்து தவம்மேற்கொள்ளச் சோம்பல்கொண்டு, ஆரவாரம் மிக்க சிலநூல்களைக் கற்று, அறியாமையனைத்தும் தீர்ந்த பெரியவர்கள் போலத்தம்மை மதிக்கும் இறுமாப்புடையவர் உள்ளத்தும் நீ வாழ்கின்றாயா ? அத்தகையவர் உள்ளத்தில் நீ வாழமாட்டாய் .

இலக்கணக்குறிப்பு : வசிக்கின்றாயோ - எதிர்மறை ஓகாரம். கயலனைய விழி - உவமைவிரி. இருமடவார் - தொகைக்குறிப்பு. (18)

எழுசீர்க் கழிநெடில்

வாழ்வெனும் சிறுமியை மணஞ்செய்து நாடொறும்
மயக்கொடு முயக்கும் உற்றுத்
தாழ்(வு)ஒழிந் திடஅருளும் ஈகையா கியமகன்
தனைவிரும் பார்கள் நரரோ
வீழ்(வு)எனும் கொடி(து)அற உனக்(கு)அன்பு புரிகின்ற
மெய்ப்பத்தர் சித்தர் அருளால்
ஆழ்(வு)ஒருங்(கு) உதவிவளர் குன்றக் குடித்தலத்(து)
அமர்கின்ற கருணை முகிலே.

குறிப்புரை : வீழ்வு= இறப்பு. ஆழ்வு= பேரின்பத்தில் திளைத்தல். தாழ்வு= தன்இழிவும், பிறர் இழிவும். நரரோ= மனிதரா ?

பொழிப்புரை :. இறப்புஆகிய கொடுமை ஒழிய, உன்மேல் அன்புசெலுத்தும் மெய்யானபத்தர் சித்தர் ஆகியோரின் அருளினால் பேரின்பத்தில் திளைத்தலை ஒருசேர உதவிவளர்க்கின்ற குன்றக்குடித்

தலத்தில் எழுந்தருளியுள்ள கருணைபொழியும் மேகமே ! வாழ்க்கை என்னும் இளையவளை மணந்துகொண்டு நாடோறும் அவளிடம் மயங்கியும் அவளைக்கூடி இன்புற்றும் தனதும் பிறரதும் ஆகிய இழிநிலை ஒழிய அருளும் ஈகையாகிய மகனைப்பெற்று வளர்த்து ஈடேற விரும்பாதார் மனிதரல்லர்; விலங்காவர்.

விளக்கம் : தன்நயப்பில்லா ஈகையால் தனக்கு இம்மையில் புகழும் மறுமையில் வீடுபேறும் வாய்ப்பதுடன், பிறரையும் வாழ்விப்பதால் ஈகை இலாதார் விலங்குகளே என்றார்.

எண்சீர்ச் சந்தக்கவி

தனன தனதன தந்தத் தனன

கருணை முகில்உறழ் சிந்தைக் குரவர்
கழறு முதுமொழி நம்பித் துகளில்
புருவ நடுவழி கண்டிட் டவர்கள்
புனித சமரசம் என்றைக்(கு) அருள்வை
அருண கிரிஎன வந்தித்(து) உருகும்
அடியர் மனம்நிகர் குன்றக் குடியின்
முருகன் அறுமுகன் என்(று)எத் தினமும்
மொழியும் நலம்உத வும்சற் குருவே.

குறிப்புரை : முகில் உறழ்= மேகம்போன்ற. துகள்= குற்றம். புருவ நடுவழி= ஆறாதார முறையில் இதனை ஆக்ஞை என்பர். உபாசனையில் மூர்த்தி தெரிசனம் வெளிப்படுமிடம் இதுஎன்பர். சிவனது ஆக்ஞையில் - இவ்விடத்தில் தோன்றியவன் முருகப்பெருமான்.

பொழிப்புரை : அருணகிரியாரைப்போல் உன்னைப் போற்றிஉருகும் அடியவர் மனத்தினைஒத்த குன்றக்குடியின் முருகனே ! ஆறுமுகனே ! என்றுநாடோறும் கூறும் நலத்தினை அருளும் சற்குருவே ; கருணை மேகம் போல் அருள்வழங்கும் மனமுடைய சமயகுரவர்கள் கூறிய முதுமொழியை நம்பி, குற்றமற்ற ஆக்ஞாசக்கரத்தில் உன்னைக் கண்டவர்களின் தூய சமரசநெறியை எனக்கு என்று அருள்வாய். இப்போதே அருள்க.

விளக்கம் : " முருகன் குமரன் குகனென்று மொழிந்து உருகும் செயல்தந்து உணர்வு என்று அருள்வாய் " (கந்தர் அனுபூதி. 15) (20)

ஒன்பதுசீர்ச் சந்தவிருத்தம்

தத்ததன தந்தத் தனத்ததன தந்ததன
தத்ததன தந்தத் தனத்ததன தந்த தனனா.

சற்குருவை நிந்தித் திடத்துணியும் வம்பர்பகர்
சத்தமுழு துங்கெட்(டு) உனக்(கு)உரிமை கொண்டு முயல்வோர்
சொற்குருகும் நெஞ்சத் தினர்க்(கு)அடிமை என்றுவளர்
சுத்தகுணர் செஞ்சொற் பெருக்கொலி விளங்க அருள்வாய்
பொற்குவடும் ஒஞ்சிக் கிடக்கஉயர் கின்றதொரு
பொற்புமிகு குன்றக் குடிக்கிரியில் நின்ற முருகா

மற்குருகு தங்கிக் களிக்கஒளிர் செங்கையொடு
மற்(று)இணையில் பைம்பொன் சிகிப்பரிஇ வர்ந்த குகனே.

குறிப்புரை : பொற்குவடு= மேருமலை. ஒஞ்சி= நாணி. பொற்பு= அழகு. மல்குருகு= ஆற்றல்மிக்க சேவல். இணையில்= ஒப்பற்ற. பைம்பொன் சிகிப்பரி= பசிய அழகிய மயிலாகிய குதிரை. சற்குருவை= ஞானகுருவாகிய உன்னை. சத்தம்= ஆரவாரம். முயல்வோர்= உன்னருள்பெற முயல்கின்றவர். சுத்தகுணர்= நற்குணர். செஞ்சொல்= குற்றமற்ற சொல்

பொழிப்புரை : மாமேருமலையும் நாணிக்கிடக்குமாறு உயர்ந்த அழகுமிக்க குன்றக்குடி மலையில் எழுந்தருளியுள்ள முருகனே ! ஆற்றல்வாய்ந்த சேவல்தங்கி ஒளிரும்கொடி உயர்த்த செங்கையுடன் ஒப்பற்ற பசிய அழகிய மயிலாகிய குதிரையில் ஏறிவரும் குகனே ! ஞானகுருவாகிய உன்னை நிந்திக்கத் துணியும் ஆரவாரம் முழுவதும் ஒழிந்து, உனக்கு உரிமைபூண்டு வாழமுயல்கின்றவர் சொல்லுக்கு உருகும் நெஞ்சத்தவர்க்கு நான் அடிமைஎன்று முழங்கும் நற்குணத்தவர்களின் முழக்கம் பெருகிவிளங்க அருள்வாயாக.

விளக்கம் : உச்சிக்கொண்டையாகிய சிகையுடையது சிகி.

இலக்கணக்குறிப்பு : சிகிப்பரி - உருவகம். (21)

பதின்சீர்க் கழிநெடில். சந்தக் கவி

தனதனத் தந்தத் தனத்தான தன்னதன தனனா

குகன்எனச் சிந்தித்(து) உனைப்பாடும் நன்மையுறு பெரியோர்
குவளைஒக் குங்கண் கணைப்பாவை அன்னவர்கள் நடுவே
பகழிகைக் கொண்(டு)அல் பகட்டேறு மன்னவன(து) இகல்சேர்
பழுதினுக்(கு) அஞ்சித் துடிப்பார்கொல் உண்மைமொழி பகர்வாய்
சகலருக் கும்சிற் சுகப்பேறு தன்னைஇனி(து) அருள்வோர்
தறுகுபொற் குன்றக் குடிக்கோயி லுண்மருவு முருகா
அகவலுக்(கு) இன்புற்(று) எழில்தோகை வன்னமுது(கு) அதன்மேல்
அயில்எடுத்(து) இன்சொல் தமிழ்க்காவல்மன்னஅமர்பரனே.

குறிப்புரை : கண்கணை= கண்ணாகிய அம்பு. பாவைஅன்னவர்= பதுமைஒத்த அழகிய பெண்டிர். பகழி= மலரம்புகள். அல் பகடு= இருளாகிய யானை. மன்னவன்= மன்மதன். இகல்சேர் பழுது= பகைமைகொண்ட குற்றம். சிற்சுகம்= ஞானத்தாலமையும் இன்பம். தறுகு= தங்கியுள்ள. தோகை= ஆண்மயில். தமிழ்க்கு ஆவல் மன்ன= தமிழ்ப்பாகேட்கும் நிலைத்த ஆவலுடன்.

பொழிப்புரை : அனைவருக்கும் ஞானத்தால் அமையும் இன்பத்தை அருளும் அடியவர் தங்கியுள்ள குன்றக்குடித் திருக்கோயிலுள் எழுந்தருளியுள்ள முருகனே ! மயிலின் அகவலினைக் கேட்டுஇன்புற்று ஆண்மயிலாகிய அதன் அழகியமுதுகில் வேல்தாங்கி இனிய தமிழ்ப்பாகேட்கும் நிலைத்த ஆவலுடன் அமர்ந்துள்ள பரம்பொருளே ! உன்னைசிந்தித்து குகன் என்று பாடுவதால் நன்மையடையும் உன்அடியவர், குவளைமலர் ஒத்த கண்களையுடைய பெண்டிரிடையே வாழினும், மலரம்புகளை ஏந்தி, இருளாகிய யானைமேலேறிவரும் மன்மதனது

பகைகொண்ட குற்றத்துக்கு - காமத்திற்கு - அஞ்சித்துடிப்பார்களோ ?
அவர்களின் உண்மைநிலை கூறு. (காமங்கொள்ளார் என்க.) (22)

பதினொருசீர்ச் சந்தவிருத்தம்

தனதனந் தத்தனத் தான - தத்ததானா

பரவைஇன் பக்குடில் தூதன்
ஒருவனும் சிற்றுறுப் போடு
பரியகும் பத்(து)தித் தோனும் - உற்றதோர் வாழ்வு
அரமியங் கட்டிலில் காதல்
விநயசபுஞ் சத்திருப் போலும்
அரிவைஎன் கைக்குவப் பாகும் - எற்கும் ஈவாய்
உரமிகும் துற்குணச் சூரன்
நடுநடுங் கப்பொலப் பூமி
உடையவன் துக்கம்விட் டோட - வெற்றிவேலால்
இரவினும் சத்தமிட்(டு) ஆர்வ
மொடுபொரும் கைத்திறத் தோடும்
இணையில்குன் றக்குடிக் காவல் - பெற்றுளானே.

குறிப்புரை : பரவை= சுந்தரரின் பரவைநாச்சியார். தூதன்= தூது சென்ற சிவபிரான். சிற்றுறுபோடு= சிறிய உடலுறுப்புகளுடன். கும்பம்= குடம் உதித்தோன்= தோன்றிய அகத்தியர். உற்றதோர் வாழ்வு= பிரணவப்பொருள் கேட்ட சிறப்பு. அரமியம் கட்டிலில்= வீட்டின்மேல் உலாவும் வெளி. விநயபுஞ்சத்திரு= இன்பவிளைவின் சிறப்பு. அரிவைஎன்கைக்கு= ஆன்மாவாகிய நான் பெண் என்பதற்கு.பொலப்பூமி= பொன்னுலகம். இரவினும்= இரவுநேரத்திலும். வெற்றி வேலால் ஆர்வமொடு பொரும் கைத்திறத்தோடும் இரவினும்சத்தமிட்டு இணையில் .....பெற்றுளானே.

பொழிப்புரை : ஆற்றல்மிக்கவனும் தீக்குணனும் ஆகிய சூரபத்மன் நடுநடுங்கவும், பொன்னுலகமாகிய தேவருலக அரசனின் - தேவேந்திரனின் ஆட்சிஇழந்த துக்கம் அவனைவிட்டோடவும் தனது வெற்றிவேலால் போரிட்ட மிக்கவலிமையுடன், குன்றக்குடியில் இரவுநேரத்திலும் " பாரா உஷார் " - " காவல் சாக்கிரதை " என்று உரக்கச்சொல்லிக் காவல்காக்கும் இயல்பனே ! சுந்தரர்க்கு இன்பம்தரும் பரவையாரின் வீட்டிற்குத் தூதுசென்ற சிவபிரானும், சிறிய உடலுறுப்புகளுடன் பெரிய குடத்தில் தோன்றிய அகத்தியமுனிவரும் பிரணவஉபதேசம் கேட்டவாழ்வை, வீட்டின்மேல் வெளியில் உலாவும் இன்பவெளிச் சிறப்புடைய வாழ்வை அருள். பெண்ணாகிய எனக்கும் அது உவகை தருவதாகும்.

விளக்கம் : உயிர்க்குலம் அனைத்தும் இறுதியில் சிவபிரானை அடைந்து அவன்தரும் வற்றாமுற்றாப் பேரின்பம் துய்த்தற்குரியனவாதலின், உயிர்கள் அனைத்தும் பெண்பால் என்றும் சிவபிரான் ஒருவனே ஆண்பால் என்றும் கூறும் சைவமெய்யியல் மரபினையொட்டி, " அரிவை என்கைக்கு உவப்பாகும் - எற்கும் ஈவாய் " என்றார். (23)

வெண்பா

பெற்றிடுவ தெல்லாம் பெறவேண்டிப் பேர்பெரிய
வெற்றிவேல் ஏந்தும் விமலனையே - பற்றிநின்று
கோடாத குன்றக் குடித்தலத்தைப் போற்றுதலே
தாடாளர் செய்யும் தவம்.

குறிப்புரை : பேர்பெரிய= மிக்கபுகழுடைய. கோடாத= (அருள்வதில்) சலியாத.தாடாளர்= முயற்சியுடையார்.

பொழிப்புரை : பெறவேண்டிய சிறப்புகள் அனைத்தையும் நாம் பெறும்பொருட்டு, மிக்கபுகழ்வாய்ந்த வெற்றிவேல் ஏந்தும் இயல்பாகவே மலமில்லாத பெருமானை மனத்தில் இறுகப்பற்றிக்கொண்டு அருள்வதில் சலியாத குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமானைப் போற்றுவதே முயற்சியுடையார் செய்தற்குரிய தவமாகும்.

இலக்கணக்குறிப்பு : தாளாளர் என்பது எதுகை நோக்கித் தாடாளர் ஆனது - செய்யுள் விகாரம். (24)

கட்டளைக்கலித்துறை

தவமே முயலினும் மங்கைநல் லார்மலர்த் தாள் இறைஞ்சி
அவமே புரியினும் செவ்வேற் குமரன் அமர்தலினால்
நலமே மலிதரும் குன்றக் குடியில் நரர்கட்கெலாம்
சிவமேஎம் ஆருயிர் என்(று)உணர் ஆனந்தம் சித்திக்குமே.

குறிப்புரை : அவம்= வீண்காலம் கழித்தல். சித்திக்கும்= வாய்க்கும்.

பொழிப்புரை : தவம் செய்தாலும், மகளிரை வணங்கி வீண்காலம் கழித்தாலும், குன்றக்குடியில் அருள்தரு சண்முகநாதப்பெருமான் எழுந்தருளி இருப்பதால் நலமேமலிந்த அவ்வூரில் வாழும் மக்கட்கெல்லாம் முருகனாகிய சிவபெருமானே எமக்கு ஆருயிராவான் என்ற இன்பம் வாய்க்கும்.

விளக்கம் : மனைவியின் ஊடல்தீர்க்கச் " சீறேல் என்று அவள் சீரடிபணிதல் " ஆகிய உலகியலைக் கூறினார் (25)

கலிநிலைத்துறை

சித்திக்கும் முத்திக்கும் ஆசித்து மாதவம் செய்வோர்களே
எத்திக்கும் மெச்சிடும் குன்றக் குடிக்குள் இருக்கின்றவேள்
சத்திக்கும் மயிலுக்கும் வாரணத் துக்கும் தமிழ்பாடிடும்
புத்திக்குள் நிற்கின்ற கவுமார ரைக்கண்டு பணிமின்களே

குறிப்புரை : ஆசித்து= விரும்பி. சத்தி= வேல். வாரணம்= சேவல்.

பொழிப்புரை : சித்தி முத்தி ஆகியவற்றை விரும்பி மாதவம் செய்வோரே ! எண்டிசையும் போற்றும் குன்றக்குடிப் பெருமானின் வேல், மயில், சேவல் பற்றித் தமிழ்பாடும் சிந்தையுடனேயே இருக்கும் முருகன் அடியார்களைக் கண்டு வணங்குங்கள். சித்திமுத்திவாய்க்க இதுபோதும். (26)

அறுசீர்க் கழிநெடில்

பணிலமுத்தம் திகழ்வீதி யுடையகுன்றக் குடிக்குகனைப்
பாடி ஆடித்
துணி(வு)உதவும் சமரசச டாக்கரத்தைக் குருபரன்வாய்

சொல்லக் கேட்டுத்
தணி(வு)அரும்சீர் சண்முகவி னோதநன்னூல் விதியுணர்ந்து
தவம்செய் யாமல்
மணிமருவும் சூசுகப்பொன் கொங்கைநல்லார்க்(கு) உருகுவதுஎன்
மடமை அன்றே.

குறிப்புரை : பணிலம்= சங்கு. சமரசம்= அனுகூலம். சடாக்கரம்= திருஆறெழுத்து - சரவணபவ. குருபரன்வாய்= முருகப்பெருமான் மூலம். தணிவு= தாழ்வு. சண்முக வினோதன்= அருள்தரு சண்முகநாதப் பெருமானாகிய மகத்துவன். சூசுகம்= மடி. பொன்= அழகு.

பொழிப்புரை : சங்குகளும் முத்துகளும் விளங்கும் வீதியுடைய குன்றக்குடிக் குகப்பெருமானைப் போற்றிப் பாடியும் ஆடியும் துணிவதற்கு அனுகூலமான " சரவணபவ " என்ற திருவாறெழுத்தினை முருகப்பெருமான் மூலம் உபதேசிக்கப்பெற்று, தாழ்வற்ற அரியசிறப்புடைய முருகனின் மகத்துவம் கூறும் நூல்கள் கூறுவன உணர்ந்து தவசெய்யாமல், மணிகள் பதிக்கப்பெற்ற மேகலை அணிந்த மடியுடன் அழகிய கொங்கைகளுமுடைய மகளிரைத் தோய மனம்உருகுவது மடமையாகும்.

இலக்கணக்குறிப்பு : அன்றே - ஈற்றசைச்சொல். (27)

மேகவிடுதூது

எழுசீர்

அன்று நான்முகன் படைத்திடும் உயிர்த்தொகை
அனைத்தையும் அனையே போல்
நின்று காக்கும்நல் எழிலிகாள் உமைத்தினம்
நினைகுவ(து) ஒழியே னால்
குன்று றாவளம் உடையகுன் றக்குடிக்
குமரவே ளிடத்தே நீர்
சென்று நான்படும் துயரெலாம் மொழிந்(து)அருள்
செய்கெனப் பணிவீ ரே.

குறிப்புரை : அனை= அன்னை. எழிலி= மேகம். குன்று உறா= குன்றாத.

பொழிப்புரை : முன்னாளில் நான்முகன் படைத்த உயிர்கூட்டம் அனைத்தையும் தாய்போல் தொடர்ந்து காத்துவரும் மேகங்களே ! குன்றாத வளமுடைய குன்றக்குடிக் குமரனிடம் நீவிர்சென்று நான்படும் துயரம் அனைத்தையும் சொல்லிப் பணிந்து எனக்கு அருள வேண்டுங்கள். வேண்டின் அவன் அருள்வான். உம்மை நான் நாடோறும் போற்றுவேன்.

இலக்கணக்குறிப்பு :

" கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே " (நன்.409)

என்றஇலக்கணம் மேகவிடு தூதுக்கு அமையும். (28)

எண்சீர்த் தாழிசை

வீரைப் புனலைக் குடித்து விடுக்கவும்

விண்ணவர் ஊரில் புகுந்து திரும்பவும்
பாரைப் புரப்பவர் தம்மை வணக்கவும்
பாடிய வாறு பலித்திடக் காணவும்
போரைப் புரக்கும் மிலேச்சரை வெல்லவும்
பொன்எனச் செம்பு பொலிந்திடக் காட்டவும்
கூரைப் பொருந்(து)அயில் நாடித் தெளியவும்
குன்றக் குடியில் குகன்அருள் செய்ததே.

குறிப்புரை : வீரைப்புனல்= கடலின் உப்புநீர். வணக்க= பணியுமாறு செய்ய. மிலேச்சர்= மதிகேடர். அயில்= வேல்.

பொழிப்புரை : கடலின் உப்புநீரினைக் குடித்து உமிழவும்,தேவருலக அமராவதிக்குச் சென்று திரும்பிவரவும், நாடாளும் அரசரைப் பணியுமாறு செய்யவும், பாட்டுப் பலிக்குமாறு செய்யவும், போரிடுவதை ஆதரிக்கும் மதிகேடரை வெல்லவும், செம்பு உலோகத்தைப் பொன்னாக்கி ஒளிரச் செய்யவும், கூர்மையான வேலினை ஆராய்ந்து தெளிவுபெறவும் எனக்கு அருளியவன் குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமான். (29)

வஞ்சித்துறை (இருசீர்)

செய்யகுன் றக்குடி
ஐயன்அன்(பு) உற்றிடில்
மையல்நெஞ்(சு) அற்(று)உயர்
மெய்அறம் சிக்குமே.

பொழிப்புரை : சிறந்த குன்றக்குடிப் பெருமானின் அருள்பொருந்தின் மனமயக்கம் ஒழிந்து மெய்யான அறவாழ்வு கைப்படும். (30)

எண்சீர்க் கழிநெடில்

(கைக்கிளை - ஒருபாற் காமம். தலைவன் தன்மை)

சிக்கம்இல கிடவெளிறு சூழ்ந்த மைக்கண்
சிறிதுசிவப் புறத்தோகை விரித்துக் கூவிக்
தக்கநடம் ஆடுமயில் பரியில் ஏறும்
சரவணவேள் மருவுகுன்றக் குடியின் மானாள்
கைக்கமலத்(து) அணியும்வளை ஒன்றோ டொன்று
கலகலெனப் பேசுமொலி காதிற் கேட்டால்
இக்கன்வந்து பொருகின்றான் பவள வாய்ச்சொல்
இசைகேட்டால் என்படுமோ இதயம் மாதோ.

குறிப்புரை : சிக்கம்= (மயிலின் தலையிலுள்ள) சிகை. வெளிறு= வெண்ணிறக் கோடு. மைக்கண்= கருங்கண். மானாள்= மான்போன்றவள். இக்கன்= கரும்பு வில்லேந்திய மன்மதன்.

பொழிப்புரை : தலையிலுள்ள சிகைவிளங்க, வெண்மையான கோடு சூழ்ந்த கரியகண் சிறிதுசிவக்க, தனது தோகைவிரித்துக் கூவித் தக்கபடி ஆடும்மயிலாகிய குதிரையில் ஏறுகிறவனாகிய அனைவரும் விரும்பும் சரவணன் எழுந்தருளியுள்ள குன்றக்குடியில் வாழும் மான்போன்ற இவளது கைத்தாமரையில் அணிந்த வளையல்கள் கலகல என்று எழுப்பும் ஒலியைக் கேட்டதுமே மன்மதன் என்னுடன்போரிடுகிறான் - காமம்மிகுந்தது.

இவளது பவளவாய்ச்சொல் கேட்டால் என்இதயஎன்னபாடுபடுமோ !

இலக்கணகுறிப்பு : மயிற்பரி - உருவகம். கலகல -இரட்டைக்கிளவி. பவளவாய் - உவமைத்தொகை. . (31)

பன்னிருசீர்த் தாழிசை (நகர்ச் சிறப்பு)

மாதர் ஆடலின் ஓதையும் வேதியர்
மறைஓ திடும்ஒலியும்
வளர்தமிழ்க் காவலர் துதியும் தேவர்கள்
மகுடம்உ ரிஞ்சுதலும்
பூதர்கள் நாயகர் ஆதியர் தம்குறை
புகல்வதும் உயர்வேழம்
பொங்கும தங்கொடு பிளிறலும் மயிலும்
பூவையும் அஞ்சுகமும்
சாதக மும்பினும் உள்ளன வும்பயில்
சத்தமும் இடிநாணத்
தகுமும் முரசொடு விழவின் முழங்கும்
சலதிஅ டங்கிடினும்
சீதம ணங்கமழ் நறுமலர் பெருகச்
செறிபொழி லிடைமீறும்
திருவளர் குன்றக் குடிமுரு கனையே
சிந்திப் பதுநன்றே.

குறிப்புரை : ஓதை= ஓசை. உரிஞ்சுதல்= கூட்டமிகுதியால் ஒன்றுடன் ஒன்று உராய்தல். பூதர்= பூதலத்தார். நாயகர்= அரசர். பொங்கு= பெருகும். அஞ்சுகம்= கிளி. சாதகம்= வானம்பாடி. மும்முரசு= படை, கொடை, மணமுரசுகள் சலதி= கடல். செறி= அடர்ந்த. மீறும்= மிக்குவிளங்கும்.

பொழிப்புரை : மகளிர் நடனஓசை, வேதியர் மறை ஓதும் ஒலி, தமிழ்வளர்க்கும் நாவலர்களின் துதிஒலி, கூட்டமிகுதியால் தேவர்களின் மகுடங்கள் ஒன்றோடொன்று உராயும் ஒலி, புவிஉலகினர் அரசர்கள் முதலியோர் தத்தம் குறைகளை முறையிடும் ஒலி, சிறந்த ஆண்யானைகள் மதம்பெருகப் பிளிறும் முழக்கம், மயில் மைனா கிளி வானம்பாடி மற்றும்பிற பறவைகள் இடும்பலவகைச் சத்தமும், இடிமுழக்கமும் நாணமுழங்கும் விழாக்கால மும்முரசுகளின் முழக்கமும் ஆகிய இவை கடலலைகளின் பேரொலியை அடக்கினாலும், குளிர்ந்த மணங்கமழும் நறுமலர்களை மிகுதியாகச் சொரியும் சோலைகளின் பெருக்கத்தால் விரும்பும்தன்மை வளரும் குன்றக்குடி முருகனையே சிந்திப்பது நலந்தருவதாகும். (32)

நேரிசைவெண்பா

நன்றுதவும் நின்பெருமை நாகர்பிரான் ஓதரி(து)
என்(று)உணர்ந்து வாழ்வோர்க்(கு) இழுக்(கு)உண்டோ - குன்றுள்உயர்
கோலாக லம்பொருந்தும் குன்றக் குடியினர்காக்
காலாக லம்பொருந்தும் கா.

குறிப்புரை : நாகர்பிரான்= நாகங்கட்கரசன் - ஆதிசேடன். கோலாகலம்= (வேல்வேல், முருகா என்ற) ஆரவாரம். காலாகலம் பொருந்தும்= எந்நேரமும் கருணைபொருந்தும். கா= காத்தருள்க.

பொழிப்புரை : குன்றுதோறாடலில் உயர்ந்ததும் எப்போதும் ஆரவாரம் பொருந்தியதும் ஆகிய குன்றக்குடியில் வாழ்வோர்பொருட்டு, எந்நேரமும் கருணை பொருந்திய உனது பெருமையை நாகங்கட்கு அரசனான ஆயிரம் நாக்குடைய ஆதிசேடனாலும் சொல்லுதற்கரியது என்று உணர்ந்து நடப்போர்க்கு இழுக்கு ஏதுமில்லை. அவர்களைக் காத்தருள்க.

விளக்கம் : ஆதிசேடன் ஆயிரம் நாக்கினன் என்பதுவழக்கம். ஆயிரம் நாக்குகளாலும் நிறைவாகப் புகழ்தற்கரியவன் குன்றக்குடியான் என்றார். (33)

கட்டளைக்கலித்துறை. திரிபு

காவிஅம் கண்ணினர்க்(கு உள்ளுரு கா(து)உனைக் கந்தஎன்று
கூவிஅங்(கு) அண்ணின் நலம்காட்டும் குன்றக் குடித்தலத்தைச்
சேவியம் கண்ணின் அடல்கன்னல் வேளைச் செயித்(து)இதணின்
ஓவியங் கண்ணினது) ஆறெழுத்(து) ஓதல் உறுவ(து)என்றே.

பதவுரை : காவிஅம் கண்ணினர்க்கு= குவளை மலர்போன்றதும் அழகியதும் ஆகிய கண்களையுடைய மகளிர் பொருட்டு மனம்உருகாமல், உனைக்கந்த என்று கூவி= உன்னைக் கந்தப்பெருமானே என்றுகூவி. அங்குஅண்ணின்= குன்றக்குடியை அடைந்தாலும். நலம்காட்டும்= திருவருள் புரியும். குன்றக்குடித்தலத்தைச் சேவியம்= குன்றக்குடியானை வணங்கோம் என்பார். கண்ணின் கன்னல் அடல்வேளைச் செயித்து= கணுக்களையுடைய கரும்பேந்திய மன்மதனை வென்று. இதழ் நின்= தம் உதடுகளால். ஓவிய கண்ணினது= அழகிய பெருமைமிக்கதுமான. ஆறெழுத்து ஓதல் உறுவது என்று= திருஆறெழுத்தை - சரவணபவ மந்திரத்தைச் செபிக்கும் பேற்றினைப் பெறுவது எந்நாளில்.

பொழிப்புரை : குவளைமலர் போன்றதும் அழகியதும் ஆகிய கண்களுடைய மகளிர்க்காக மனம் உருகாமல் உன்னைக் கந்தப்பெருமானே என்று கூவிக் குன்றக்குடியை அடைந்தாலும் திருவருள் புரியும் குன்றக்குடியானனை வணங்கமாட்டோம் என்பவர்களும், கணுக்களுடைய கரும்பேந்திய மன்மதனை வென்று தம் உதடுகளால் அழகிய பெருமைமிக்க திருஆறெழுத்தைச் செபிக்கும் பேற்றினைப் பெறுவது எந்நாளில் ? இப்போதே

அருள்க.

இலக்கணக்குறிப்பு : ஓவியக்கண் எனற்பாலது ஓவியங்கண் என்று வந்தது மெலித்தல் விகாரம்.

அம்மானை

மூவர்கூடி ஆடும் இவ்வாடலில் முதலாமவள் ஒரு செய்தியைக்கூற, இரண்டாமவள் அச்செய்திபற்றி ஓர்ஐய வினாஎழுப்ப, மூன்றாமவள் இருவர் கருத்துக்கும் பொருந்த விடைகூறுவது அம்மானைப் பாடலமைப்பு. இம்மூவர்க்கும் 2+2+1= ஆக 5அடிகளுடையது இது.

என்றற்(கு) அனைமுதலாம் ஈரிரண்டு தாயகமும்
குன்றக்குடியிற் குருபரனே அம்மானை
குன்றக்குடியில் குருபரனே ஆமாகின்
மன்றத்து முந்தஅருள் வைக்குமோ அம்மானை
மாதனத்தை தந்துமன்றோ வாழ்விக்கும் அம்மானை.

குறிப்புரை : அனை= தாய். ஈரிரண்டு தாயகம்= தாய் தந்தை குரு தெய்வம் ஆகிய பற்றுக்கோடுகள். மன்றத்து முந்த : மன்+ தத்து+ முந்த= சேரும் ஆபத்தை நீக்கத் தாயாய். மன்றத்து+ முந்த= சான்றோர் அவையில் முந்தி இருக்கத் தந்தையாய். மன்ற+ அத்து+ முந்த= நிச்சயமாய் முந்தி இருக்கக் குருவாய் (அத்து - சாரியை.). மன்றத்தும்+ உந்த= வானுலகிலும் தெய்வமாய்ச் செலுத்தத் தெய்வமாய். மாதன்+ அம்+ தந்து = மகளிர் கூட்டமுடைய மன்மதனின் அழகுதந்து. மா+தனத்தை+தந்து= பெருஞ்செல்வம் தந்து.. மா+தனத்தை+தந்து= திருமகளின் சேர்க்கையைத் தந்து. மா+தனத்தை+ தந்து= மாண்புடைய அறிவுத்தன்மை தந்து. என்று" மன்றத்துமுந்த " என்பதும், " மாதனத்தைத் தந்து " என்பதும் ஆகிய இரண்டும் நான்கு வெவ்வேறு பொருள்தந்த சிறப்புக்காண்க.

அம்மானைக்கவிதையின் இறுதிப்பகுதியை பலர் இரண்டு அல்லது முப்பொருள் தரப்பாடுவர். அடிகள் நாற்பொருள் பயக்க இங்குத்தந்தது தனிச்சிறப்புடையது.

பொழிப்புரை : எனக்குத் தாய் முதலாகச்சொல்லப்பட்ட் தாய் தந்தை குரு தெய்வம் ஆகிய நான்கின் தாயகம் குன்றக்குடியில் உள்ள மேலான குருவாகிய அருள்தரு சண்முகநாதப்பெருமானே ஆவான். குன்றக்குடிக் குருபரனே தாயகமாயின் மன்றத்துமுந்த அருள்தருவானோ ? அவன் மாதனத்தைத் தந்தும் அல்லவா வாழ்விப்பான்.

விளக்கம் : அனை முதலாம் ஈரிரண்டு : " மன்னுயிர்க்குத் தாய் தந்தை இருதெய்வம் உறவுமுதல் மற்றும் நீயே " (திருவருட்பா.)

இலக்கணக்குறிப்பு : மாதனத்தைத் தந்தும் என்பதில் உள்ளவும்மை,

மன்றத்து முந்த என்ற இறந்தது தழுவியவும்மை. எனவே மாதனத்தைத் தந்தும் என்பது இருவர் கருத்துக்கும் பொதுவாய் நின்றநலம்நோக்குக (35)

அறுசீர் விருத்தம்

மானிடம் பெற்றுளார்க்கு வகுத்தநூற் பொருளோர் நான்கும்
வான்இடம் புரப்போர் நாண வலிந்(து)எமக்(கு) அருள்வான் கண்டீர்
ஆன்இடத்து இமயப் பாவை அருகுறப் பெரியோர் காணும்
கோனிடத்(து) உதித்துக் குன்றக் குடித்தலத்(து) அவிரும் கோவே.

குறிப்புரை : மானிடம்= மனிதப்பிறப்பு. நான்கு= அறம் பொருள் இன்பம் வீடு. ஆன்= விடை. இடத்து= இடப்பாகத்தில். பெரியோர்= ஞானியர். கோன்= சிவபிரான்.

பொழிப்புரை : மானிடராகப் பிறந்தவர்க்காக வகுக்கப்பெற்ற அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நாற்பொருளையும், தேவர்களும் தாங்கள் பெறவில்லையே என்று வெட்குமாறு, விடைமேல் பார்வதிதேவியைத்தனது இடப்பக்கம் இருப்பதை ஞானியர் காணுமாறு காட்சிதரும் சிவபிரான் அருளிய முருகனாகிய குன்றக்குடிப் பெருமான் எனக்குத் தானே வலியவந்து அருள்புரிவான்.

இலக்கணக்குறிப்பு : கண்டீர் - முன்னிலையசை. (36)

வஞ்சி விருத்தம் (முச்சீர்)

கோலமிகு குன்றக் குடி
வேலனது வெண்குக் குடம்
ஓலமிட உம்பர்த் தலம்
ஞாலமொடு நன்(று)உற் றதே

குறிப்புரை : வெண்குக்குடம்= வெண்ணிறச் சேவல். ஓலம்= நீண்ட கூவுதல். உம்பர்த்தலம்= தேவருலகம்.

பொழிப்புரை : அழகுமிக்க குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமானின் கொடியாகிய வெண்ணிறச்சேவலின் நீண்ட கூவுதலால் இவ்வுலகத்துடன் தேவருலகமும் நன்மைபெற்றது. (37)

கட்டளைக்கலிப்பா

உற்ற வர்க்கும் உறவோர்க்கும் தன்உயிர்
ஒன்று மேதுணை என்றெண்ணி உண்மைநூல்
கற்ற வர்க்கும் தவத்தோர்க்கும் சேர்ந்திடாக்
காசு தேடிக் கலங்கிட லாகுமோ
பெற்ற வற்கும் குறுமா முனிக்கும்ஓர்
பிரண வப்பொருள் பேசிய தேசிகா
கொற்ற வர்க்கும் துணையான வேலவா

குலவு குன்றக் குடிக்கோவிற் கூத்தனே.

குறிப்புரை : உற்றவர்= தன்னைச் சரணடைந்தோர். உறவோர்= உறவினர். பெற்றவன்= தந்தையாம் சிவபிரான். பேசிய= உபதேசித்த. தேசிகா= குருவே. கூத்தனே= கடவுளே.

பொழிப்புரை : தன்னைப்பெற்ற தந்தைக்கும், அகத்தியமுனிவர்க்கும் ஓங்காரப்பொருள் உபதேசித்த குருவே ! வெற்றிபெற்றவர்க்கும் துணையான வேலவனே ! குன்றக்குடிக் கோவிலில் எழுந்தருளியுள்ள கடவுளே ! உன்னைச் சரணடைந்தவர்க்கும், அவர்களின் சுற்றத்தார்க்கும், தன்னுடைய உயிரைத் தானறப்பெற என்றஎண்ணி மெய்ந்நூல் கற்றவர்கட்கும், தவநிலையினர்க்கும் உரிமையாகாத காசினைத் தேடி கலங்கலாமோ ? கலங்கக் கூடாது. (38)

இன்னிசைவெண்பா

கூத்தன் பரவவளர் குன்றக் குடிக்குகனே
காத்தருள வல்ல கடவுளெனக் கண்டிறைஞ்சிப் - பூத்தமலர்
கொண்(டு)அவன்தன் போர்வேலைப் பூசைபுரிந்(து)
ஏத்தவல்லார் தம்அடிமை யாம்.

குறிப்புரை : கூத்தன்= சிவபிரான். வளர்= உயர்ந்த.

பொழிப்புரை : சிவபிரான் போற்ற உயர்ந்த குன்றக்குடிக் குகன்தான் நம்மைக் காத்து அருள்புரிய வல்ல கடவுளென்று எண்ணி, அவனைக்கண்டு வணங்கி, அன்றலர்ந்தமலர்களால் அவனது போர்வல்ல வேலினைப் பூசித்துப் போற்றும் வல்லமையுடையார்க்கு நாம் அடிமையாவோம். (39)

குறளடிவஞ்சிப்பா

யாம்எம(து) எனும் தாமதர் தமை, நாளும் துதித்(து) ஆளும் குரு
எனவே பணிந்(து) அனமேல் இவர், விதிம தன்சமன் சதித விர்த்தவர்
போல்ம கிழ்பவர் பால்மரு விலன், அதனால்
வெள்ளிய வரைபோல் விளங்குருக் காட்டித்
தெள்ளிய மறையின் சிரப்பொருள் உணர்த்திக்
கோதறு தொண்டர் குழுவில் கூட்டி
ஆதர(வு) உடனுற்(று) அருள வேண்டும்
குஞ்சரம் பிளிறக் குரக்கினம் புயலென்று
அஞ்சல் உறீஇ அலமரும் பொழில்சூழ்
குன்றக் குடியில் குலவுசிற் பரனே.

குறிப்புரை : யாம் எமது= அகங்கார மமகாரம். தாமதர்= தாமத குணத்தர். துதித்து= போற்றி. அனமேல் இவர்விதி= அன்னஊர்தி ஏறும் நான்முகன். மதன்= மன்மதன். சமன்= யமன். சதி தவிர்த்தவர் போல்= வஞ்சனையை நீக்கியவர் போல். இம்மூவர் சதியாவன : பிறப்பு,

காமநுகர்ச்சி, இறப்பு என்பன. மருவிலன்= சேரமாட்டேன். சிரப்பொருள்= முடிந்த முடிவு. குஞ்சரம்= யானை. புயல்= மேகம். அஞ்சல் உறீஇ= அஞ்சி. அலமரும்= துன்புறும். சிற்பரன்= ஞான வடிவன்.

பொழிப்புரை : யானைபிளிறக்கேட்ட குரங்குக்கூட்டம், அப்பிளிறலை மேகத்தின் இடிமுழக்கால், பெருமழைவரும் என்று அஞ்சித்துன்புறும் சோலைசூழ்ந்த குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள ஞானமயனான மேலானவனே ! யாம் எமது என்று நினைத்துச்செயற்படும் தாமத குணத்தரை நாடோறும் போற்றி, ஆட்கொண்டருளும் குருஅவர்கள் என்று வணங்கி, அன்ன ஊர்திஏறும் நான்முகன்தரும் பிறப்பு, மன்மதன் தரும் காமநுகர்ச்சி, யமன்தரும் இறப்பு ஆகிய அவர்களின் வஞ்சனைகளை நீக்கியவர்கள் போல் தமக்குள் மகிழ்பவர்களுடன் நான் நட்புக்கொள்ளமாட்டேன். அதனால் நீறுபூசியதால் வெண்மையான மலைபோல் தமது உருவம் விளங்க, தெளிந்த உபநிடதம் கூறும் மெய்ப்பொருளைக் காட்டிஉணர்த்தும் குற்றமற்ற தொண்டர் குழுவில் என்னைச்சேர்த்து அன்புகாட்டி அருளவேண்டும்.

விளக்கம் : இக்குரங்குகளின் செயல், " புலனைந்தும் பொறிகலங்கி " என்று தொடரும் முதல்திருமறை கூறும் குரங்குகளின் செயலை நினைவூட்டுவது. " யான் எனது என்னும்செருக்கு " என்ற திருக்குறட்கருத்தின் விளக்கம் " யாமெமது என்னும் தாமதர்.....மருவிலன் " என்பது. தொண்டர் கூட்டம் பற்றி " அன்பரொடு மரீஇ " என்ற சிவஞானபோதம் சூத். 12 இன் விளக்கமாக," கருணையொடு, நிலையில் பொருளும் நிலையியற்பொருளும், உலையா மரபின் உளங்கொளப் படுத்திப், புல்லறிவு அகற்றி நல்லறிவு கொளீஇ, எம்ம னோரையும் இடித்துவரை நிறுத்திச், செம்மை செய்யத் திருவுளங் கொண்ட, நற்றவத் தொண்டர் கூட்டம், பெற்றவர்க்கு உண்டோ பெறத்தகா தனவே " (சிதம்பர மும்மணிக் 11.) அமையும்).

கலிவிருத்தம்

பரவு வார்க்(கு)இரு பங்கயத் தாள்அருள்
குரவ னேஎழில் குன்றக் குடிக்குள்வாழ்
சரவ ணோற்பவ னேஉனைச் சார்ந்தும்யான்
கரவு கொண்டு கலங்குவ(து) என்கொலோ.

குறிப்புரை : குரவனே= குருவே / குராமலர் மாலையணிந்தவனே. கரவு= அற்பஎண்ணம். என்கொல்= ஏன்.

பொழிப்புரை : தன்னை வணங்குவோர்க்குத் திருவருளாகிய தன்திருவடிகளை அருள்பவனே ! குருவே ! சரவணப்பொய்கையில் சார்ந்துதோன்றியவனே ! குன்றக்குடியில் வாழும் உன்னைச்சார்ந்தும்கூட, சார்ந்ததன் வண்ணமாகாமல் நான் அற்பஎண்ணங்கொண்டு கலங்குவது ஏன் ?

விளக்கம் : உயிர்களின் இயல்பு சார்ந்ததன் வண்ணமாதலாயிருக்க, மேலான உன்னைச்சார்ந்தும் மேலானஎண்ணம் பெறாமைஏன்?என்றார்.(41)

கொச்சகம்

என்கனவில் பலகால்வந்(து) இயம்பியசொல் சோராமே
கொன்கலபச் சிகியாய் குரகதத்தில் வந்தருள்வாய்
வன்கணர்க்கும் திருவருளே வழங்குகுன்றக் குடிக்கிரிமேல்
மின்கலுழ்வேற் படையேந்தி விளங்குகுகப் பெருமானே.

குறிப்புரை : இயம்பிய சொல்= " அருணைக் கிளிதான் - அருணகிரியார் தான் - நீ " என்றது. கொன்கலப சிகி= பெருமைமிக்க தோகைமயில். குரகதம்= பரியாகியமயில். வன்கணர்= கொடிய மனத்தர். மின்கலுழ்= ஒளிபரப்பும்.

பொழிப்புரை : கொடியமனத்தவரையும்கூடக் கொடுமைப்படுத்தாது திருவருளையே வழங்குகின்றவனாய்க் குன்றக்குடி மலைமேல் ஒளிபரப்பும் வேல்ஏந்தி அருட்காட்சி வழங்கும் அருள்தரு சண்முகநாதப் பெருமானே ! பெருமைபொருந்திய தோகையுடைய மயிலினையுடையவனே ! நீ எனது கனவில்தோன்றி என்னை " நீ அருணகிரிநாதர் தான் " என்றது பிழைபடாமல், அருணகிரியார்க்குக் காட்சிதந்ததுபோல்,உனது குதிரையாகிய மயிலில் ஏறிவந்து காட்சியருள்க.

விளக்கம் : அருணகிரியார்க்குத் திருவண்ணாமலை, வயலூர் முதலிய பலதலங்களில் முருகப்பிரான் மயிலில் வந்து காட்சிதந்தான் என்பதற்குத் திருப்புகழில் அகச்சான்றுகள் உண்டு.

மடக்கு (கொச்சகம்)

பெருகுகுன்றக் குடிக்கோவில் பேணுவார் குடிக்கோவில்
பருமலர்ச்செந் திருஅருளும் பரவுநர்க்குத் திருஅருளும்
தரும்அடியார்க்(கு) உயிராகும் தவபுரிவோர்க்(கு) உயிராகும்
பொருபிறவும் துரந்தரனே பொருந்தும்அயில் துரந்தரனே.

பதவுரை : பெருகு= வளரும் சிறப்புடைய. குன்றக்குடிக் கோவில்= குன்றக்குடியிலுள்ள அருள்தரு சண்முகநாதன் திருக்கோவிலை. பேணுவார்க்கு= பாதுகாப்பவர். குடிக்கு= குடும்பத்தினர்க்கு. ஓவுஇல்= இடையறுதல் இல்லை. பருமலர்ச் செந்திரு அருளும்= பெரிய மலராகிய தாமரையில் இருக்கும் திருமகளின் செல்வத்தை அருள்வான். பரவுநர்க்கு= வழிபடுவோர்க்கு. திருஅருளும்= திருவருளை வழங்கும். அடியார்க்கு= மெய்யன்பர்க்கு. உயிராகும்= உயிரை ஒப்பாவான். தவம்புரிவோர்க்கு= தவம் செய்பவர்க்கு. உய்= (மீண்டும் பிறவியில்) செலுத்தும். இரு= பாவபுண்ணியம் ஆகியவற்றால். ஆ= உண்டாகும். கும்பு= கூட்டமாக. ஒரு= ஒன்றுபட்ட. பிறவும்= பிற வினைகளையும். துரந்து= அறவே நீக்கும். அரனே= சிவபெருமானாகவே. அயில் துரந்தரன்= வேல் ஏந்தியமுருகன் பொருந்தும்=

பொருந்தி இருந்து அருள்வான்.

பொழிப்புரை : அருள்வளரும் சிறப்புடைய குன்றக்குடியிலுள்ள அருள்தரு சண்முகநாதப்பெருமான் திருக்கோவிலைப் பாதுகாப்பவர் குடும்பத்தார்க்கு இடையறுதல் இல்லை, பெரியமலராகிய தாமரையிலிருக்கும் திருமகளின் செல்வத்தை அருளும், வழிபடுவோர்க்குத் திருவருளைவழங்கும், மெய்யடியார்க்கு அவர்களை மீண்டும் பிறவியில் செலுத்தும் பாவ புண்ணிம் ஆகியவற்றால் உண்டாகும் கூட்டமாக ஒன்றுபட்ட பிறவினைகளையும் அறவேநீக்கும் சிவபெருமானாகவே வேலேந்தியமுருகன் பொருந்தி இருந்து அருள்வான். (43)

களி

பதினான்கு சீர்

துரந்து சூரனை வென்று மீண்டருள் சுத்த ஞானதி வாகரன்
தூய குன்றக் குடிக்குள் மேவிய சுந்தரக்குகன் அன்பினால்
கரந்தி டா(து)அருட் கள்ளை உண்டுக ளித்து ளோம்ஒரு காலமும்
கால னுக்(கு)அயர் கின்றி லேம்இது கண்டு பாடுமின் கவிஞர்காள்
இரந்து சுற்றம்வ ளர்க்க வேண்டி இராவ ணன்திறல் வாலியை
எய்து கொன்றதும் வீமன் வானரம் யாவும் உய்ந்திட வந்ததும்
நிரந்த ரம்புகழ் பெற்ற மாருதி நிகரில் வான்மலர் கொண்டதும்
நீதி சேர்தரு மன்கை ஏற்றதும் நித்த மும்சொலல் நிற்கவே.

குறிப்புரை : துரந்து= துரத்தி. திவாகரன்= சூரியன். கரந்திடாது= ஓடி ஒளியாது. அருட்கள்= திருவருளாகிய தேன். இராவணன்= இருள்நிறம் - கருநிறம் கொண்ட இராமன். வீமன்= பறவைகட்கு அரசன் - கருடன். வானரம் யாவும்= வானரப்படை எல்லாம். மாருதி= வாயுவின் மகனான வீமன். வான்மலர்= விண்ணுலகின் பாரிசாத மலர். மன்= அரசன் - இந்திரன். கை= பழி.

பொழிப்புரை : சூரபத்மனை துரத்தி வெற்றிபெற்று மீண்ட தூயஞான சூரியனும், குன்றக்குடியில் எழுந்தருளியுள்ளதூய அழகனுமான குகன் அன்புடன் அருளிய திருவருளாகிய தேனினை ஓடிஒளியாது பருகிக் களித்தவர் நாங்கள். எந்தநேரத்திலும் யமனைக்கண்டு சோர்வுகொள்ளோம். நீங்கள் உங்களையும் சுற்றத்தாரையும் பேணவேண்டி; கரிய நிறமுடைய இராமன் ஆற்றல்மிக்க வாலியை அம்பெய்து கொன்றதை, பறவைகட்கு அரசனான கருடன் வானரப்படை உயிர்பெற வந்ததை, நிலையான புகழ்பெற்ற வாயுவின் மகனான வீமன் விண்ணுலகின் பாரிசாதமலர் கொண்டுவந்ததை, நீதிவழி ஒழுகவேண்டிய தேவேந்திரன் அகலிகை காரணமாகப் பழிப்பட்டதை நாடோறும் பாடுவதை நிறுத்துங்கள். குகனையே பாடுங்கள்.

விளக்கம் : இராமாயண, மாபாரத இதிகாசச் செய்திகளைப் பாடுவதை

நிறுத்தி, நித்தமும் குன்றக்குடிக் குகனைப்பாடினால். யமன்பொருட்டு அஞ்சவேண்டாம் என்றார். (44)

நேரிசை வெண்பா

நிற்கும் நிலையுணர்த்தி நேரிழையார் வாயுரைக்கும்
சொற்(கு)உருகு மோகம் தொலைத்தாண்டு - நற்குணமே
துன்றக் குடிலையினில் தோய்பொருளைக் காட்டவல்லான்
குன்றக் குடிவளரும் கோன்.

குறிப்புரை : நிற்கும் நிலை= பற்றற்றுவாழும் தன்மை. வாய்உரைக்கும்= உதட்டளவில் கூறும். குடிலை= பிரணவம்.

பொழிப்புரை : பற்றற்று வாழும் தன்மையை உணர்த்தி, விலைமகளிர் உதட்டளவில் சொல்லும்சொல்லுக்கு மனம்உருகும் மோகத்தைத்தொலைத்து, நம்மைஆட்கொள்வதுடன், நற்குணமே பொருந்தச்செய்து, பிரணவத்தின் உட்பொருளை உணர்த்தவும் வல்லவன் குன்றக்குடி அருள்தருசண்முகநாதன் ஆவான்.

விளக்கம் : வாயுரையாவது உள்ளம் ஒட்டாத உதட்டளவிலானசொல்.. ஓங்காரப் பொருள் : சிவபிரானிடம் முருகன் , ஓங்காரம் என்பது அகர உகர மகரம் ஆகிய மூவெழுத்துகளும் ஒன்றுகூடியதாதலின் (சமட்டியாதலின்) அது சிவபரம்பொருளையே குறிக்கும் என்றதே சரி. நான்முகன் அகந்தையால், ஓங்காரத்தை அகர உகர மகரம் என்ற தனித்தனி மூவெழுத்துகளாகக் (வியட்டியாக) கொண்டு அவை படைத்தல் காத்தல் அழித்தற்குரிய நான்முகன் மால், அரன் ஆகியோரைக்குறிக்கும் என்றது பிழை. (இதனைக் காஞ்சிப்புராணம் குமரகோட்டப்படலம் தெளிவு செய்யும்) (45)

கட்டளைக் கலித்துறை

கோனாகி உண்மைக் குருவாகி யார்க்கும் குலதெய்வமாய்
நானாகி நின்றதும் தானாகித் தீயவர் நாடரிய
வானாகி ஒப்பறும் குன்றக் குடியில் வளருமலைத்
தேனாகித் தித்திக்கும் செவ்வேள்பொற் றாள்களில் சேர்வதுண்டே.

குறிப்புரை : உண்மை= ஞானம். நானாகி நின்றதும் தானாகி= நான் என்ற நிலைமாறி அவனேயாகியிருக்கும் நிலை. வளரும்= வற்றாது அருள் வளரும். உண்டு= உள்ளன.

பொழிப்புரை :அரசனாகி, ஞானகுருவாகி, யாவர்க்கும் குலதெய்வமாய், நான் என்ற நிலைமாறி அவனேயாகியிருக்கும் நிலையாகி, தீயவர்களால் அடைதற்கரிய மேலானவனாய், குன்றக்குடி மலையில் தெவிட்டாது இனிக்கும் அருள்வளரும் ஒப்பற்ற தேனாகி விளங்கும் செவ்வேட் பெருமானின் அழகிய திருவடிகள் உள்ளன.

இலக்கணக்குறிப்பு : உண்டு - இருதிணை ஐம்பால் மூவிடப் பொதுவினை. உண்டே - ஏகாரம் அசைநிலை.

எண்சீர்த் தாழிசை :

உண்(டு)உண் டுதுயின் றெழும்ஊ ரவருக்(கு)
உறவா கிஉழன் றுமுயன் றுபொருள்
கொண்(டு)உண் கண்மடந் தையரருக்(கு) அருள்வோர்
குன்றக் குடியில் குறுகப் பெறினும்
வண்டுண் டகடம் பணியும் புயவேள்
மறலிக் கும்மதப் பயலுக் கும்வெறும்
புண்துன் றுதலைப் பிரமற் கு(ம்)மனம்
புலரப் பொருமன் புகழைத் தருமே.

கூட்டுமுறை : உண்டு உண்டு.....அருள்வோர், வண்டுண்ட கடம்பணியும் புயவேள் குன்றக்குடியில் குறுகப்பெறினும், மறலிக்கும் ..... புகழைத்தருமே.

குறிப்புரை : உண்கண்= பார்வையால் பிறர் மனத்தை உண்ணும் கண்கள். அருள்வோர்= வழங்குபவர். கடம்பு= கடம்பமலர்மாலை. மறலி= யமன். மதப்பயல்= மன்மதன். மனம் வெறும்தளர= மனம் வீணேதளர. மன்பொரு புகழ்= அரசனோடொத்த புகழ்தரும்.

பொழிப்புரை : நாடோறும் உண்டுஉண்டு உறங்கிஎழுந்து ஊரார்க்கு உறவினனாய்த் துன்புற்று வாழ்ந்து, பாடுபட்டுப் பொருள்சேர்த்து அதனை, பார்வையாலேயே பிறர்மனத்தைத் தின்னும்கண்களுடைய வேசையருக்குத் தருகின்றவரும்; வண்டுகள் தேனுண்ணும் கடம்பமலர் மாலையணிந்த தோள்களுடைய அனைவரும் விரும்பத்தக்க அருள்தரு சண்முகநாதப் பெருமானின் குன்றக்குடியை அடைந்தமட்டிலேயே; யமன், மன்மதன், முருகனின் குட்டுதலால் புண்பட்ட தலையுடைய பிரமன் ஆகியோர் வீணே மனம்தளர, குன்றக்குடியை அடைந்தஅவர்க்கு அரசர் போன்ற புகழினை அவ்வூர்ப் பெருமான் அருள்வான். (47)

மருட்பா

புகழ்கொடுக்கும் ஆனந்த போதம் பெருக்கும்
இகழ்(வு)அறுக்கும் ஆறுவரை ஏற்றும் - திகழ்வடிவேல்
கொற்றவன் மருவிய குன்றக் குடியில்
உற்றவர் கரத்தால் உதவும்
நற்றவப் பயன்தோய் நனையா நீறே.

குறிப்புரை : ஆனந்த போதம்= இன்பமயமான ஞானம். ஆறு= பிறவிப்பேராறு. வரை= கரை. நல்தவப்பயன் உற்றவர் கரத்தால் தோய் உதவும் நனையாநீறே. தோய் உதவும்= எடுத்து வழங்கும். நனையா=

மணப்பொருள் கலவாத.

பொழிப்புரை : ஞானவடிவாய் விளங்கும் வேலேந்திய முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள குன்றக்குடியில் நற்றவப்பயன் பெற்றவர் தமது கையால் எடுத்துவழங்கும் மணப்பொருள் கலவாத திருநீறு, அதனப் பெற்றவற்குப் புகழ்தரும், இன்பமயமான ஞானத்தைப் பெருக்கும், இகழத்தக்கனவற்றை அறுத்தெறியும்,பிறவிபேராற்றிலிருந்து கரையேற்றும், பிறவாநிலை - வீடுபேறு அருளும்.

விளக்கம் : திருநீற்றில் மணப்பொருள் கலத்தலாகாது என்பதை " நனையா நீறு " என்று வலியுறுத்தினார்.

இலக்கணக்குறிப்பு : ஆறு - உருவகம் (48)

மடக்கு

கட்டளைக் கலிப்பா

நீறு போர்த்த கவுமார னாகமா நீறு போர்த்த கவுமார னாகமா
மீறு பாயலு றுப்பானை யன்றமை மீறு பாயலு றுப்பானை யன்றமை
வீறு தோய்ந்த வடிவேலன் பண்ணவர் வீறு தோய்ந்த வடிவேலன் பண்ணவர்
கூறுகுன்றக் குடிக்கோவி லாதியே கூறுகுன்றக் குடிக்கோவிலாதியே

பதவுரை : நீல்= (தென்றல்) காற்றை. து= தேராகச் செலுத்துகின்றவனும். போர்= உயிர்களுடன் போரிடும். தகவு= இயல்புடையவனுமான. மாரன்= மன்மதன். ஆகம்= மேனியின். மாநீறு= மாண்புடைய சாம்பலை. போர்த்த= தன்னுடம்பில் முழுவதுமணிந்த. கவுமாரன்= சிவனாகிய முருகன். நாகமாம்= பாம்பாகிய. ஈறு= பின்னப்பட்ட. பாயல்= படுக்கையை. உறுப்பான்= தன் அங்கமாக ய்டைய திருமால். அயன்= பிரமன். தம் ஐ= தமக்குத் தலைவனும். மீறுபாய்= மேம்பட்டுப் பொழியும். அல்= கரிய மதநீரை. உறுப்பு=தன்உறுப்பாகப் பெற்ற. ஆனையன்= விநாயகரை. தம் ஐ= தமது அண்ணனாகவுடையவனும். வீறுதோய்ந்த= பெருமை பொருந்திய. வடிவு= திருவுருவை. ஏலன்= அன்பர்க்கு அருளக் கொண்டவனும். பண்ணவர்= தேவர்களுக்கு. வீறு= வெற்றி. தோய்ந்த= அமையப்பெற்ற. வடிவேலன்= கூரிய வேலாயுதப்பெருமானும். பண்ணவர்= புலவர்கள். கூறு= பலவகைப்படுத்திப் போற்றும். குன்ற= மலையினங்களாகிய குடி= இருப்பிடங்களுக்கு. கோ= தலைவனும். வில்= தானேஒளிரும் தன்மை. ஆதிஏ= முதலியனவாக எண்ணப்படுகின்ற. கூறு= தன்மைகளைக் கொண்டு. குன்றக்குடி= குன்றக்குடி என்ற தலத்தின். கோவில்= திருக்கோவிலில் எழுந்தருளியுள்ள. ஆதியே= முழுமுதற்கடவுளேயாவர்.

பொழிப்புரை : தென்றல் காற்றைத் தேராகச் செலுத்துகிறவனும் உயிர்களுடன் போரிடும் இயல்புடையவனுமான மன்மதனது உடம்பின் நீறாகிய மாண்புடைய சாம்பலைத் தன்மேனியின் முழுவதும் அணிந்த

சிவனாம் முருகனும்; பாம்பாகிய பின்னப்பட்ட படுக்கையைத் தன்உறுப்பாகவுடைய திருமால், நான்முகன் இவர்களுக்குத் தலைவனும்; மேம்பட்டுப்பொழியும் கரிய மதநீரினைத் தனக்குரியதாகப் பெற்ற விநாயகரை அண்ணனாக உடையவனும்; பெருமை பொருந்திய தன்திருவுருவை அன்பர்கட்கு அருளக்கொள்பவனும்; தேவர்களுக்கு வெற்றிதந்த கூர்மையான வேலினை ஏந்தியவனும்; புலவர்கள் பலவகைப்படுத்திப் போற்றும் மலைகளாகிய இருப்பிடங்களுக்குத் தலைவனும்; தானே ஒளிரும் தன்மை முதலியனவாக எண்ணப்பெறும் தண்மைகளைக்கொண்டு குன்றக்குடிஎன்ற தலத்தின் திருக்கோவிலில் எழுந்தருளியுள்ள முழுமுதற்கடவுளேயாவார்.

விளக்கம் : அம்மை, உயிர்களின் மலம்தீர்த்து, வினைநேராக்கிச் சத்திநிபாதம்அருளி வீடுபேற்றுக்குத் தகுதியாகும்வரை மறைப்பாற்றலாய் - தரோதானசத்தியாய்ச் செயற்பட்டுபின் அருட்சத்தியாய் வீடருள்வாள். அவ்வீடுபேற்றில் வற்றாமுற்றா இன்பம் அருள்பவன் அப்பன். ஆனால் உயிர்களை வீடுபேற்றுக்குத் தகுதிப்படுத்தி வீடுபேற்றில் உய்த்தல், இறப்பும் பிறப்பும் இல்லாத மாறிலாப் பேரின்பத்தை அவற்றுக்கு அங்கு வழங்குதல் ஆகிய இருசெயல்களையும் தானொருவனே வழங்குபவன் குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமான் என்க. (49)

எண்சீர்த் தாழிசை

ஆதிக்(கு)ஒரு பொருள் ஆனதை அறியப்பகர் முருகோன்
அணிமேவிய குன்றக்குடி அமலன்புகழ் கோடி
நீதிச்சதுர் மறையாலும்நி கழ்த்தாதவை நிற்க
நிறைகல்விய(து) உடையேம்என நினையும்சில மூடர்
பாதிக்கலை மதிவாள்நுதல் மடவாரையும் மனிதப்
பதராம்அவர் தமையும்பகர் பண்புற்றிடல் என்னோ
சோதிக்கதிர் வேலேதுணை எனஓதிடும் நாவில்
தொலையாநடம் இடுதாள்உறு சொற்சுந்தர மாதே.

குறிப்புரை : சோதிக் கதிர்= பேரொளிவடிவமான ஞாயிறு. தொலையாநடம்= இடையறாது விளங்கும். தாள்உறு= திருவடிகள் பொருந்திய

பொழிப்புரை : பேரொளி வடிவான வேலே எனக்குத்துணை என்று சொல்லும் நாவில் இடையறாது விளங்கும் திருவடிகள் பற்றியசொற்களைப் பேசும் அழகியபெண்ணே ! அனைத்திற்கும் ஆதியான ஓங்காரப்பொருளைச் சிவபெருமானும் அகத்தியரும் அறியக்கூறிய இயல்பாகவே மலமிலானாம் குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமானின் கோடிகோடிப் புகழினை முறைப்படி நான்குமறைகளாலும் கூறமுடியாது. அதுகிடக்க, நிறைந்த கல்வி யுடையேன் என்றுதம்மை நினைக்கும் மூடர்சிலர், ஒளியுடைய அரைநிலவு

ஒத்த நெற்றியுடைய மாதரையும், மனிதப்பதர்களையும் புகழ்வது ஏன் ?
பெருமான்புகழே பேசுக. (50)

வண்டுவிடு தூது

சவலை வெண்பா

மாதரெல்லாம் என்னை மதிக்கஇன்னே வண்டினங்காள்
கோதறுசீர்க் குன்றக் குடிக்குகன்பால்
ஆதரவோ(டு) என்துயரம் அத்தனையும் சொல்லிஅவன்
சீதமலர் ஈயச் செயும்.

பொழிப்புரை : வண்டுக்கூட்டமே ! மகளிரனைவரும் என்னை மதிப்பதற்காக, குன்றக்குடிக் குகனிடம் என்பால் அன்புடன்போய் நான்அவனது தோள்மாலை பெறும்பொருட்டுப்படும் துன்பங்கள் எல்லாம்சொல்லி அவன் தனதுமாலையை எனக்குத்தருமாறு செய்யுங்கள்.

விளக்கம் : ஒருவிகற்பமாய் வந்து, இரண்டாமடி முச்சீரானமையின் இவ்வெண்பா சவலையானது. (51)

கட்டளைக் கலித்துறை

செய்யவள் போற்றுநம் குன்றக் குடியில் சிவகுருவாம்
மெய்யனைச் சண்முகப் பெம்மானைச் செங்கதிர் வேலவனை
ஐயமு றாத மனத்தால் கருதும் அடியவர்மேல்
எய்யவும் வல்லவ னோமல ரோனுக்(கு) இளையவனே.

குறிப்புரை : செய்யவள்= திருமகள். மெய்யன்= மெய்ப்பொருள். மலரோனுக்கு இளையவன்= நான்முகன் தம்பியான மன்மதன்.

பொழிப்புரை : திருமகள் போற்றிவாழும் குன்றக்குடியிலுள்ள நமது சிவகுருவாகிய மெய்ப்பொருளாம்அருள்தரு சண்முகநாதனை, செம்மைசான்ற வேலவனைச் சற்றும் ஐயமுறாத மனத்தால் நினைக்கும் அடியவர்மேல் நான்முகனுக்கு இளையவனான மன்மதன் மலரம்புகளை எய்யமாட்டான். அவ்வடியவர் காமவசப்படார். (52)

கலிவிருத்தம்

இளமை நீங்கரும் குமரனைக் கனல்விழி இலங்கும்
குளம்ஓ ராறுடைக் குரவனைக் குளிர்புனல் பணைசூழ்
வளமை மேவுகுன் றக்குடிப் புலவனை வழுத்தார்
கள)வு)உ றாமனம் பெறுவது கதையினும் கதையே.

குறிப்புரை : நீங்கரும்= என்றும் நீங்காத. குளம்= நெற்றி. குரவன்= குரு. பணை= நன்செய்வயல். புலவன்= தெய்வம். களவு= வஞ்சனை. கதையினும் கதை= வெறும்பேச்சு.

பொழிப்புரை : என்றும் இளையவனான முருகனை, கனற்கண்கள்

ஆறுவிளங்கும் ஆறுநெற்றிகள் உடைய குருவை, குளிர்ந்த நீருடைய நன்செய்வயல்கள் சூழ்ந்த வளமுடைய குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள தெய்வத்தை வணங்காதவர் வஞ்சனையில்லா மனம்பெறுவது என்பது வெறும்பேச்சாகும். (அவன் வஞ்சனையில்லாதவனாதலின் அவனை வணங்குபவரும் வஞ்சனைஇல்லா மனத்தராவர் என்க.) (53)

சந்தக்கவி

கலிநிலைத்துறை

தனதந்த தனதந்த தனதந்த தனதந்த தந்தத்தன

கதைகொண்ட சமன்வந்து பொருமுன்பு மலர்கின்ற கஞ்சக்கழல்
இதையங்கொ டுனைநம்பும் நிலைதந்து சுகமிஞ்சும் இன்(பு)உய்த்திடாய்
குதையொன்று சிலைஅங்கை யினர்நின்று புகழ்கின்ற குன்றக்குடி
அதைஎன்றும் அரசென்க அயிலும்கொ(டு) அமரும்பொன் அந்தத்தனே.

குறிப்புரை : சமன்= யமன். கஞ்சக்கழல்= தாமரைமலர் ஒத்த திருவடி. இதையம்= உள்ளம். மிஞ்சும்= மேன்மேல் பெருகும். குதை= வில்லின் இருநுனிகள். குதையொன்று சிலை= நாண்பூட்டிய வில். அயில்= கூர்மையான வேல்.. அந்த அத்தனே= அந்த குருவே.

பொழிப்புரை : நாண்பூட்டிய வில்லேந்திய வீரர்கள் நிலையாகப் புகழும் குன்றக்குடிக்கு அரசனாக, கூரிய வேலேந்தி அமர்ந்த அழகியகுருவே ! கதையாயுதம் ஏந்திய யமன்வந்து என்னுயிர்கொண்டு போகுமுன் உள்ளத்தால் உன்னை முழுமையாக நம்பும் நிலையினை எனக்கு அருளிப் பேரின்பம்மேன்மேலும்பெருகும் நிலையாகிய வீடுபேறு அருள்வாயாக.

இலக்கணக்குறிப்பு : இதையம்= எதுகை நோக்கிய நீட்டல் விகாரம். அந்தத்தன்= செய்யுள் விகாரம். (54)

வேற்றொலி வெண்டுறை

அந்தமுதல் பகரும் ஒருமூன்றிடத்தும் தானாகி
அயில்வேல் ஏந்திப்
பந்தம்அற்றோர் காணநிற்கும் குகனுறும்குன் றக்குடியைப்
பரவ வல்லார்
செந்தகைத் திருவும்வெண் திருவும் தோய்தரு
சுந்தரத் தோள்கொடு துலங்கு வார்களே.

குறிப்புரை : முதல் பகரும்= முதன்மையானவையாகக் கூறப்பெறும். அந்த ஒரு மூன்று= படைத்தல் காத்தல் அழித்தல் என்ற ஒப்பற்ற மூன்று. பந்தம்= மலக்கட்டு. செந்தகைத்திரு= திருமகள். வெண்திரு= கலைமகள்.

பொழிப்புரை : முதன்மையானவையாகக் கூறப்பெறும் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய அம்மூன்று இடங்களிலும் தான் ஒருவனாகவே அவற்றைச் செய்பவனாய், கூரிய வேல் ஏந்தி, மலக்கட்டற்றோர்

கண்டுஅனுபவிக்குமாறு எழுந்தருளியுள்ள குகனது குன்றக்குடி சென்றுபோற்ற வல்லவர், திருமகளும் கலைமகளும் தழுவும் அழகியதோள்களுடன் விளங்குவர்.

விளக்கம் : மூன்றிடத்தும் தான் - படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் ஐந்தையும், முதல்மூன்றில் அடக்கிக் கூறினார்.

இரங்கல்

பதினான்குசீர்த் தாழிசை

வார ணிந்தமுலை மங்கை மாரும்வரி
வண்டி னங்களுடன் ஐவகை
வன்னம் மீறவளர் கிளிக ளும்பிறவும்
வளமை மேவுகுன் றக்குடித்
தார ணிந்தபுய வீர வாகுபணி
சண்மு கக்கடவுள் முன்புபோய்த்
தகுதி யானமொழி பகரில் அன்னவர்
தரிப்பர் கொல்என மதித்துநான்
சீர ணிந்தமனம் அதைவி டுக்கஅது
சென்று செங்கமல மலரைநேர்
திருவ டித்துணையில் மதுவெ னப்பெருகு
சீர ருட்களி பொருந்திஓர்
கூர ணிந்தகதிர் வேலி னும்பொருவில்
குக்கு டத்தினும்நெ ருங்குதோள்
குவட்டி டத்தினும் மலைக்கு றத்திஇதழ்
கொண்ட வாய்களினும் நின்றதே.

குறிப்புரை : வார்= முலைக்கச்சு. ஐவகை வன்னம் மீறவளர் கிளி= ஐந்நிறங்கள் மிகப்பெற்ற கிளி. தரிப்பர்= ஏற்று அருள்புரிவார். அருட்களி= அருளால் வரும் பெருமகிழ்ச்சி. குக்குடம்= சேவல், தோள்குவடு= தோள்களாகிய மலைகள். இதழ்கொண்டவாய்= இதழ்களையுடைய வாய்.

பொழிப்புரை : கச்சணிந்த முலைகளையுடைய மங்கையரும், கோடுகளுடைய வண்டுகளும், ஐவண்ணம்மிக்க கிளிகளும் பிறவளங்களும் கொண்டகுன்றக்குடியில் மாலையணிந்த தோள்வலிமைமிக்க வீரவாகுத்தேவர் வணங்கும் அருள்தரு ஆறுமுகப்பரமன் முன்னேபோய்த் தக்கசொற்களால் அவனைப் போற்றினால் அதனை அவர் ஏற்றுஅருள்வார் என்றுமதித்து நான் சிறந்த என்மனத்தை அவர்பால் அனுப்பினேன். அது சென்று, செந்தாமரை ஒத்த அவன் திருவடிகளில் தேனாகப் பெருகும் அருளினைப் பருகி அதனால் வந்த களிப்பினால், அவனது ஒப்பற்ற கூரியவேலில், சேவலில்,

செறிந்ததோள்களாகிய மலைகளிலும், வள்ளிநாயகியின் இதழ்களைச் சுவைக்க அவள் வாயிலும்பொருந்தி நிலைத்தது. என்செய்வேன் !

விளக்கம் : செந்தாமரைத் திருவடிகளில் மதுவாகப் பெருகும் அருளைப் பருகியதால் மனம் மயங்கிச் செயற்பட்டதென எண்ணிஇரங்கல். (56)

சந்தம்

பதின்சீர் விருத்தம்

தந்த தானனத் தந்தத் தந்தன தய்யன
நின்ற தாவரத் தைப்புன் சொற்பகர் கிள்ளையை
நெஞ்சை ஓதிமத் தைக்கஞ் சத்துறு புள்ளினை
நன்ற தாகநத் திக்கொஞ் சிக்கவி சொல்பவர்
நந்(து)உ றாவுன்வெற் றிச்சந் தத்தமிழ் கொள்வர்கொல்
என்ற தேயெனப் பொற்கும் பப்புன லுள்வரும்
எங்கள் காவலற் குத்தந் திட்டதோர் எல்லையின்
ஒன்ற ஈகெனச் செப்பும் சத்திய வல்லவர்
உய்ந்து வாழ்வனப் புக்குன் றக்குடி ஐயனே.

குறிப்புரை : தாவரம்= மலர். கிள்ளை= கிளி. ஓதிமம்= அன்னப்பறவை. கஞ்சத்து உறுபுள்= தாமரையில் மொய்க்கும் வண்டு. நின்றதாக= எதிரே இருப்பதாக. நத்திக்கவி= விரும்பித்தூதுக் கவிதை. நந்துறா= என்றும்அழியா. என்றதே என= சூரியனைப்போல (எல்= சூரியன்) பொன் கும்பம்= ஒளிரும் குடம். காவலர்= அகத்தியர். தந்திட்டது= உபதேசித்தது. எல்லை= அளவு. ஒன்ற= ஒருசேர. ஈகெனச் செப்பும்= தருமாறு வேண்டும். சத்திய வல்லவர்= மெய்யடியார்.. உய்ந்துவாழ்= ஈடேற்றம் பெற்றுவாழும்.. வனப்பு= அழகு.

பொழிப்புரை : சூரியனைப்போல் ஒளிரும் அழகிய குடத்துநீரில் தோன்றிய எமதுகாவலராகிய அகத்தியமுனிவர்க்கு உபதேசித்த பொருளை, தமக்கும் ஒருசேர உபதேசிக்குமாறு வேண்டிப்பெற்ற மெய்யடியார் ஈடேற்றம் பெற்றுவாழும் அழகிய குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள தலைவனே ! புகழ்பெற்ற மலரை, மழலைபேசும் கிளியை, நெஞ்சினை, அன்னப்பறவையை, தாமரைமலரில் மொய்க்கும் வண்டினைத் தமது எதிரே இருப்பதாகவைத்து, விரும்பித் தூதுக்கவிதை பாடுவோர், எக்காலத்தும் அழிவற்ற வெற்றியுடைய உனது சந்தத்தமிழைப் பாடுவரோ ? பாடவேண்டும்.

விளக்கம் : " கேட்குந போலவும் கிளக்குந போலவும், இயங்குந போலவும் இயற்றுந போலவும், அஃறிணை மருங்கினும் அறையப் படுமே " என்ற நன்னூலின்படி அமைவன தூதுஇலக்கியங்கள். (57)

இரங்கல்

கட்டுத்தாழிசை

ஐயமற்ற மெய்யரே செய்கை யிற்ற துய்யரே

அருள்மி குந்த நேயரே பொருள்வி ரும்பும் வாயரே
மையம் ஒன்றும் யோகரே பொய்ய கன்ற நாகரே
மாதி ரத்து வாழ்நரே ஆதி வத்து வீழ்நரே
செய்ய குன்றக் குடியிலே வைகும் மன்சிற் றடியிலே
சேர்ந்த சிந்தை மீளுமோ ஆர்ந்த இன்பம் நீளுமோ
வையம் நிந்தை கூறுமோ மெய்ய றிந்து தேறுமோ
மாய்வ(து) அஞ்சல் மேவியே ஆய்வ(து) என்றன் ஆவியே.

குறிப்புரை : மெய்யர்= ஞானியர். செய்கையிற்ற= தற்சுதந்தரம் இல்லாத. பொருள்= மெய்ப்பொருள். வாயர்= சிறந்தவர். மையம்= சுழுமுனை. நாகர்= தேவர். மாதிரம்= உலகம். ஆதிவத்து= அனைத்துக்கும் முதற்பொருள். வீழ்நர்= விரும்புவோர். செய்யமன்= சிறந்த அரசன். ஆர்ந்த= அனுபவித்த. மெய்= ஞானம். தேறுமோ= தெளிவு பெறுமோ. மாய்வது= இறப்பது. அஞ்சல் மேவி= அஞ்சி.

பொழிப்புரை : சந்தேகமற்ற ஞானியரே, தற்சுதந்தரம் இல்லாத தூயவரே, அருள்மிக்க அன்பரே, மெய்ப்பொருளை விரும்பும் சிறந்தவரே, சுழுமுனையில் பொருந்தும் யோகியரே, பொய்ம்மை இல்லாத தேவரே, உலகில் வாழ்வோரே, அனைத்துக்கும் முதற்பொருளை விரும்புவோரே, குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள சிறந்த அரசனான முருகனது சிற்றடியில் பொருந்திய எனது மனம் அதிலிருந்து மீண்டுவிடுமோ, அல்லது சிற்றடியில் பெற்ற இன்பம் மேன்மேல்பெருகுமோ, உலகவர் என்னைப் பழிப்பரோ, என்மனம் ஞானத்தை உணர்ந்து தெளிவுபெறுமோ, வீணேஇறப்பதற்கு என்னுயிர் அஞ்சி இவ்வாறெல்லாம் ஆராய்கிறது.

இலக்கணக்குறிப்பு : ஓகாரங்கள் ஐயம்குறித்தன. (58)

பாண்

நேரிசை வெண்பா

தலைவன் பிரிவுபற்றி ஊடல்கொண்ட தலைவியிடம் தூதுவந்த பாணனை மறுத்தல். (இங்குத் தலைவன் முருகப்பெருமான்)

ஆவித் துணையாகும் ஆறிரண்டு தோள்குகன்மேல்
கோவித்துக் கொள்ளுதற்கும் கூறினையோ - சேவித்து
மாதறுசீர் மாமுகன்மேல் வைஎன்ற பாணாபோ
கோதறுசீர்க் குன்றக் குடிக்கு.

குறிப்புரை : ஆவி= உயிர். கூறினையோ= சந்து - சமாதானம். பாணா ! கோது அறுசீர்க் குன்றக்குடிக்குப் போ. மாது சீர்அறு மாமுகன்மேல் சேவித்து வை. மாது= (என்மேல்)காதல். சீர்= ஒழுங்கு. அறு= அற்ற. மாமுகன்மேல்= அழகிய முகத்து முருகனிடம். வை=உன்சொல்லைக் கூறு.

பொழிப்புரை : உயிர்க்குத் துணையாக விளங்கும் பன்னிரு

தோட்குகன்மேல் நான் சினம் கொள்ளவேண்டும் என்பதற்காக இங்குவந்து என்னிடம் சமாதானம் கூறினாயா ? குற்றமற்ற சிறப்புடைய குன்றக்குடிக்குப் போ. என்மேல் காதலோ ஒழுங்கோ இல்லாதவனும் அழகிய முகத்தவனும் ஆகிய அருள்தரு சண்முகநாதனிடம் என்நிலைமையைக் கூறு. பிரியக்கூடாது என்று சொல்க.

விளக்கம் : ஆவித்துணை :" உயிர்த்துணையாம் தோன்றாத் துணைக்கோர் துணையாகி " (மீ. பி. தமிழ். முத்தம். 1) (59)

கிள்ளைவிடு தூது

கட்டளைக் கலித்துறை

குடிகாரப் பாணர்தம் மால்வச மாம்விலைக் கோதையரோ(டு)
அடியாளைத் தேர்வது நீத்(து)அங்கும் நீர்வர லாகும்என்று
கடிகாலும் பூம்பொழில் குன்றக் குடிக்குகன் கண்முன்சென்று
பொடியாடும் கைக்கிளிக்கு உன்ஆவல் மீறப் புகல்கிள்ளையே.

குறிப்புரை : வசமாம்= வசப்படுத்தப்பட்டுள்ள. விலைக்கோதையர்= பொருட்பெண்டிர். அடியாளைத் தேர்வது= என்னையும் ஒக்கநினைப்பதை. நீத்து= கைவிட்டு. அங்கும்= மனைவி இருக்கும் இடத்திற்கும். கடிகாலும்= மணக்கும். பொடியாடும் கிள்ளை= அருணகிரியாராகிய நீறு பூசியகிளி. உன் ஆவல் மீற= உனது மிக்க ஆசையுடன்.

பொழிப்புரை : கிளியே ! குடிக்கும் இயல்புடைய பாணர்களால் வசப்படுத்தப்பட்ட விலைமாதர்களுடன் என்னையும் ஒக்கநினைப்பதைக் கைவிட்டு, உன்மனைவி இருக்கும் இடத்திற்கு நீ வரலாம் என்பதை திருநீறுபூசிய அருணகிரியாம் கிளியை ஏந்திய குன்றக்குடிக் குகன்எதிரேபோய் என்தலைவனாகிய அவனிடம் உனதுமிக்க ஆசையுடன் கூறுவாயாக.
(தலைவி தன்னைக் கீழாகஎண்ணாமல் தன்னிடம் வரச்சொன்னாள்) (60)

வெண்செந்துறை

கிள்ளைப் பனுவல் கிளர்குன் றக்குடி
பிள்ளைப் பெருமான் பெரு(கு)அருட் சுடரே.

குறிப்புரை : பனுவல் கிளர்= பாடல் பாடும்.

பொழிப்புரை : கிளிகள் பாடல்பாடும் குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள பிள்ளைப்பெருமானாகிய அருள்தரு சண்முகநாதன் வழங்கவழங்கப் பெருகும் அருட்சுடராவான்.

விளக்கம் : பிள்ளைப் பெருமான் - "பேராதரிக்கும் அடியவர்தம் பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும் பேறும்கொடுக்கவரும் பிள்ளைப் பெருமான்என்னும் பேராளா " (திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்..... வருகைப்....) (61)

அறுசீர்க் கழிநெடில்

அருட்கடலில் குளிப்பதற்கு முயலாமல் பொருள்விரும்பி
அலையும் தம்மைத்
தெருட்புலமை யுடையரா மதிப்பவரோ(டு) இணங்காமல்
திருக்கண் பார்த்(து)ஆள்
மருட்சிதரும் விழிஅணங்கார் தமக்குமனம் உருகாத
வலியுள் ளார்தம்
இருட்பிணிதீர்த்(து) உயர்குன்றக் குடித்தலத்துக் கோவிலிடத்(து)
இலங்கும் வேலே.

குறிப்புரை : தெருள்= தெளிவு. இருட்பிணி= ஆணவக்கட்டு.

பொழிப்புரை : மயக்கம்தரும் பார்வையுடைய பெண்களுக்கு மனம் உருகாத மனவலிமையுடையவர்களின் ஆணவமலக் கட்டினைத்தீர்த்து ஆளக் குன்றக்குடிக் கோவிலில் எழுந்தருளியுள்ள முருகா ! உனது அருட்கடலில் குளிக்க முயலாமல், தம்மைத் தெளிந்த புலமையுடையவராக மதித்துப் பொருள்விரும்பி அலைபவரோடு நான் ஒத்துவாழாமல் என்னை உன்அருட்கண்நோக்கில் வைத்து ஆண்டருள்க. (62)

சித்து

எண்சீர்க் கழிநெடில்

வேளப்பா ஆனவன்போல் வளர்வதாகி
விளங்குகுன்றக் குடித்தலைவாழ் வேற்கைச் சித்தன்
ஆளப்பா புகழ்வலிமை பெற்றேம் என்றும்
அழியேம்யாம் அவன்ஆணை அவத்தம்அல்ல
கேளப்பா பசிதீரக் குழம்பும் சோறும்
கிருதகுள பாயசத்தோ(டு) ஈந்தா யாகில்
மீளப்பார்த் திருக்கரச வாதம் செய்வோம்
வினைதவிர்ப்போம் பணியணையில் மேவு வோமே.

குறிப்புரை : வேள் அப்பா= மன்மதனின் தந்தை - திருமால். புகழ் வலிமை வளர்வதாகிப் பெற்றோம். அவத்தம்= வீண்வார்த்தை. கிருதம்= நெய். குளம்= வெல்லம். ரசவாதம்= இரும்பைப் பொன்னாக்கல். பணிஅணை=பாம்புப் படுக்கை / இரத்தினக் கம்பளமெத்தை . மேவுவோம்= படுத்து உறங்குவோம்.

பொழிப்புரை : கையில் வேலேந்தி ஒளிரும் குன்றக்குடிவாழ் சித்தனான முருகனின் அடிமைநான். அதனால் மன்மதனின் தந்தையாகிய திருமால் வாமனாவதாரத்தில் மண்ணுக்கும் விண்ணுக்குமாக ஓங்கியதுபோல் புகழும் வலிமையும் பெற்றேம். எமக்கு இறப்பு இல்லை. இது வீண்வார்த்தை யன்று. நான் கூறுவதைக் கேள். என்பசிதீரக் குழம்பு சோறு நெய்யுடன் வெல்லம்கலந்த பாயசம் எனக்குத்தந்தால் கண்ணெதிரே இரும்பைப் பொன்

ஆக்குவோம். மீண்டும் பாம்புப்படுக்கையில் / இரத்தினக்கம்பளமெத்தையில் படுத்துச் செயலற்று உறங்குவோம்.

விளக்கம் : நெடுமால் போல் புகழ்வலிமை பெற்றோம் என்றதற்கேற்பப் பாம்பணையில் படுத்துஉறங்குவோம் என்றார். (63)

இரங்கல்

மடக்கு.

பதினான்கு சீர்த்தாழிசை

மேவ லார்உயி ருண்ட வேலவன் மேவி லான்எனை இன்னமும்
வென்றி தோய்தரு குமர வேள்மதன் வென்றி டாதுவி லக்கிலான்
பாவ லார்க்கருள் கந்தன் என்மனப் பாவ கத்தும்இ லங்கிலான்
பத்தி யிற்படு முருகன் என்ன(து)உ பத்தி ரத்தைம றுக்கிலான்
காவல் மேவுகுன் றக்கு டிக்குகன் காவ கம்தழை தந்திலான்
காங்கே யப்பெயர் வேந்தன் என்உடல் காங்கை யைச்சிறி
தாள்கிலான்
சேவ லேஎழில் தோகை யேஅடல் சேவ கம்பெறும் வீரரே
செய்ய வாய்க்கிளி யேஎ னக்கருள் செய்ய நீர்உரை செய்ம்மினே.

குறிப்புரை : மேவலார்= பகைவர். மேவிலான்= கூடவில்லை. வென்றிடாது= காமமூட்டாது. பாவகம்= பாவனை. தழை= கையுறையாத்தரும் தழை. காங்கை= காமவெம்மை. சேவகம்= பணி.

பொழிப்புரை : பகைவர் உயிருண்ட வேலான் என்னை இதுவரைவந்து கூடவில்லை. வெற்றிபொருந்திய குமரனாகிய விரும்பத்தக்கஅவன், மன்மதன் வெற்றிபெறாதபடி அவனைத் தடுக்கவில்லை. பாவல்லவர்க்கு அருளும் கந்தன், நான் நினைக்கும் என் பாவனையிலும் வரவில்லை. பத்தியில் அகப்படும் முருகன் நான்தரும் உபத்திரவத்தையும் பொருட்படுத்தவில்லை. குன்றக்குடியின் காவலை மேற்கொண்ட அக்குகன் என்மேல்பரிவுகொண்டு சோலையில் உள்ள தழையையும் கையுறையாகத் தரவில்லை. காங்கேயன் என்ற பெயருடைய அவ்வரசன் என் காமவெப்பினைச் சிறிதேனும் குறைக்கும் வகையில் என்னை ஆளவில்லை. அவன் கொடிச் சேவலே, ஊர்தியாகிய அழகிய மயிலே, வெற்றியுறச் சேவகம்செய்யும் வீரரே, சிவந்த அலகுடைய கிளியே எனக்கு அருளுமாறு அவனிடம் கூறுங்கள்.

இலக்கணக் குறிப்பு : செய்ம்மின் - முன்னிலைப் பன்மைஏவல் வினைமுற்று

நேரிசை ஆசிரியப்பா

செய்ய வான்கலைச் சிறப்பும் சீர்பெறு
மெய்யெலாம் புனையும் வெண்ணீற்(று) ஒளியும்
ஒண்கோ வணத்தோடு உடீஇய கீளும்

வண்கோ கனக மலர்முகம் ஒன்றும்
முண்டிதச் சிரமும் மூவிரு முகத்துக்
கண்டிகை அதனொடு காவியம் தொடையல்
புனைதரு கழுத்தும் புகலரும் பொருளை
நினைதல் மேய நெடி(து)அகல் மார்பும்
தண்டமும் துகள்தீர் தனிவேற் படையும்
கொண்டகை இரண்டும் குலவும் பாதுகைத்
தாள்துணை மலரும் தயங்கும் பேரொளி
கூட்டுற அமைந்து குலவுஇரு பரிதிநேர்
குண்டலக் காதும் கோணல்தீர் சடையும்
மண்டலம் மூன்றா மலர்விழி வனப்பும்
குமுதவா யிடத்துக் குறுநகைப் பொலிவும்
அமுதவாய் குதட்டி அகல்செவி விசிறித்
தானம் ஊற்றும் தவளமால் வரைநேர்
ஞானவே ழத்தின் நலம்புனை பிடரியில்
திகழ்தரு மாண்பும் செறிதரத் தோன்றிப்
புகழ்எலாம் கொடுத்துப் பொருநையில் திருமலைக்
குவட்டில் காத்தமை கூறி உய்யும்
தவத்தைஇவ் வுலகோர் தமக்கும்ஈந் தருளி
வீரவா கென்னும் விறலுடைப் புனிதன்
வாரம்மிக் குரைத்த வாழ்(வு)உறப் புரிவாய்
யானைத் தோல்போர்த் திடுவோன் முதலாம்
ஏனைத் தேவர்கள் யாவரும் இறைஞ்சும்
குன்றக் குடித்திருக் கோவில்
மன்றத்(து) உறையும் வடிவேற் சேயே.

குறிப்புரை : செய்ய வான்கலை= மேலான சிவந்த கல்லாடை. கீள்= கோவணம் கட்டவுதவும் அரைக்கச்சை. கோகனகம்= தாமரைமலர். ஒன்றும்= பொருந்திய. முண்டிதம்= மொட்டை. மூவிருமுகத்துக் கண்டிகை= ஆறுமுக உருத்திராக்கமாலை. காவியந் தொடையல்= செங்குவளை மாலை. துகள்= குற்றம். தாள்துணை மலர்= இருதாமரைத் திருவடிகள். தயங்கும்= அசைகின்ற. பரிதி= ஞாயிறு. கோணல்தீர்= நீண்ட. சடை= பிரபை. மண்டலம்= வட்டமான. மூன்றா மலர்விழி= மலர்ந்த ஞாயிறு திங்கள் நெருப்பு என்ற மூவிழிகள். குமுதம்= அரக்காம்பல். குதட்டி= அசைபோட்டு. தானம்= மதநீர். தவளமால் வரை= வெள்ளிய பெருமலை. பொருநையில் திருமலைக் குவட்டில் காத்தமை= முருகனுடன் ஊடல்கொண்டபோது தாமிரவருணி ஆற்றிலும் திருமலை உச்சியிலும் தன்னைக்காத்தமை குறித்தார். வாரம்= அன்பு. யானைத்தோல் போர்த்தவன்= சிவபிரான். மன்றம்= அனைவர்க்கும்

பொதுவில்.

பொழிப்புரை : யானைத்தோல் போர்த்திய சிவபிரான் முதலாகப் பிற தேவர்கள் அனைவரும் போற்றக் குன்றக்குடித் திருக்கோவிலில் பொதுவில் எழுந்தருளியுள்ள சேயோனே ! நீஉடுத்த மேலான சிவந்த ஆடையின்சிறப்பும், உன்திருமேனி எங்கும் நீதரித்த வெண்ணீற்று ஒளியும், ஒளிரும்வெண் கோவணத்துடன் பொருந்தியகீளும், வளமாக மலர்ந்த தாமரைஒத்த முகத்துட னான மொட்டைத்தலையும், ஆறுமுக உருத்திராக்கமாலையுடன்செங்குவளை மலர் மாலைதரித்த கழுத்தும், கூறுதற்கரிய பரம்பொருளையே நினைக்கும் மிகவும் அகன்ற மார்பும் - நெஞ்சும், தண்டப்படையும் குற்றமற்ற ஒப்பற்ற வேற்படையும் ஏந்திய இருகைகளும், விளங்கும் பாதுகையுடன் கூடிய இருதாமரைமலராம் திருவடிகளும், பேரொளியுடன் அசைந்தாடி விளங்கும் குண்டலம்அணிந்த காதும், நீண்டுசெல்லும் பிரபையும் - ஒளியும், மலர்ந்த மலர்போல் வட்டமாயமைந்த ஞாயிறு திங்கள் நெருப்பெனவிளங்கும் மூன்று விழியழகும். அரக்காம்பல்ஒத்த இதழ்களில்பொலியும் புன்முறுவலும், பெருமைபொருந்திய வாயினக்குதட்டியும் அகன்ற காதுகளைவிசிறியும் மதநீர் ஊற்றவரும் வெண்மையான மலைஒத்த ஞானவேழத்தின் பிடரியில் நலமுற விளங்கும் மாண்பும் செறியுமாறுதோன்றி எனக்குப் புகழ்எலாம் கொடுத்து, தாமிரவருணியிலும் திருமலையின் உச்சியிலும் என்னைக் காத்ததைக் கூறி, ஈடேற்றம் பெறுதற்குரிய தவத்தை உலகவர் அனைவருக்கும் தந்தருளி, வீரவாகு என்ற வெற்றிமிக்க புனிதன்கூறிய வீடுபேற்றினை அனைவரும் அடைய அருள்க.

விளக்கம் : முருகப்பெருமானுக்கு யானைஊர்தியும் உண்டு என்பதை, " கால் கிளர்ந்தன்ன வேழமேல் கொண்டு " (திருமுருகாற்றுப்படை அடி82) என்பதாலும், பிரான்மலை என்று வழங்கப்பெறும் திருக்கொடுங்குன்றத் திருக்கோவிலில் அருள்தரு முருகப்பெருமான் திருமுன்பு யானையூர்தி உள்ளமையாலும் அறியலாம். " தவத்தை இவ்வுலகோர் தமக்கும் ஈந்தருளி..... வாழ்வு உறப்புரிவாய் " என்பதால் உலகவரும் தன்னைப்போல் அருள்பெற்று வாழவேண்டும் என்ற இவரது பெருநோக்கறியலாம். (65)

நேரிசை வெண்பா

வேற்படையும் பற்பலவே மெய்யுருவம் பற்பலவே
பாற்படுமால் வெற்புகளும் பற்பலவே - காற்பதுமம்
துன்றக் குறித்துநிற்கும் தொண்டர்களும் பற்பலவே
குன்றக் குடிக்குகனுக் கு.

குறிப்புரை : மெய்யுருவம்= ஞானவடிவம். பாற்படு மால் வெற்பு= பல வகைப்பட்ட பெரிய மலைகள். கால்பதுமம்= திருவடித்தாமரை. துன்ற= மனத்தில் பொருந்த.

பொழிப்புரை : குன்றக்குடிக் குகப்பெருமானுக்கு; வேலுடன் கூடிய பிறஆயுதங்களும், ஞானவடிவங்களும், பலவகைப்பட்ட பெரியமலைகளும், அவனுடைய திருவடித்தாமரையினைத் தம்மனத்தில் பொருந்தவாழும் தொண்டர்களும் பலப்பலவாம்.

இலக்கணக்குறிப்பு : வேல் படை - உம்மைத்தொகைகள். கால்பதுமம் - உருவகம். (66)

தழை

கட்டளைக் கலித்துறை

குக்குடம் தாங்குகைச் செவ்வேலன் குன்றக் குடித்தலத்தான்
குக்குடந் தான்விண்ணு ளார்தரு பூந்தழை கோதைநல்லாட்
குக்குடம் தானெனும் கொங்கைகள் மீறின கூர்ப்பிலவாய்க்
குக்குடந் தாள்சுவைத் தீம்புகழாகிக் குளிர்ந்தனவே.

பதவுரை + பொழிப்புரை : குக்குடம் தாங்குகை= **கையில் சேவற்கொடி ஏந்திய .** செவ்வேலன் குன்றக்குடித்தலத்தான்= **குன்றக்குடித் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முகநாதப்பெருமான்.** குக்கு உள் தந்தான்= **இவ்வுலகத்தில் உள்ளஉனக்குக் கொடுத்தருளினான்** விண்ணுளார்தரு= **தேவர்களுக்குரிய கற்பகமரத்தின்.** பூந்தழை= **அழகிய இலைகளை. (அதனால்)** கோதைநல்லாட்கு= **மங்கையருள் சிறந்த தலைவிக்கு.** குடம்தான்எனும் கொங்கைகள்= **குடமே என்றுசொல்லத்தக்க தனங்கள்.** மீறின= **பூரிப்படைந்தன.** கூர்ப்புஇல வாய்= **அறிவற்ற போலி மக்களின் வாய்கள் கூறும்.** கு= **அவதூறான பழிச்சொற்கள் எல்லாம்.** குடத்து ஆள்= **வெல்லம்போல் இனிய ஆட்சியுடைய.** சுவை= **உருசியாகிய.** தீம்புகழ் ஆகி= **இனிய புகழ்ச்சொற்கள் ஆகி.** குளிர்ந்தன= **மனமகிழ்வைத் தந்தன.** (ஏ - ஈற்றசை.)

(இந்நூலுக்குக் குறிப்புரை எழுதியவர்கள் தவத்திரு. தி. செ. முருகதாச ஐயா ஆவார்கள். பொருள்காணக் கடினமாய்உள்ள இச்செய்யுள்முழுமைக்கும் இவர்களேவழங்கியுள்ள பொழிப்புரை மேற்கண்டது. ஆற்றொழுக்காகப் பொருள்அறிந்துசுவைக்க, அவர்களின் பொழிப்புரையைத் தடித்தஎழுத்தில் காட்டியுள்ளேன்.) (67)

கொச்சகக் கலிப்பா

தனம்கிடக்கும் மார்பகத்தார் தமக்(கு)உருகிப் பொருள்தேடும்
மனம்கிடக்கும் தூயவர்பால் வருந்திஇரந்(து) அலையேனால்
முனம்கிடக்கும் மூவினையும் முறுக்கிஎனப் புரந்தருள்வாய்
கனம்கிடக்கப் பொழில்சூழும் கவின்குன்றக் குடிப்பரனே.

குறிப்புரை : தூயவர்= தூய்மையற்றவர். (தூய் + அ + அர். அகரம் எதிர்மறைப் பொருளது.) முனம்= பண்டுதொட்டு. முறுக்கி= அழித்து. கனம்= மேகக்கூட்டம்.

பொழிப்புரை : மேகக்கூட்டம் தங்குமாறு உயர்ந்த சோலைகள் சூழ்ந்த அழகியகுன்றக்குடியில் எழுந்தருளியுள்ள பரம்பொருள் ஆகிய அருள்தரு சண்முகநாதப்பெருமானே ! பருத்தமுலைகளுடைய விலைமாதர் இன்பத்துக்கு உருகிப் பொருள்தேடும் தூய்மையற்றவரிடம் என்மனம்வருந்திப் பொருளை யாசித்து அலையமாட்டேன். பண்டுதொட்டுக்கிடக்கும் என்மூவினைகளையும் அழித்து என்னைக் காத்தருள்க.

இலக்கணக்குறிப்பு : தூயவர் - எதிர்மறை வினையாலணையும் பெயர். மூவினை - தொகைக்குறிப்பு. (68)

அறுசீர் விருத்தம்

பரந்தவான் கலைஉணர்ந்த பாவலவர் பனுவலையும்
பழிக்கும் தீயர்
உரம்தவா(து) உயர்வதுகண்(டு) அலமந்தேன் திருவருள்சற்(று)
உதவிஆள்வாய்
கிரந்தவாக் கியமறையும் தமிழ்த்துதியும் முறையே
கிளத்து வோர்க்குச்
சுரந்தஆ ரமுதருத்(து)ம் தாயெனக்குன் றக்குடியில்
துலங்கும் சேயே.

குறிப்புரை : வலவர்= வல்லவர். உரம் தவாது= வலிமை கெடாது. மறை= இருக்குமுதலியன. கிளத்துவோர்= சொல்லித்துதிப்பவர். ஆரமுது சுரந்து அருத்தும் தாய்.

பொழிப்புரை :கிரந்தஎழுத்திலான இருக்கு முதலியமறைகளையும், தமிழில்அமைந்த துதிபாக்களயும் முறைப்படிச்சொல்லிவணங்குகிறவரைத் தாய்ப்பால் சுரந்துஊட்டும் தாயாகத்தாங்கும் குன்றகுடியில் ஒளிரும் முருகப் பெருமானே ! அளதற்கரிய மேலான கலைகளை உணர்ந்த பாவல்லவர் நூல்களையும் பழிகும் தீயவர்கள் வலிமைகெடாது உயர்வதுகண்டு மனம் வருந்துகிறேன். அத்தகையவர்கட்கு உன்திருவருளைச் சற்றே அளித்து ஆண்டருள்வாயாக. (69)

மதங்கம்

கலிவிருத்தம்

சேய மாமுகம் ஆறுடைச் சிவனெனத் திகழும்
தூய வேலனை இலகுகுன் றக்குடித் துரைஎன்(று)
ஏய நாடொறும் இசையொடு துதிக்கும்இம் மதங்கி
மாய வாள்விழிக் கணைதொடில் பிழைப்ப(து)யார் மன்னோ.

குறிப்புரை : மதங்கி= பாண்மகள். ஏய= பொருந்த. தொடில்= தீண்டினால்.

பொழிப்புரை : செவ்விய ஆறுமுகமுடைய சிவனாக விளங்கும் தூயவனாகிய வேலனை, குன்றக்குடியில் விளங்கும்துரைஎன்று பொருத்தமுற நாடொறும் இசையுடன் பாடித்துதிக்கும் இம்மதங்கியின் வஞ்சனை ஒளிரும் விழியாகிய அம்பு தீண்டினால் யார்பிழைப்பார் ? அனைவரும் மயங்குவர். (துரை என்பது வெள்ளையர் வரவால் ஏறிய புதுவரவு.) (70)

அறுசீர் விருத்தம்

மன்னுமா முகங்கள் ஆறும் மலர்விழித் தொகைமூ வாறும்
மின்னுசெந் துவர்வாய் ஆறும் வியன்குழைச் செவிஈ ராறும்
பன்னுமற்(று) உளவும் தோகைப் பரிமிசை குலவத் தோன்றிக்
கொன்உறு பொழில்சூழ் குன்றக் குடிக்குகன் ஆள்வ(து) என்றே.

குறிப்புரை : மன்னு= பெருமைபொருந்திய. வியன்= சிறந்த. தோகைப்பரி= மயிலாகிய குதிரை. கொன்உறு= பெருமை மிக்க.

பொழிப்புரை : பெருமைபொருந்திய அழகிய ஆறுமுகங்களும், மலரொத்த விழிகள் நுதல்விழிகள் உட்படப் பதினெட்டும், செம்மை ஒளிரும் வாய்கள் ஆறும், சிறந்த குழைகள்(காதணிகள்) அணிந்த செவிகள் பன்னிரண்டும், போற்றத்தக்க பிறவும்கொண்டு மயிலாகிய குதிரைமேல் ஏறி, பெருமைமிக்க சோலைகள் சூழ்ந்த குன்றக்குடிக் குகன் என்னை ஆள்வது எந்நாளில் ? இப்பொழுதே ஆட்கொள்ளவேண்டும். (71)

வெண்டளைக் கலிப்பா

என்றும் அழிவற்(று) இருக்கும் பெரும்பேறு
குன்றுளுயர் குன்றக் குடிக்குகவேள் ஈயினல்லால்
துன்று புலன்அடக்கித் தூயநிலை சேர்த்தும்எனப்
பொன்றுமட்டும் வாடிப் புலர்ந்திடினும் வாராதே.

குறிப்புரை : என்றும் அழிவற்று இருக்கும் பெரும்பேறு= வீடுபேறு. துன்று= செறிந்த. தூயநிலை= மலமில்லாத வீடுபேற்று வாழ்வு.

பொழிப்புரை : எந்நாளும் அழிவேஇல்லாத பெரியபேறாகிய வீடுபேற்றுவாழ்வு, குமரனிருக்கும் குன்றுகளில் எல்லாம் உயர்ந்ததாகிய குன்றக்குடிக் குகப்பெருமான் வழங்கினாலொழிய, செறிந்த ஐம்புலன்களையும் அடக்குவதன்மூலம் வீட்டுலக வாழ்வு பெறுவோம் என்று இறக்கும் வரை மனம்தளராது முயன்று வருந்தினாலும் கிடைக்காது.

விளக்கம் : " காண்பார்ஆர் கண்ணுதலாய் காட்டாக்காலே " (திருமு.6) என்பதை உட்கொண்டது இச்செய்யுள் (72).

குறம்

அறுசீர்த் தாழிசை

வாரண கேதனம் தோய மன்னுகுன் றக்குடிக் கோவில்
காரணன் தன்புயம் சேரக் காதல்மி குத்திடும் அம்மே
ஆரண மும்புகழ் நீபம் அஞ்சுகம் தந்திடும் நாளை
நாரணன் தன்மகள் போலும் நல்லகு றக்கொடி நானே.

குறிப்புரை : வாரணகேதனம்= சேவற்கொடி. மன்னு= பெருமை பொருந்திய. காரணன்= அரசன். ஆரணம்= வேதம். நீபம்= நீலோற்பல மாலை. அம் சுகம்= அழகிய இன்பம்,

பொழிப்புரை : வானளாவிய சேவற்கொடியுடன் பெருமைபொருந்திய குன்றக்குடிக் கோவிலில் எழுந்தருளியுள்ள அரசன் ஆகிய அருள்தரு சண்முகநாதப்பெருமானக் கூட, மிகு காதல்கொண்ட தாயே ! வேதங்களும் புகழும் நீலோற்பல மாலையை நாளை தந்து, உனக்கு அழகிய இன்பம் தருவான். நான் திருமால் மகளாகிய வள்ளிநாச்சியாரோடொத்த நல்ல குறக்குடியில் பிறந்தவளாதலின் என்குறி தப்பாது. (73)

அறுசீர்ச் சந்தம்

தான தத்தன தந்தத்தன - தான தத்தன தந்தத்தன

நான்உ ரைத்திடும் இந்தக்குறி நாளை மெய்ப்படும் நம்பித்தெரி
ஏனு னக்கிப்படி வம்பில்துயர் ஏழுநெல் கைகள் ஒன்றிட்டது
வானும் ஒப்பறு குன்றக்குடி வாழ்சி வத்தஉ டம்புக்குகன்
வேனு னைக்கிணை யும்கண்கொடி வேண மட்டுமி ரங்கிக்கொடே.

கூட்டுமுறை : வேல்நுனைக்கு இணையும் கண்கொடி, உனக்கு இப்படி வம்பில்துயர் ஏன் ?. ஏழுநெல்கள் கைஒன்றிட்டன. வானும் ஒப்பறு குன்றக்குடி வாழ்சிவத்த உடம்புக்குகன் வேணமட்டும் இரங்கிக்கொடே.

குறிப்புரை : இணையும்= ஒத்த. கொடி= கொடிஒத்தவளே. வம்பு= புதுமை. கைஒன்றில் ஏழுநெல் இட்டன= உன்கையால் ஒருமுறை இட்டன ஏழுநெல்மணிகள். வேணமட்டும்= விரும்புமளவு.

பொழிப்புரை : வேலின் நுனிஒத்த கூரியபார்வையுடன் கொடியை ஒத்தவளே ! உனக்குப் புதிதாகத்துயரம் ஏன் ? உன்கையால் ஒருமுறை இட்ட நெல்கள் ஏழு. இது நல்லகுறி. வானுலகமும் ஒப்பற்றதான குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள சிவந்த திருமேனியுடனான குகப்பெருமான் வருவான். விரும்பும் அளவு இரங்கிக்கொடு. (74)

நேரிசை வெண்பா

இரங்கிக் கொடாதவர்பால் ஏற்கஎன என்றன்
சிரம்தொட்(டு) எழுதியவன் செங்கை - பரம்பும்அங்கண்

குன்றக் குடிக்குகன்தாள் கோமலரில் சீரியதோ
என்றற்(கு) உயிர்அனையா ளே.

குறிப்புரை : எழுதியவன்= எழுதிய நான்முகன். பரம்பும் அங்கண்= அகன்ற நிலப்பரப்பும் அழகிய இடங்களும். கோமலர்= தாமரைமலர்.

பொழிப்புரை : என்னுயிர் ஒத்தவளே ! மனமிரங்கிக் கொடுக்காதவரிடம் சென்று யாசித்துப்பெற என்தலையில்எழுதிய நான்முகனது செங்கை, அகன்ற நிலப்பரப்பும் அழகியஇடங்களும் கொண்ட குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முகநாதப்பெருமானின் திருவடித்தாமரைகளைக் காட்டிலும் சிறப்புடையதோ ?

விளக்கம் : நான்முகன் எழுத்தை அழித்து, வீடுபேறு தருபவன் முருகன் - " அழித்துப்பிறக்கவொட்டா அயில்வேலன் " (கந்தர்அலங். 2) " அவன் கால்பட்டு அழிந்தது இங்கு என்றன் தலைமேல் அயன் கைஎழுத்தே " (கந்தர் அலங்.40) (75)

கட்டளைக் கலித்துறை

ஆளாகிக் குன்றக் குடித்தலத்(து) ஏகி அறுமுகன்பொன்
தோள்ஆ றிரண்டினும் செந்தமிழ்ப் பாமலர் சூட்டின்அல்லால்
கோளாகும் ஒன்பதுக்(கு) அஞ்சாத் திறலும் குலவுதுங்க
வாளான கண்ணினர்க்(கு) ஏங்கா நலமும் வருவதின்றே.

குறிப்புரை : ஆள்= அடிமை. திறல்= ஆற்றல். துங்கம்= வெற்றி.

பொழிப்புரை : அடிமைப்பட்டவனாய், குன்றக்குடிக்குச் சென்று, அருள்தரு சண்முகநாதப் பெருமானின் வெற்றிவிளங்கும் அழகிய பன்னிரு தோள்களிலும் செந்தமிழ்ப்பாமாலை சூட்டினாலன்றி, ஒன்பான் கோள்களுக்கு அஞ்சாத ஆற்றலும், வாள்போன்ற கூரியகாமப் பார்வை யுடைய மகளிர்க்கு ஏங்காத மனநலமும் வரமாட்டா. (76)

கலிநிலைத்துறை

வருவாய் மனக்கோயில் வாழ்வாய் இருப்பாய் வரங்களெல்லாம்
தருவாய் எனப்பாடும் முனிவோர்க ளுக்கும்\ஓர் தாழ்(வு)எய்துமோ
குருவாகி அரசாகி அன்னையாய்த் தந்தையாய்க் குலதெய்வமாய்த்
திருவாழ்வு குன்றாத குன்றக் குடிக்குள்வளர் செவ்வேலனே.

பொழிப்புரை : இதன்பொருள் வெளிப்படை. (77)

மறம்

அறுசீர் ஆசிரியவிருத்தம்

செவ்வேலன் மருவுகுன்றக் குடித்தலத்து மறவரெனச்
சிறிதும் அஞ்சா(து)
இவ்வேளை இங்குவந்து பெண்கேட்ட தூதனே
இறைக்(கு)அஞ் சோம்யாம்

தெவ்ஏதம் தவிர்க்கும்எங்கள் கரம்கால்கொள் இறைக்கெல்லாம்
திறல்சேர் உம்கோன்
வைவேல்கண் மகளிர்கொள அல்லன்காண் கடிதுவந்த
வழிபார்ப் பாயே.

குறிப்புரை : இறைக்கு= உமது அரசனுக்கு. கால்கொள் இறைக்கெல்லாம்= வலிமைவாய்ந்த அரசர்களுக்கெல்லாம். தெவ் ஏதம்= பகைத்துன்பம். கை= ஆற்றல். அல்லன்= தகுதிஉடையவனல்லன்.

பொழிப்புரை : சிறந்தவேலேந்திய முருகன்தலத்து மறவர்கள் நாங்கள் என்பதை நினைத்துச் சிறிதும் அஞ்சாமல் இப்போது இங்குவந்து பெண்கேட்ட தூதனே ! உமது அரசனுக்கு நாங்கள் சிறிதும் அஞ்சமாட்டோம். வலிமையான அரசர்கட்கு ஏற்பட்ட பகைத்துன்பத்தை ஓட்டும் ஆற்றலுடையவர்கள் நாங்கள். எனவே கூரியவேலொத்த கண்களுடைய எமது மகளிரை மணக்கும் தகுதி உம்அரசனுக்கு இல்லை. விரைந்து வந்தவழியே சென்றுவிடு. (78)

எழுசீர்

வழியலா வழியைச் சதமெனக் கருதும்
மனிதர்போல் மாதர்மேல் மயலாம்
இழிவையேவிரும்பிப் பெரிதுநெஞ்(சு) அயரும்
இன்னல்தீர்த்(து) அருள்புரிந்(து) ஆள்வாய்
பொழிதரும் கருணை விழிகள்ஈ ராறும்
பொறிஉமிழ் கண்கள்ஓ ராறும்
பழியுறாக் குன்றக் குடித்தலத்(து) அலர்த்திப்
பவனிவந் தருளுமெம் பரனே.

குறிப்புரை : சதம்= நிலையானது, அலர்த்தி= நோக்கி.

பொழிப்புரை : கருணைபொழியும் விழிகள் பன்னிரண்டும், தீப்பொறி கக்கும் விழிகள் ஆறும்கொண்டு நோக்கி, குன்றக்குடித்தலத்தில் பழிஏதும் நிகழாது பவனிவந்து காக்கும் எமது பரம்பொருளே ! நெறியல்லாத நெறியை நிலையானது என்று கருதிவாழும் மனிதர்களைப்போல் பெண்கள்மேல் மயக்கம்கொள்ளும் இழிசெயலையே விரும்பி மிகவும்மனம்வருந்தும் துன்பம் தீர்த்து என்னை ஆண்டருள்க. (79)

கலிவிருத்தம்

பரவை ஈனிய பாவை யரும்புணர்
குரவு தோய்தரு குன்றக் குடிக்குகன்
பரவி நாடுமெய்ப் பத்தர்தம் பால்அருட்
குரவன் ஆகிக் குலாவுவ(து) உண்மையே.

குறிப்புரை : பரவை ஈனிய பாவையர்= திருப்பாற்கடல் பெற்ற திருமகள் போன்றோர். புணர்=சேர்ந்து வாழும். பரவிநாடும்= தன்னைப்போற்றி விரும்பும். குரவன்= குரு. குலாவுவது= அன்புபாராட்டுவது.

பொழிப்புரை : திருப்பாற்கடல் பெற்றெடுத்த திருமகளைஒத்தமகளிர் தம்முள் சேர்ந்து வாழும் குன்றக்குடியில், குரவமலர்மாலை யணிந்த குகன், தன்னைப்போற்றி விரும்பிவாழும் மெய்யன்பர்களுக்கு அருள்புரியும் குருவாகி அன்புபாராட்டுவது உண்மையேயாகும். (80)

ஊசல்

எண்சீர் ஆசிரியவிருத்தம்

உண்மையொடு தவம்இரண்டும் தூண்க ளாக
உரையிறந்த நாதாந்தம் விட்ட மாக
வண்மைமிகும் நான்மறையும் கயிற தாக
வழுத்தரிய பிரணவமே பலகை யாகக்
கண்மையுறும் இருமடவார் அருகில் மேவக்
கதிர்வேல்கொண்(டு) ஆறெழுத்தும் களிப்புற்(று) ஆட்ட
அண்மைநின்று பலர்போற்ற ஆடீர் ஊசல்
அணிகொள்குன்றக் குடிக்குகவேள் ஆடீர் ஊசல்.

குறிப்புரை : ஊசல்= ஊஞ்சல். உரையிறந்த= சொல்லுதற்கரிய நாதாந்தம்= திருவருள், கண்மையுறும்= மைதீட்டப்பெற்ற கண்கள். இருமடவார்= வள்ளி தெய்வானை. ஆறெழுத்து= சரவணபவ. அண்மை= அருகில்.

பொழிப்புரை : ஊஞ்சலுக்கு; உண்மை தவம் ஆகியஇரண்டும் தூண்களாகவும், சொல்லுதற்கரிய திருவருள் விட்டமாக, வளம்மிக்க நான்குமறைகளும் கயிறுகளாக, போற்றுதற்கரிய ஓங்காரமே பலகையாக, மைஎழுதிய கண்களுடைய வள்ளி தெய்வானை இருவரும் இருபுறமும் இருக்க, ஒளிரும் வேல்ஏந்தி,ஆறெழுத்துகளும் களிப்புடன் ஊஞ்சலை ஆட்ட, அருகில்பலர்நின்று போற்ற ஊஞ்சலாடுக.அனைவரும்விரும்ப அழகிய குன்றக்குடியில் எழுந்தருளியுள்ளவனே ஊஞ்சலாடுக. (80)

எண்சீர்ச் சந்தக்கவி

தான தத்ததன தந்தத் தனத்ததனனா

ஊசல் ஒத்தலையும் நெஞ்சைப் பிடித்துன்அருளால்
ஒவி யச்சுடரின் உன்பொற் பதத்தினிடையே
நாசம் அற்றுவளர் இன்பக் களிப்பின்மிகையால்
நான்நி றுத்திடுவ(து) என்(று)இக்கணத்தில் மொழிவாய்

ஈச னுக்குமக என்(று)உற்(று) இமைப்பி லவர்கோன்
ஈனும் உத்தமனு டன்சிற் சிலர்க்குமனநோய்
ஆச ளித்தவரை வென்றிட் டசத்தியுடனே
ஆண்மை முற்றவளர் குன்றக் குடிக்குமரனே.

குறிப்புரை : ஓவியச் சுடரில்= ஓவியமாகத் தீட்டப்பெற்ற சுடர்போல். (காற்றிலும் அசைவின்மை குறித்தார்.) நாசம்= அழிவு. உற்று= தோன்றி. இமைப்பிலவர் கோன்= தேவர்க்கரசன் - தேவேந்திரன். ஈனும் உத்தமன்= பெற்ற சயந்தன். மனநோய் ஆசு= மனநோயாகிய குற்றம். அளித்தவர்= தந்த அசுரர். சத்தி= வேல்.

பொழிப்புரை : சிவபிரானுக்கு மகனாகத்தோன்றி, தேவேந்திரன் மகனாகிய சயந்தனாகிய உத்தமனுடன் மேலும் சிலர்க்கு மனநோயாகிய குற்றம்தந்த அசுரர்களை வென்ற வேலுடன், குன்றக்குடியில்எழுந்தருளியுள்ள குமரனே ! ஊசலைபோல் அலையும் நெஞ்சினை உன்அருளால் கட்டுப்படுத்தி, சிறிதும்அசைவற்ற ஓவியத்தில் தீட்டப்பெற சுடர்போல் உனது அழகிய திருவடிகளில், அழிவற்று வளரும் மிகுந்த இன்பக்களிப்புடன் நான் நிறுத்துவது எந்நாளில் என்பதை இந்நொடியிலேயே கூறியருள்க.

இலக்கணக்குறிப்பு : இச்செய்யுளின் முதலடியில் இரு உவமையணி அமைந்துள்ளன. (81)

வருகை

பன்னிருசீர், (சோலை வளம்)

குடிலில் தினையைக் கிம்புரியால்
குறவர் மகளிர் சுணங்குமுலை
குலுங்கத் துவைக்கும் ஒலிகேட்டுக்
குரங்கின் இனங்கள் மழைமேகத்(து)
இடிஎன்(று) அலமந்(து) உடுவிரவும்
எண்ணில் பசுங்காய்த் தலைப்பூகத்(து)
ஏறி விரியும் மலர்ப்பாளை
இடத்தில் பதுங்கிக் கிடந்(து)அதைவிட்டு
அடியிற் பழுத்து வெடித்தகனி
ஆரும் பலவிற் பாய்ந்துசுளை
அனைத்தும் சிதறப் பெருந்தவர்தாம்
ஆவென்(று) இருவாய் அருந்திஅருட்
கொடியைப் புகழும் வளமைபுணர்
குன்றக் குடிவேள் வருகவே
குமர குருஎன்(று) உல(கு)இயம்பும்
குறிஞ்சிக் கிழவன் வருகவே.

குறிப்புரை : கிம்புரி= யானைத்தந்தம். துவைக்கும்= தீட்டும். அலமந்து=

அஞ்சி. உடுவிரவும்= விண்மீன்களொடு கலந்து. பூகம்= பாக்குமரம். பலவின் அடியில் பழுத்து வெடித்தகனி ஆரும். ஆரும்= மிகுதியாகத் தின்னும். ஆவென்று= வாய்பிளந்து. அருட்கொடி= திருவருள். குறிஞ்சிக்கிழவன்= மலைகளுக்கு உரிமையுடையவன் - முருகன்.

பொழிப்புரை : தினைப்புனத்துக் குடிசைகளில் குறத்தியர் யானைத்தந்தத்தால் தினையைத் தமது சுணங்குபூத்த முலைகள் குலுங்கத் தீட்டும் ஒலியைக் குரங்குக்கூட்டம் மழைமேகத்து இடி என்று அஞ்சி, அளவற்ற வளமான காய்களுடன் வானத்து விண்மீன்களுடன் கலந்துள்ள பாக்குமரத்தின் விரிந்த பாளைகளிடையே பதுங்கிக்கிடந்து, பின்னர் இறங்கி, தூரில் பழுத்து வெடித்த பலாக்கனிகளைத் தின்னும். பின்னர் பலாமரத்தில் ஏறிப்பலாச்சுளைகளைச் சிதறடிக்க, அவற்றைத் தம்வாய்பிளந்து பெருந்தவத்தோர் இரு கவளம்மட்டும் உண்டு, பசிநேரத்தில் பலாச்சுளை தந்த திருவருளைப் போற்றிப்புகழ்வர். இத்தகுவளமைசால் குன்றக்குடியில் விரும்பத்தக்கவனாய் எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முகநாதா வருக ! குமரகுரு என்று உலகு போற்றும் மலைகளுக்கெல்லாம் உரிமையுடையவனே வருக !

விளக்கம் : தவத்தோர் இருவாய் உண்டதன்நோக்கம் தவத்தில் உடனே ஈடுபடவேண்டும் என்பதே, " மீதூண் விரும்பேல் " (ஆத்தி சூடி. 90.) " சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் " (திருக்குறள். 412) என்பன எண்ணுக. (83)

தன்னிலை கூறல்

பதினான்குசீர் ஆசிரியவிருத்தம்

கிழவன் உருவம் கொண்டு மறமக ளிடத்துறும்
கிருபாக ரக்கொண்டலைக்
கிள்ளையம் கவிபுனையும் வள்ளலைப் பிரமனது
கெருவநோய் அறஇடித்த
கழகப் பெருந்தலைவன் ஆனகுரு நாதனைக்
கரியமாற்(கு) ஆழி தந்த
கைஆ(று)இ ரண்டுடைய கடவுளைச் சிவபிரான்
காதிடத்(து) ஒருசொல் ஓதும்
மழலையங் கனிவாய்கள் ஆறு)உடைய முருகோனை
மலயமா முனிவன் நெஞ்ச
மலரிடத்(து) அநுதினம் நடம்புரியும் இருசரண
வாரிசக் குகனை வண்டு
குழலிசை முழக்கவளர் குன்றக் குடிக்குள்வளர்
கொற்றவே லனைவிரும்பிக்
கும்பிட்டு நாடித் துதித்(து)உருகும் அடியவர்

குழாத்தினுக்கு) அடிமை நானே.

குறிப்புரை : மறமகள்= குறவர் குடியினளாகிய வள்ளிநாயகி. கிருபாகரக் கொண்டல்= கருணையின் இருப்பிடமான மழைமேகம். கிள்ளை= கிளிஉருவில் இருந்த அருணகிரியார். கழகம்= தமிழ்ச்சங்கம். கை ஆறிரண்டு உடைய கடவுள்= பன்னிருகைகளுடைய சிவபிரான். ஒருசொல்= பிரணவம். சரண வாரிசம்= திருவடித்தாமரை.

பொழிப்புரை : கிழவன் உருவுடன் வள்ளிநாயகியிடம் சென்ற கருணையின் இருப்பிடமான மழைமேகத்தை, கிளிவடிவில் இருந்த அருணகிரியாரின் பாடல்களைச் சூடிக்கொண்ட வள்ளலை, நான்முகனது செருக்கொழித்து, தமிழ்ச்சங்கப் பெருந்தலைவனான குருநாதனை, கரியநிறத்துத் திருமாலுக்குச் சக்கரப்படைதந்த சிவனாகவிளங்கும் பன்னிருகைப் பெருமானை, சிவனின்செவியில் பிரணவப்பொருள் உபதேசித்த கனிந்தமழலை மொழிபேசும் ஆறுதிருவாய்கள் கொண்டமுருகனை, அகத்திய முனிவரின் மனத்தாமரையில் நாடோறும் திருநடம்புரியும் இருதாமரைத் திருவடியுடைய குகனை, வண்டுகளின் குழலிசைவளரும் குன்றக்குடியில் வளரும் வெற்றிவேலனை விரும்பிக் கும்பிட்டு, விருப்புடன் துதித்து, மனம்உருகும் அடியார் கூட்டத்திற்கு நான் அடிமை.

விளக்கம் : நான்முகனைக் குட்டியதும், சிவனுக்கு உபதேசித்ததும் - " சிட்டித் தொழிலதனைச் செய்வது எங்ஙன் என்றுமுனம் குட்டிச் சிறை இருத்தும் கோமானே - மட்டவிழும், பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப முன்னம் பிரமம் மொழிந்தோனே "(கந்தர்கலிவெ .கண். 92-93) கழகப்பெருந்தலைவன் - " சங்கத்தமிழின் தலைமைப்புலவா " (முத்துக்குமா. பிள்ளைத் தால். 6 - 8 மகுடம்) (84)

நேரிசை வெண்பா

யான்என(து)என்(று) ஓதும் இரண்டும்போய் யாவையும்
தான்எனக் காண்போர்க்கும் தவ(று)உண்டோ - மீன்எனக்கண்
கொண்டார்கள் ஆடல்மிகும் குன்றக் குடியினிற்கும்
தண்டாயு தக்குருநா தா.

குறிப்புரை : யான் எனது= அகப்பற்று, புறப்பற்று. தான்= நீயே.

பொழிப்புரை : மீனாகிய கண்கள்கொண்டமகளிரின் ஆடல்மிக்க குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானே ! அகப்பற்றும் புறப்பற்றும் ஆகிய இரண்டையும் விட்டு, எல்லாப்பொருள்களும், அவற்றுக்கு உரியவனும் நீயே என்று வாழ்பவர்க்குத் தவறுநேர்வதில்லை.

விளக்கம் : குன்றக்குடிப்பெருமான் ஆறுமுகன். இவனே தண்டாயுதனும் ஆவானாதலின் தண்டாயுதக் குருநாதா என்றார். (85)

கட்டளைக்கலித்துறை

தாதாரும் பூம்பொழில் குன்றக் குடியில் சரவணன்தன்
பாதார விந்தத்தை நம்பாத மூடரைப் பாடுகின்ற
தீதாளர் தம்மையும் ஓர்பொருளாகச் சிறிதும்எண்ணி
வாதாட லாகுங்கொ லோகவு மாரத்து மாதவரே,

குறிப்புரை : தாது= தேன்.கவுமாரத்து= கவுமார சமயத்து.

பொழிப்புரை : தேன்பொருந்திய அழகிய சோலைகளுடைய குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப்பெருமானின் திருவடித்தாமரைகளை நம்பா மூடரைப் பாடும் கொடியவரையும் ஒருபொருளாக எண்ணி முருகசமயத்து மாதவர் வாதாட வேண்டுமா ? தேவையில்லை. (86)

கலிநிலைத் துறை

மாதவம் செயநல்ல துற(வு)உற்றும் நடம்ஆடு மயில்போல்வரும்
சீதசந்திர வதன மடவார்த மைச்சிந்தை செய்வேனைஆள்
வேதமந் திரபுனித ஆகமவி னோதத்து மேலோர்குலம்
கோதறுங் கிளியொடு துதிக்கின்ற குன்றக் குடித்தெய்வமே.

குறிப்புரை : சீத சந்திர வதனம்= குளிர்ந்த நிலவுபோன்ற முகம். விநோதம்= மகத்துவம்.

பொழிப்புரை : குற்றமற்ற கிளியான அருணகிரியார் பாடல்கள், வேதமந்திரம், புனிதமான ஆகமம் இவற்றைஓதி மகத்துவம் வாய்ந்த மேலோர்குலத்தவரும் துதிக்கின்ற குன்றக்குடித்தெய்வமே ! மாதவம் செய்யும்பொருட்டு நல்ல துறவியாகியும், நடனமாடும் மயில்போல் வருகின்ற குளிர்ந்த நிலவுபோன்ற முகமுடைய மகளிரின் இன்பம்விழையும் அடியேனை ஆண்டருள்க.

விளக்கம் : குன்றக்குடிப் பெருமானை அருணகிரியார் ஏழுதிருப்புகழில் போற்றியுள்ளார். (87)

கட்டளைக்கலிப்பா

தெய்வ மங்கையர் ஆடலும்பாடலும்
சேர்ந்த குன்றக் குடிக்கோவிற் சண்முகன்
ஐவ கைத்தொழில் செய்வோர்க்கும் நாயகன்
ஆகும் என்ப(து) அறியாத மாந்தரே
பெய்வ ளைக்கரத் தார்தமக்(கு) ஆட்படும்
பித்தராகிப் பிறப்(பு)இறப்பு என்பதால்
நைவர் என்று பெரியோர்கள் கூறிட
நாம்அ றிந்தனம் நாட்டிலுள் லோர்களே.

குறிப்புரை : ஐவகைத்தொழில்= படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல். இவைகளைச் செய்வோர் முறையே நான்முகன்,

திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன் ஆகியோர்.

பொழிப்புரை : நாட்டவரே ! தேவருலக மகளிரின் ஆடல்பாடலுடைய குன்றக்குடிக்கோயிலில் எழுந்தருளியுள்ள அருள்தருசண்முகநாதப்பெருமானே ஐந்தொழில்புரியும் ஐந்துகடவுளர்க்கும் தலைவன் என்பதை அறியாதவர்களே, வளையலணிந்த விலைமகளிர்க்கு அடிமையாகிப் பித்தராய்ப் பிறப்புகளிலும் இறப்புகளிலும் துன்புறுவர் என்று பெரியோர் கூறக் கேட்டறிந்துளோம்.(88)

சம்பிரதம்

அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

ஓர்கரத்தில் டெழுகடலை அடக்குவேன் இரதம்உண்பேன்
உயர்ந்த நாகத்
தார்களிப்புற்(று) அணிகுவேன் இவையெல்லாம் வித்தைஎன்று
தரணி சொன்னால்
கூர்கதிக்கும் தனிவேல்கைப் பெருமானை இணையில்குன்றக்
குடியில் கண்டு
சூர்களத்தில் படப்பொருத விளையாட்டைத் தமிழ்க்கவியால்
துதிசெய் வேனே.

குறிப்புரை : எழுகடலை= ஏழு கடல்களையும் / ஏழு கடலையையும். இரதம்= தேர் / சுவையானஉணவு. நாகத்தார்= நாகமாகியமாலை / ஆடையை ஒழுங்காக. வித்தை= தந்திரம் சூர்= சூரபத்மன்.

பொழிப்புரை : ஏழுகடல்களையும் என்னொருகையில் அடக்குவேன் / ஏழு கடலைகளையும் என்னொருகையில் அடக்குவேன்; பெரிய தேரினை உண்டுவிடுவேன் / மிகச்சுவையான உணவை உண்பேன்; நல்லபாம்பாகிய மாலையைக் களிப்புடன் அணிவேன் / நல்லஆடையை ஒழுங்காக உடுத்துவேன். இவற்றைஎல்லாம் தந்திரம் என்றுசொன்னால், கூர்மைமிக்க வேலினை ஏந்திய முருகனை ஒப்பற்ற குன்றக்குடியில் கண்டு, அவன் சூரபத்மனுடன் போரிட்டதை விளையாட்டாகத் தமிழ்க் கவிதையாகச் சொல்லித் துதிப்பேன். (89)

அறுசீர் ஆசிரியவிருத்தம்

செய்ய பூமகள் மருவுகுன் றக்குடிச் சிவகுரு நாதன்தான்
வெய்ய சூர்முதல் தடிந்தில னாம்எனில் விளங்குமுத் தொழில்எங்கே
ஐய ராம்அவர் வாழ்க்கைஎங் கேமறை அந்தணர் மகம்எங்கே
மெய்ய தாம்என அவரவர் விரும்பும்நூல் விதிகள்எங் கேபோமே.

குறிப்புரை : செய்ய பூமகள்= செந்தாமரை மலரில் இருக்கும் திருமகள். ஐயராம் அவர்= முத்தொழில் தலைவர்களாகிய அம்மூவர். மகம்= வேள்வி. மெய்யதாம் என= ஞானம் கூறுவனவாக.

பொழிப்புரை : செந்தாமரைமலரில் வீற்றிருக்கும் திருமகள் வாழும் குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள சிவகுருநாதனாம் அருள்தரு சண்முகநாதப் பெருமான், கொடிய சூரபத்மனைத் தடிந்திராவிட்டால் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் இல்லை; இவற்றைப் புரியும் தலைவர்களாகிய அயன், அரி, அரன் இல்லை; மறை, அந்தணர், வேள்வி இல்லை; ஞானம் கூறுவனவாக அவர்கள் சொல்லும் நூல்களும், அவைகூறும் விதிமுறைகளும் இல்லை. (90)

கலிவிருத்தம்

போம்ம தாசலப் புங்கவ பின்வரு
கோம ளாகரக் குன்றக் குடிக்குகன்
தாம மாலையும் தண்டமிழ் மாலையும்
காம நோயைக் கவலையை நீக்குமே.

குறிப்புரை : மதசலம்போம்= மதநீர் வழிந்தோடும். புங்கவன்= விநாயகர். கோமளாகம்= இளமையழகு. தாமமாலை= பூமாலை,

பொழிப்புரை : மதநீர் வழிந்தோடும் விநாயனுக்கு இளவலாய் என்றும் இளமையும் அழகும் கொண்ட குன்றக்குடிக் குகனின் மலர்மாலையும் அவனைப் போற்றும் தமிழ்க்கவிதை மாலையும் காமநோயையும் மனக்கவலையையும் நீக்கும். (91)

கொச்சகக் கலிப்பா

நீக்கரிதாம் இருவினையும் நீறுபடப் பன்னீரின்
ஆக்கம்மிகும் பச்சிலையில் அமைந்தவெண்ணீ(று) அளித்தருள்வாய்
சேக்கனகக் கிரிநாணத் திகழ்குன்றக் குடிக்கிரிமேல்
ஊக்கமிகும் தனிவேல்கொண்(டு) ஒளிர்குமரப் பெருமானே.

குறிப்புரை : இருவினை= புண்ணிய, பாவச்செயல்களின் பயன். ஆக்கம்= உயர்வு. சே= உயர்வு. ஊக்கம்= வலிமை

பொழிப்புரை : உயர்ந்த பொன்மலையும் நாணுமாறு குன்றக்குடியில் விளங்கும் மலைமேல், வலிமைமிக்க ஒப்பற்ற வேலேந்தி ஒளிரும் அருள்தரு சண்முகநாதப்பெருமானே ! நீக்குதற்கரிய இருவினைகளுகளும் நீறாக நீ பன்னீரின் உயர்வுபொருந்திய இலையில் அமைந்த திருநீறு அளித்தருள்க.

விளக்கம் : இருவினை - " இருள்சேர் இருவினை " (திருக்குறள். 5) .

வேனிற்காலம்

எண்சீர்க் கழிநெடில்

பெருகுதென்றல் தேரின்மதன் உலவும் காலம்
பிறைக்கனல்மிக்(கு) ஒளிர்காலம் பிறங்கும் பொன்ஊர்த்
திருநதியில் தீம்புனலும் வறக்கும் காலம்

சீதரன்போய்ப் பாற்கடலில் சேரும் காலம்
குருமணிக்கோ புரமருவு தெய்வக் கோவில்
குலவுகுன்றக் குடித்தலத்துக் கொற்ற வேந்தாம்
முருகனது கடம்(பு)அணிதோள் புணரா(து) இந்த
மொய்குழலாள் வாடுவது முறைமைத் தன்றே.

குறிப்புரை : பொன் ஊர்= தேவருலகம். திருநதி= கங்கை. சீதரன்= திருமால். குரு= ஒளி.

பொழிப்புரை : தொடர்ந்து வீசும் தென்றலாகிய தேரில்மன்மதன் உலாவுகிற காலம்; பிறையாகிய நெருப்பு மிகவும் சுடும்காலம்; தேவருலகில் விளங்கும் கங்கையும் நீர்வற்றும் காலம்; வெப்பம்காரணமாகத் திருமால் பாற்கடலை அடையும் காலம்; ஒளியும் அழகும்வாய்ந்த கோபுரம் பெற்ற தெய்வக்கோவில் விளங்கும் குன்றக்குடித்தலத்து வெற்றிவேந்தனாகிய அருள்தரு சண்முகநாதப்பெருமானின் கடப்பமாலையணிந்த தோள்தோயாமல் அடர்ந்த கூந்தலுடைய இவள்வாடுவது முறையன்று. (93)

நேரிசை வெண்பா

மைத்தடங்கண் நீர்பெருக்கி வால்வளையோ(டு) ஆரமெறிந்(து)
உய்த்தவற்றை எல்லாம் உதவுமுந்நீர் - வைத்தலைவேற்
கோவாகிக் குன்றக் குடித்தலத்தில் வாழ்குகனை
மேவாத மங்கையொப்பா மே.

பதவுரை : குகனைக்கூடாத மங்கைக்கும் கடலுக்கும் சிலேடையாய் அமைந்தது இச்செய்யுள்.

கடல் : மைத் தடங்கண் நீர் பெருக்கி= மேகத்தால் அகன்ற உலகில் மழைநீர் பெருகச்செய்து. வால்வளையோடு= வெண்மையான சங்குகளுடன். ஆரம் எறிந்து= முத்துகளைக் கரையில் எறிந்து. உய்த்து அவற்றைஎல்லாம் உதவும் முந்நீர்= அவற்றைஎல்லாம் கொடுத்து உதவும் கடல்

மங்கை : மைத்தடங்கண் நீர்பெருக்கி= மைதீட்டப்பெற்ற கண்களில் கண்ணீர்பெருக்கி. வால்வளையோடு= வெண்மையான சங்குவளையலுடன். ஆரம் எறிந்து= முத்துமாலையை வீசிஎறிந்து

முடிப்பு : வைத்தலைவேல் கோவாகி= கூரிய நுனியுடைய வேலேந்திய தலைவனாகி. குன்றக்குடித் . . . .ஒப்பாமே= குன்றக்குடித் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முகநாதப்பெருமானைக் கூடாத மங்கையை ஒக்கும்.

இலக்கணக்குறிப்பு : இச்செய்யுள் செம்மொழிச் சிலேடையணி. (94)

பனிக்காலம் : தலைவி கூற்று

கட்டளைக்கலித்துறை

மேதகு சீர்கொண்ட நந்திசொல் நூலும் வியந்துபெரும்

காதலுற் றோர்க்(கு)இது நற்கால மென்று கழறப்பெற்ற
சீதளம் மீறும் பனிக்காலம் தோன்றியும் சேர்ந்திலனே
மாதவர் போற்றிடும் குன்றக் குடியில் வாழ்குகனே.

குறிப்புரை : கழறப்பெற்ற= சொல்லப்பெற்ற. சீதளம் மீறும்= குளிர்ச்சி மிக்க.

பொழிப்புரை : மேன்மைபொருந்திய நந்தி என்பவர் இயற்றிய காமநூலும் வியந்து, பெருங்காதலர்க்கு இக்காலம் நல்லகாலமாகும் என்று கூறியுள்ள குளிர்ச்சிமிக்க பனிக்காலம் தோன்றியும், மாதவர் போற்றிடு குன்றக்குடியில் வாழ்கிற குகப்பெருமான் என்பால் வந்துசேரவில்லையே(95)

அறுசீர் விருத்தம்

கந்தனே வடிவே லேந்தும் கடவுளே உமையாள் ஈன்ற
மைந்தனே எனைஆட் கொண்ட வரதனே மலரும் நீபக்
கொந்தனே இணைதீர் குன்றக் குடித்தலத்(து) அமரும் கோவே
மந்தனே முதலி னோரால் வருந்திடா(து) அருள்செய் வாயே.

குறிப்புரை : நீபக் கொந்து= கடம்பமலர்க்கொத்து., மந்தன்= சனி.

பொழிப்புரை : கந்தா ! கூரிய வேலேந்தும் கடவுளே ! உமையவளுக்கு மகனே ! என்னை அடிமைகொண்ட மேலானவனே ! மலர்கிற கடம்பமலர்க் கொத்துகளை அணிந்தவனே ! ஒப்பற்ற குன்றக்குடித் தலத்தில் எழுந்தருளியுள்ள பேரரசனே ! சனி முதலிய கிரகங்களால் வருந்தாதிருக்க எனக்கு அருள்வாயாக. (96)

ஊர்

கலிநிலைத்துறை

செய்யவித் துருமமலை நிகர்வடிவம் உடையவன் செவ்வேல்கொளும்
கையவித் துவகுல திவாகரன் கதிஉதவு காங்கேயன்ஊர்
பொய்அவித்(து) உயர்(வு)உதவு குன்றக் குடிக்குள் பொருப்(பு)ஆதியாம்
நெய்அவித் துகள்தீர் மகத்தோர்கள் வருமலை நிலத்(து)ஊர்களே.

குறிப்புரை : செய்ய வித்துருமமலை= சிவந்த பவளமலை. வித்துவகுல திவாகரன்= புலவர்குலத்துக்கெல்லாம் ஞாயிறு. பொய்= அறியாமை குன்றக்குடிக்குள் பொருப்பு ஆதியாம்= குன்றக்குடியில் உள்ள மலைமுதலான நெய்அவி= நெய்சொறிந்து செய்யும் வேள்வி. துகள்= குற்றம். மலைநிலம்= குறிஞ்சிநிலம்.

பொழிப்புரை : சிவந்த பவளமலைபோன்ற வடிவனும், சிறந்த வேலேந்திய கையனும்,புலவர்குலத்துக்கெல்லாம் ஞாயிறும். நற்கதி உதவுகிறவனுமாகியவனது ஊர், அறியாமையை ஒழித்து ஞானம்உதவும் குன்றக்குடியில் உள்ள மலைமுதலாக, நெய்சொரிந்து வேள்விசெய்து குற்றம் தீர்க்கும் புனிதர்கள் வாழும் குறிஞ்சிநிலவூர்கள் ஆகும். (97)

கார்காலம்

கொச்சகக் கலிப்பா

ஊர்மருவு நிலம்குளிர உறைதூவி உரும்ஒலியைக்
கார்மருவு காலம்வந்தும் கலந்தணைய வந்திலனே
கூர்மருவு வேல்ஏந்திக் குலவுகுன்றக் குடிக்கிரிமேல்
சீர்மருவு கருணைபொழி செழுமுகில்போன்(று) இருந்தோனே.

குறிப்புரை : உறை= மழைத்துளி. உரும்= இடி.

பொழிப்புரை : மழைத்துளியைத் தூவி ஊர்எங்கும் குளிரச்செய்து, இடிஒலியை எழுப்பிக் கார்காலம் வந்தபோதும், கூர்மையான வேல்ஏந்திக் குன்றக்குடி மலைமேல் சிறப்புப்பொருந்திய கருணபொழியும் செழுமையான மேகம்போல் இருக்கும் பெருமான் என்னக்கூடி அணைக்க வரவில்லையே ! என்செய்வேன் !

எழுசீர் ஆசிரியவிருத்தம்

இருவினைப் பிணிகெட்(டு) அருந்தவம் புரியார்
இலக்(கு)எனத் துணிந்்(து)அவர் மனம்போல்
கருநிறம் பொருந்தும் கவிசில பிதற்றிக்
கடையரில் கடையனாத் திரியாது
அருமறைச் சிரத்தில் கொடிபுரி திருத்தாள்
அனையசெந் தமிழ்க்கவி முழங்கும்
குருஎனத் தடுத்தாண்(டு) அருளுவோன் குன்றக்
குடித்தலத்(து) அமர்ஒரு கோவே.

குறிப்புரை : இருவினைப்பிணி= பாவபுண்ணியச் செயல்களால்வரும் பிறவி நோய். கருநிறம்= அறியாமை. மறைச் சிரம்= உபநிடதம்.கொடிபுரி= கொடிக்கூத்து - குமரனின் ஆடலைக்கொடி என்றும் குடைஎன்றும்கூறுவர்.

பொழிப்புரை : பாவபுண்ணியத்தால் வரும் பிறவிநோய் கெட, அரியதவம்புரியாதவர்களைக் குறியாகக்கொண்டு, அறியாமைபொருந்திய அவர்மனம்போல்விளங்கும் கவிதைகள் சிலபிதற்றிக் கடையனிற் கடையனாக நான் திரியாமல், உபநிடதத்தில் கொடித் திருக்கூத்தியற்றும் உன் திருவடிஒத்த ஞானச்செந்தமிழ் முழங்கும் குருவாகவந்து என்னைத் தடுத்தாண்டருள்வோன் குன்றக்குடித் தலத்தில் எழுந்தருளிய ஒப்பற்ற தலைவனாவான்.

விளக்கம் : கொடிக்கூத்து அல்லது குடைக்கூத்து : தன்னொடுபொருத அசுரர் பின்வாங்கித் தம்ஆயுதங்களைக் கீழேபோட்டபோது தன்குடையைச் சாய்த்து அதனை ஒருமுகவெழினியாகக்கொண்டு குமரன்ஆடியகூத்து

நேரிசை ஆசிரியப்பா

அமரர்தம் கூட்டத்து அதிபனும் உணராச்
சமரச போதத் தன்மை ஆதிய
நலமெலாம் கொடுத்து நானிலத்(து) ஆழி
வலன்உறு புகழும்வானகத்(து) அழியாச்
செக்கர் போலும் சிவபிரான் சிறப்பும்
மிக்கவாக் களித்து விளங்கும்ஓர் மருந்து
கனம்தவழ் சோலைக் கவின்உற உடீஇ
நனந்தலை இணைதீர் நாகம் ஒன்று
கொடுதிகழ் குன்றக் குடியில் கொற்றவன்
தொடுகுறி உணர்த்தச் சுகாசுகம் கடவா
வண்டர்தம் சேர்க்கையில் மருவாத்
தொண்டர்தம் பாதம் துலக்கும்நன் நீரே.

கூட்டுமுறை : கனம்தவழ் சோலை . . . நீரே, மிக்கவாக்கு அளித்து, அமரர்தம்கூட்டத்து..... நலமெலாம் கொடுத்து, நானிலத்து ஆழி ....சிறப்பும்விளங்கும் ஓர்மருந்து.

குறிப்புரை : கனம்= மேகம். உடீஇ= சூழ. நனந்தலை= அகன்ற உலகில். இணை தீர்= ஒப்பற்ற. நாகம்= மலை. தொடுகுறி உணர்த்த= மனத்தைத் தொட்டு உணர்த்த. சுகாசுகம்= இன்பதுன்பம்.. கடவா= நீங்காத. வண்டர்= தீயவர். பாதம் துலக்கும் நன்நீர்= திருவடித் தூய்மைசெய்த நீர் அதிபன்= தலைவன் - தேவேந்திரன். சமரச போதத் தன்மை= உயிர்க்குலத்தில் வேறுபாடின்மை. நானிலம்= உலகு. ஆழி வலனுறுபுகழ்=சக்கரப்படையை வலத்து ஏந்திய திருமாலின் புகழ். அழியா= என்றும் நிலைத்த. சிவபிரான் சிறப்பு= சிவபிரான் வழங்கும் அத்துவிதக் கலப்பு.

பொழிப்புரை : மேகக்கூட்டம் தவழும் சோலைகளைத் தன்னைச்சூழ உடுத்து, அகன்ற இடமுடைய உலகில்ஒப்பற்ற மலையொன்றைக் கொண்டு விளங்கும்குன்றக்குடியில் வெற்றிக்குஉரிய அருள்தருசண்முகநாதப்பெருமான், அடியவர் மனத்தைதொட்டு உணர்த்த, அதனால் இன்பம் துன்பம் நீங்காத தீயவர்களுடன் சேராதவர்களாகிய அந்தஅடியவர்களின்திருவடிகளைத்தூய்மை செய்து கழுவிய தண்ணீர்; அதன் பயன்கொள்வோர்க்கு மிக்க நாநலம் தந்து, தேவர்குழுவின் தலைவனாகிய தேவேந்திரனாலும் உணரவியலாததாகிய " உயிர்க்குலத்தில் வேறுபாடில்லை " என்ற ஞானம்கொடுத்து,சக்கரப்படையை வலக்கையில் ஏந்திய திருமாலாகும் மிக்கபுகழைத்தந்து, மேலான வீட்டுலகில் செவ்வான்போன்ற திருமேனியனான சிவபிரானுடன் இரண்டறக்கலந்து அழிவின்றி இருக்கச் செய்யும் ஒப்பற்ற மருந்தாகும்.

விளக்கம் : " தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே ". (ஔவையார்)

முற்றிற்று.

நூற்பயன் - நேரிசை வெண்பா.

குன்றக் குடிஊர்க் குமரன் கலம்பகத்தை
மன்றக் குடியான் மலயத்தான் - என்(று)அக்
குடிலை அடையாளம் கொண்டவர்கேட்(டு) ஈவார்
குடிலை அடையாக்கொ டை.

குறிப்புரை : மன்றக்குடியான்= அம்பலத்தில் குடிகொண்டவன் - தில்லைக் கூத்தப்பிரான். மலயத்தான்= பொதிகை அகத்தியர். குடிலை= பிரணவம். கேட்டு அடையாளம் கொண்டவர்= கேட்டறிந்தவர். குடிலை அடையாக் கொடை ஈவர்= உயிர்க்குக் குடிலாகிய உடம்பை - பிறவியை அடையாத கொடையை - வீடுபேற்றை அருள்வர்.

பொழிப்புரை : குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முகநாதப் பெருமானைப் போற்றும் இக்கலம்பகநூலினைப் படித்தால், அதனைப் பிரணவ உபதேசம்பெற்ற தில்லைக்கூத்தப்பிரான், பொதிகை அகத்தியர் ஆகியோர் கேட்டு, மீண்டும் பிறவாநிலையை வீடுபேற்றின்பத்தை, படித்தவர்க்குக் கொடுப்பர்.

திருச்சிற்றம்பலம்.

.